
# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்



## ஜனநாயகமும் பெண்களும்

Women and Media Collective
Established 1984

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

முதலாம் அரையாண்டு - 2013
ISSN 1391-958X

**கௌரவ ஆசிரியை**
சித்ரலேகா மௌனகுரு

**சரவை நோக்கு**
குகநிதி குகநேசன்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

**அட்டைப் படம்**
Nancy Price Earth Democracy Issue Committee
Earth Democracy California Tour
http://www.wilpfus.org/news/updates/earth-democracy-california-tour

**சஞ்சிகை வெளியீடு**
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு - 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045.˙.5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

# நாம் சொல்ல விரும்புவது...

சொல் சஞ்சிகையின் இந்த இதழ் அச்சுக்குப் போகும் தறுவாயில் முழு இலங்கையையுமே உலுக்கிய ஒரு சம்பவம் வெலிவேரியாவில் நிகழ்ந்தது. கொழும்பில் இருந்து ஒரு மணித்தியாலம் தூரமுள்ளது இக்கிராமம். கண்டி - கொழும்பு நெடுஞ்சாலையில் சற்றுத் தள்ளி உட்பக்கமாக அமைந்த சிறு கிராமமான வெலிவேரியாவில் நிலத்தடி நீர் ஏதோ காரணத்தால் மாசடைவதைத் தடுக்கும்படியும், சுத்தமான நீர் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறும் கோரி மக்கள் இம்மாதம் 1 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தண்ணீர் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்த மக்களுக்கு கிடைத்தது அவர்கள் எதிர்பாராத துப்பாக்கி வேட்டுக்கள். கூடி நின்று குழப்பம் விளைவித்தனர் எனக் கூறி மக்களைக் கலைப்பதற்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர். "குழப்பக்காரர்களை" கலைப்பதற்கு இராணுவம் எடுத்த நடவடிக்கையில் முதல் பலியாகியது பதினாறு வயது மாணவன் ஒருவனே.

மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தை இராணுவம் கொடூரமாக அடக்கிய இந்நிகழ்ச்சி இலங்கையில் மிகவும் சீர்குலைந்து வரும் ஜனநாயக விழுமியங்களின் அடையாளமாகப் பலரால் விமர்சிக்கப்படுகிறது. இத்தகையதொரு சூழ்நிலையில்தான் சொல்லின் இந்த இதழ் பெண்களும் ஜனநாயகமும் குறித்துப் பேசுகிறது. ஒரு நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஜனநாயக விழுமியங்களைக் கடைப்பிடிக்கும், ஜனநாயக விழுமியங்களை உருவாக்கும் பொறுப்பு பெண்களுக்கு உண்டு. இதற்கும் மேலாக பெண்கள் உரிமைகள், பெண்கள் வலுவடைதல், பெண்கள் முன்னேற்றம் முதலியவை ஜனநாயகக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் போதும், ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் போதுமே சாத்தியப்படும் விடயங்களாகும்.

ஜனநாயகம், சமூக நீதி ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்ததாகவே பெண்கள் உரிமைகளைப் பேணுதல் அமைகிறது. அதுவே மனித அபிவிருத்தியின் முக்கியமான அடையாளமாகவும் அமைகிறது. ஊடகம், கலாசாரம், கல்வி, சமயம் முதலிய பல்வேறு பகுதிகளிலும் இந்த ஜனநாயகத்தின் தத்துவங்கள் ஊடுருவ வேண்டும். அதற்கு அயராது, தோல்விகளைக் கண்டு துவளாது தொடர்ந்து உழைக்க வேண்டும் என்பதே இன்று நாம் சொல்ல விரும்புவது. ■

# சொல்

## விடுக்கும் அறைகூவல்!

பெண்களின் ஜனநாயக உரிமைகள் என்ற தொனிப் பொருளுடன் இம்முறை வெளியாகும் சொல்லின் அறைகூவல் இலங்கையின் முக்கியமான ஒரு அரசியற் தருணத்தில் எழுதப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டில் சொல் வெளிவரத் தொடங்கியதிலிருந்து ஜனநாயக விழுமியங்கள் பற்றியும் பெண்களின் ஜனநாயக உரிமைகள் பற்றியும் நாம் வலியுறுத்தி வந்துள்ளோம்.

இலங்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான சமாதான உடன்படிக்கை, போர் நிறுத்தம், போர் மீளத் தொடக்கம், உக்கிரமான இறுதிப் போர், விடுதலைப் புலிகளின் தோல்வி, போர் முடிவு, பேரளவிலான மக்களது இடப்பெயர்வு, மோசமான மனித உரிமை மீறல்கள், மெனிக்பாம் முகாம் வாழ்க்கை, மீள் குடியேற்றம், அபிவிருத்திச் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் பங்கு என இலங்கையில் இனத்துவப் பிணக்கின் முக்கியமான, மோசமான வன்முறைக் கட்டங்களுக்குச் சாட்சியமாக இருந்துள்ளது. கூட்டு மொத்தமாக கருத்துச் சுதந்திர முடக்கத்தை இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் சொல் கண்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கான கோரிக்கைகள் அதிகரிக்கும் அதேசமயம் அந்த விழுமியங்கள் நாட்டில் பலவீனமடைந்து கொண்டு போகும் முரண்பாடான நிலையொன்றையும் அவதானிக்கலாம்.
இவ்வாறான மேலும் பல சவால்கள் மத்தியில் எமது அறைகூவலை விடுக்கிறோம்.

1983 ஜுலை வன்செயல் நிகழ்ந்து முப்பதாண்டுகள் இம்மாதத்தில் முடிவடைகிறது. வடக்கிலும் கிழக்கிலும் போருக்குப் பின் மீள் குடியேற்றப்பட்ட அல்லது மீள் குடியேற்றப்படாத மக்களின் காணி, வாழ்வாதார உரிமைப் பிரச்சினைகள் தொடர்கின்றது. 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் மூலம் மாகாண சபைகளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை முடக்கும் எத்தனங்கள் நிகழ்கின்றன. வடமாகாண சபைத் தேர்தல் நடுநிலையாக நடக்குமா என்ற ஐயப்பாடு: பாராளுமன்றத் தெரிவுக்குழு பற்றிய சந்தேகங்கள், இலங்கையின் பன்மைத்துவ இனங்களுக்கும் சமூகங்களுக்கும், பண்பாடுகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் மதத் தீவிரவாதக் குழுக்களின் உருவாக்கம் போன்ற குழப்பமான சூழல் இலங்கையில் தற்போது நிலவுகின்றது.


சர்வதேச ரீதியாகவும் தொடரும் வன்முறை அரசியல் முடிவுக்கு வந்தபாடில்லை. எகிப்தில் பரந்துபட்ட மக்களின் பங்கு பற்றுதலுடன் கவிழ்க்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியின் பின் உருவாகிய தலைமைத்துவம் இராணுவச் சூழ்ச்சியால் கைப்பற்றப்பட்டுள்ளது. வன்முறையான அரசியல் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன.

இத்தகைய சூழலில் பெண்களின் குரல் ஜனநாயகத்தையும் உரிமைகளையும் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறது. பெண்கள் ஜனநாயகம், சமூக நீதி ஆகியவற்றின் உருவாக்கத்திலும் தொடர்ச்சியிலும் வலுவாகப் பங்கேற்றுள்ளமை உலகளாவிய ரீதியில் இது ஒரு பொதுப் பண்பாகும். குடிமக்கள் அல்லது ஒரு நாட்டின் பிரஜைகள் என்போரது நலன்களும் அவர்களது குரல்களும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். அவை பரிசீலிக்கப்பட வேண்டும். அவை சரியான முறையில் சட்டங்களிலும் ஆட்சி முறைகளிலும் இணைக்கப்பட வேண்டும். உலகின் சரிபாதி சனத்தொகையினரான பெண்களின் குரல் ஜனநாயக செயற்பாடுகளுக்குள் ஒலிக்க வேண்டும். சமத்துவம், பெண்கள் உரிமைகள் ஆகியவற்றை அரசு தனது பொதுக் கொள்கைகளுள்ளும் சட்டகங்களுக்குள்ளும் இணைத்தல் வேண்டும். அதேவேளை பெண்களது உரிமைகள், நலன்கள் ஆகியவை பற்றிய விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

மக்களின் அல்லது பெண்களின் அன்றாட வாழ்வுடன் இணைந்த அல்லது அதனைப் பாதிக்கின்ற விடயங்களில் அரசு வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்றுநாம் முன்வைக்கின்ற அறைகூவல் இதுவே. சம்பந்தப்பட்டோர் எதிர் கொள்வார்களா? ■

சித்ரலேகா மௌனகுரு





http://www.washingtonpost.com/business/economy/occupy-protests-november-2011/2011/11/19/gIQAPjopcN_gallery.html

# ஊடகத்திற்குள் ஜனநாயகம் : பெண்களின் வகிபங்கு யாது?

அனைவருக்குமான உரிமைகளுக்காகவும், அபிவிருத்திக்காகவும் போராடும் வேர்களை ஊடகவியல் தன்னகத்தே தாங்கி நிற்கின்றது என்றால் அது மிகையாகாது. நமது தொழிலின் அடிப்படையில் நாம் அனைவரும் ஒரு வழியில் அல்லது வேறு வழியில் ஜனநாயகத்திற்காகக் குரல் எழுப்புவோராகவே திகழ்கின்றோம். சமூகத்தில் ஜனநாயகக் கொள்கைகளை நிலைநாட்டுவது தொடர்பில் அடிக்கடி நாம் வலியுறுத்தி வருகின்றோம். நாம் உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடுகின்றோம். எனினும் எமது அன்றாட வாழ்க்கையில் நாம் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுகின்றோமா? குறிப்பாக உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்கு அப்பால் ஜனநாயகம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் புரிதல் எம்மிடம் எவ்வாறு காணப்படுகின்றது? பால்நிலை பரிமாணம், ஊடகங்களில் பெண்களின் வகிபங்கு, செய்தி அறிக்கையிடலில் பால்நிலை சமத்துவம் போன்றன தொடர்பில் எவ்வாறான புரிதல் காணப்படுகின்றது?

இவ்வாறான கேள்விகளுக்குப் பதிலளிப்பதன் மூலம், எம்மை நாமே விமர்சன ரீதியாக நோக்க வழியமைக்கும். ஆண்கள் பெண்கள் உள்ளிட்ட ஊடகவியலாளர்களும், ஊடகத்துறையும் இந்த முயற்சியில் பங்களிக்க வேண்டும். செய்தி அறையில் என்ன நடைபெறுகின்றது என்பது எமது செய்தி வெளிப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நாம் முற்போக்கானவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதில் பயனில்லை. எமது அன்றாடத் தொழிலில் ஒரே மாதிரியான கலாச்சாரத்தை எவ்வாறு முறியடிப்பது என்பதே ஊடகவியலாளர்கள் என்ற ரீதியில் நாம் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவாலாகும். இதனைச் சுலபமான விடயமாகக் கருத முடியாது. 21ஆம் நூற்றாண்டிலும் பெண்கள், ஆண்களை ஈர்க்கும் ஓர் போகப் பண்டமாக நோக்கும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. அண்மையில் ஐரோப்பாவில் உயர் தொழில்நுட்பக் கண்காட்சியொன்று நடத்தப்பட்டது. இந்த கண்காட்சியின் காட்சி கூடங்களில், பார்வையாளர்களை ஈர்க்கும் உத்தியாக அரைகுறை ஆடையணிந்த பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். இலங்கையின் பெண்கள் தொடர்பான அநேகமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அழகுக் கலை மற்றும் ஆடை வடிவமைப்பு போன்றன தொடர்பிலேயே ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. அநேகமான சஞ்சிகைகள் மற்றும் குறும் பத்திரிகைகளின் முன் அட்டைப் படத்தை பெண்களைக் கொண்டு அலங்கரித்துக் கொள்ளவே இன்னமும் அவற்றின் ஆசிரியர்கள் நாட்டம் காட்டுகின்றனர்.

அனைத்து கலாச்சாரங்களிலும் நிலவி வரும் மரபு ரீதியான நிலைப்பாடுகள், பக்கச்சார்பான கருதுகோள்கள், ஆழமான தப்பபிப்பிராயம் போன்றன ஊடகவியலாளர்களுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளன. ஊடகத்திற்குள் ஜனநாயகம் நிலவ வேண்டுமாயின் செய்தி அறைகளில் மரபு ரீதியான தவறுகளுக்கு எதிராக போராட வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது. ஏனெனில், மரபு ரீதியான தவறுகளை நாம் அப்படியே சகித்துக் கொண்டால் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பே கிடையாது. தவறுகள் மேலும் அதிகரிக்குமே தவிர, குறைவடையாது.

கடந்த 25 ஆண்டுகளில் ஊடகங்களில் பெண்களின் வகிபங்கு பாரியளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தற்போது அதிகளவான பெண்கள் ஊடகத்துறையைத் தமது தொழிற்துறையாகத் தெரிவு செய்து கொள்வதுடன், முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு பெண் செய்தி ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனினும், வருந்தத்தக்க வகையில் சமூகத்தின் பெண்களின் பங்கும் பாத்திரமும் தொடர்ந்தும் ஒரே விதமாக நோக்கப்படுகின்றன. சமூகத்தில் பெண்களுக்கான அங்கீகாரம் இதேவிதமாக நீடித்தால் பால்நிலைச் சமத்துவத்தை

**இலங்கை உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் ஊடகத்துறை தொடர்ந்தும் ஆணாதிக்கத்திற்கு கட்டுப்பட்ட நிலையிலேயேதான் இயங்கி வருகின்றது. குறிப்பாக முதன்மைப் பொறுப்புக்கள், பதவிகள் ஆண்களை மையப்படுத்தியே காணப்படுகின்றன. ஒரு சில முற்போக்கான நிறுவனங்களைத் தவிர ஏனைய அநேக செய்தி நிறுவனங்களில் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர் அல்லது ஓரங்கட்டப்படுகின்றனர்.**

எட்டுவதற்கு இன்னமும் 75 நீண்ட ஆண்டுகள் காத்திருக்க வேண்டியேற்படும் என அண்மைய உலகப் புள்ளி விரபத் தகவல் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.


பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளைத் தடுக்கும் நோக்கில் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக உலக அளவில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள நிலையில், பால்நிலைச் சமத்துவம் திருப்தியடையக் கூடிய வகையில் அமையவில்லை. பெண்களுக்கு அரசியல், தொழில்வாய்ப்பு, சமூக உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில்

சம சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், சட்டங்களினால் இந்தப் பாரபட்ச நிலைமை களையப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

உலகின் எல்லா நாடுகளிலும் சமத்துவத்திற்கான போராட்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பல்வேறு வகையிலான ஒடுக்குமுறைகளைத் தடுப்பதற்குப் பயிற்சி, செயன்முறைச் செயலமர்வு மற்றும் ஊடாடல்கள் போன்ற சில வழிகள் பின்பற்றப்படுகின்றன. இலங்கை உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் ஊடகத்துறை தொடர்ந்தும் ஆணாதிக்கத்திற்கு கட்டுப்பட்ட நிலையிலேயேதான் இயங்கி வருகின்றது. குறிப்பாக முதன்மைப் பொறுப்புக்கள், பதவிகள் ஆண்களை மையப்படுத்தியே காணப்படுகின்றன. ஒரு சில முற்போக்கான நிறுவனங்களைத் தவிர ஏனைய அநேக செய்தி நிறுவனங்களில் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர் அல்லது ஓரங்கட்டப்படுகின்றனர். செய்தியின் உள்ளடக்கம் மற்றும் சந்தர்ப்பங்கள் ஆகியவற்றில் பெண்களுக்கு உரிய பெறுமதி வழங்கப்படுவதில்லை.

ஊழியப் படையில் அதிகளவு பெண் ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய ரஷ்யா, சுவீடன் போன்ற நாடுகளில் கூட செய்தி அறிக்கையிடும் பணிகளில் பெண்களுக்குச் சம சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. 1995ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் உலக ஊடகக் கண்காணிப்புத் திட்டம் ஆய்வு ஒன்றை நடத்தி வருகின்றது. 2010ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆய்வில் உலகத் தொலைக்காட்சிகளில் 57 சதவீதமான செய்தி வாசிப்பாளர்கள் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், 29 சதவீதமான செய்திகளே பெண் செய்தியாளர்களினால் எழுதப்பட்டுள்ளன. மேலும் 32 சதவீதமான கடுமையான அல்லது அதிக பெறுமானமுடைய செய்திகளையே பெண் செய்தியாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர். சமூகப் பிரச்சினைகள், குடும்ப விவகாரம், வாழ்க்கை முறைமை, கலை போன்ற மென்மையான செய்திகளை 40 சதவீதமான பெண்கள் செய்தி அறிக்கையிடுகின்றனர்.

**ஊடகங்கள் சமூகத்தின் பிம்பமாகக் கருதப்படுகின்றன. அவ்வாறானால், பால்நிலைச் சமத்துவம் என்பது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்ற யதார்த்தம் சரியான முறையில் பிரதிபலிக்கப்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் சமநிலையாக நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.**



http://www.voices-of-the-world.org/politics-and-economy/democracy-and-the-media-go-hand-in-hand/
Photo : Armin Hanisch/Sxc.hu

இந்தப் புள்ளி விபரத் தரவுகள் ஓர் ஆரோக்கியமான மாற்றத்தைப் பதிவு செய்துள்ளது என்பதில் ஐயமில்லை. அதிகளவான பெண்கள் பயிற்சி பெற்று, ஊடகத்துறையில் இணைந்து கொள்கின்றனர் என்பதனை இந்தத் தரவுகள் புலப்படுத்துகின்றன. எனினும், தயாரிப்பாளர்கள், பிரதம ஆசிரியர்கள், நிறைவேற்று அதிகாரிகள், பிரசுரிப்பாளர்கள் போன்ற ஊடகத்துறையின் முக்கிய பதவிகளில் பெண்களின் எண்ணிக்கையளவானது அதிர்ச்சியூட்டும் வகையில் மிக சொற்பளவில் காணப்படுகின்றது. தனிப்பட்ட நாடுகளின் புள்ளி விபரத் தரவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

கனடாவில் 8 சதவீதமான பெண் பிரதம ஆசிரியர்களும், 12 சதவீதமான பெண் பிரசுரிப்பாளர்களும் கடமையாற்றி வருவதாக கனேடிய பத்திரிகை ஒன்றியம் சில காலங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டில் 20 சதவீதத்திற்கும் குறைந்தளவான பெண் செய்தியாசிரியர்களே பிராந்திய வலயத்தில் கடமையாற்றியதாகக் கிழக்கு ஆபிரிக்க ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

செய்தி ஊடகத்தில் பெண்களின் நிலை என்ன என்பது குறித்து 2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சர்வதேச அறிக்கையில் இந்த விடயம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உலகின் அறுபது நாடுகளின் 500 நிறுவனங்களில் இரண்டு ஆண்டுகளாக இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு நடத்தப்பட்ட அநேக நாடுகளில் செய்தி சேகரிப்பு மற்றும் முகாமைத்துவப் பொறுப்புக்களைப் பெரும்பான்மையாக ஆண்களே வகித்து வருகின்றனர். இந்த நாடுகளில் 73 சதவீதமான முக்கிய நிர்வாக மற்றும் முகாமைத்துவப் பதவிகளை ஆண்கள் வகிப்பதுடன், 27 சதவீதமான பதவிகளை பெண்கள் வகித்து வருகின்றனர். செய்தி அறிக்கையிடல் துறையில் ஆண்களின் பங்களிப்பு பெண்களை விடவும் கிட்டத்தட்ட இரட்டிப்பாகக் காணப்படுகின்றது. 36 சதவீதமான பெண்கள் மட்டுமே செய்தி அறிக்கையிடல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், செய்தி சேகரிப்பு, செய்தி தொகுப்பு மற்றும் செய்தி எழுதுதல் போன்ற துறைகளின் சிரேஷ்ட பதவிகளில் பெண்களின் பங்களிப்பு முன்னேற்றகரமானதாக அமைந்துள்ளது. இந்தத் துறைகளில் 41 சதவீதமான பெண்கள் பணியாற்றி வருகின்றனர்.

**பால்நிலைச் சமத்துவத்தில் சமநிலை, பக்கச்சார்பற்ற தன்மை போன்ற எண்ணக்கருக்கள் ஆணாதிக்க நோக்கில் வரையறுக்கப்படுவதாகக் கருத வேண்டிய நிலைமை காணப்படுகின்றது**

செய்தி ஊடகத்துறையில் கடமையாற்றி வரும் 1,70,000 பேரிடம் இரண்டு ஆண்டுகள் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. நிர்வாக மற்றும் உயர் முகாமைத்துவ பதவிகளில் அதிகளவு பெண்களின் பங்களிப்பு காணப்படும் பிராந்தியங்களாகக் கிழக்கு ஐரோப்பா மற்றும் நோர்டிக் நாடுகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்ட முடியும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முறையே 33 சதவீதமான, 43 சதவீதமான பெண்களும், நோர்டிக் நாடுகளில் முறையே 36 சதவீதமான, 37 சதவீதமான பெண்களும் நிர்வாக மற்றும் உயர் முகாமைத்துவ பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர். ஒப்பீட்டளவில் ஏனைய பிராந்திய நாடுகளை விடவும் இந்த இரண்டு நாடுகளிலும் பெண்கள் ஊடகத்துறையில் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 13 சதவீதமான பெண்களே ஊடகத்துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகிக்கின்றனர். எனினும், குறிப்பிட்ட சில நாடுகளில் ஆண்களை விடவும் பெண்கள் உயர் பதவிகளை வகிக்கின்றனர். உதாரணமாக தென் ஆபிரிக்காவில் 79.5 சதவீதமான சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளைப் பெண்களே வகித்து வருகின்றனர். லித்துவேனியாவில் செய்தி அறிக்கையிடும் பணியின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பதவிகளை அதிகளவு பெண்கள் வகித்து வருகின்றனர். செய்தி அறிக்கை தொடர்பான சிரேஷ்ட பதவிகளில் 78.5 சதவீதமான பெண்களும், கனிஷ்ட பதவிகளில் 70.6 சதவீதமான பெண்களும் கடமையாற்றுகின்றனர். மத்திய மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளில் ஆண்களுக்கு ஓரளவு நிகரான அளவில் பெண்கள் பதவி வகிக்கின்றனர்.

எனினும், ஆய்வு நடத்தப்பட்ட 59 நாடுகளில் 20 நாடுகளில் பெண்கள் ஊடகத்துறையில் பணியாற்றுவதற்குக் கண்ணுக்குப் புலப்படாத வகையிலான தடைகள் காணப்படுகின்றன. அதிகளவில் மத்திய மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை வகிப்பதற்கு கண்களுக்குப் புலப்படாத தடைகள் காணப்படுகின்றன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அரைவாசிக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பால்நிலை சமத்துவத்தை நிலைநாட்டுவதனை நிறுவனக் கொள்கைகளில் உள்ளடக்கியுள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 16 சதவீதமான நிறுவனங்களும், மேற்கு ஐரோப்பிய மற்றும் சஹாரா ஆபிரிக்க நாடுகளில் 69 சதவீதமான நிறுவனங்களும் இந்தக் கொள்கையைக் கொண்டவை. துரதிஷ்டவசமாக இலங்கை இந்த ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பால்நிலைச் சமத்துவத்தில் சமநிலை, பக்கச்சார்பற்ற தன்மை போன்ற எண்ணக்கருக்கள் ஆணாதிக்க நோக்கில் வரையறுக்கப்படுவதாகக் கருத வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. பொது அல்லது தனிப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையிலான செய்தியொன்றின் உள்ளடக்கமும் இதன் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில், திட்டமிட்ட அடிப்படையில் பெண்களின் குரல்கள் ஒடுக்கப்படுகின்றன. பால்நிலை அடிப்படையில் ஒவ்வொரு தரப்பினரதும் நோக்கு வித்தியாசப்படும் என்ற யாதார்த்தம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. நியாயமான பால்நிலைச் சித்தரிப்பானது தொழில்சார் மற்றும் ஒழுங்குநெறி அபிலாஷை களைக் கொண்டு அமைந்தவையாகும். துல்லியம், நேர்மை மற்றும் நியாயத்திற்கு வழங்கப்படும் கௌரவத்திற்கு இதனை ஒப்பீடு செய்யலாம். ஒரு நாணயத்தின் மறுபுறத்தைப் போன்றே அதிகளவு பெண்கள் செய்தித்துறையில் முகாமைத்துவப் பதவிகளை வகிக்க வேண்டுமெனச் சிலர் இதனைச் சுட்டிக்காட்டக்கூடும்.

கடினமான செய்தி அறிக்கையிடலுக்கு ஆண்களின் பங்களிப்பு அவசியமானது என்பதே இன்னமும் உலக நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. இவ்வாறான செய்திகளை இன்னமும் ஆண்களே செய்தி அறிக்கையிட்டுச் சமர்ப்பிக்கின்றனர். பால்நிலைச் சமத்துவத்திற்காக ஊடகவியலாளர்கள் குரல்கொடுக்க வேண்டும். பால்நிலைச் சமத்துவம் என்பதனைப் பெண்களின் பிரச்சினையாக கருதக் கூடாது, ஒடுக்குமுறைகளை இல்லாதொழிப்பதன் மூலம் அனைவரும் நன்மையடைய முடியும்.

ஊடகங்கள் சமூகத்தின் பிம்பமாகக் கருதப்படுகின்றன. அவ்வாறானால், பால்நிலைச் சமத்துவம் என்பது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்ற யதார்த்தம் சரியான முறையில் பிரதிபலிக்கப்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் சமநிலையாக நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. சம அளவிலான சம்பளம், சம அளவிலான தொழில் வாய்ப்பு, சம அளவில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் போன்றவற்றையே சமநிலையாக நடத்தப்பட வேண்டும் என்பதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

ஊடகவியலில் பால்நிலை குறித்த நியாயமான சித்தரிப்பு அவசியமானது. குறிப்பாக செய்திகளில் இந்த விடயம் இன்றியமையாதது. நடுநிலையான, பால்நிலையை குறித்து கூறாத மொழிப் பிரயோகத்தைப் பயன்படுத்த முடியும். மேலும், பெண்கள் மென்மையான செய்தி அறிக்கையிடுவோராக அடையாளப்படுத்தப்படக் கூடாது. ஊடகங்கள் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தொழில் சூழல் மற்றும் பிரதிநிதித்துவம் போன்றவற்றில் பெண்களுக்குச் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். செய்தித்துறையில் பால்நிலை சமத்துவம் தொடர்பில் வலியுறுத்தப்பட வேண்டிய அவசர அவசியம் எழுந்துள்ளது. இந்த விடயம் குறித்து பேசப்பட வேண்டும். மரபு ரீதியான பால்நிலை ஆதிக்கத்திலிருந்து

மீள்வதற்கு அது தொடர்பில் சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது.

மேலும், ஊடகப் பொறிமுறைமை ஜனநாயகமானதாக அமைய வேண்டும். ஊடக ஒன்றியங்கள் இந்த விடயத்தில் முக்கிய பங்களிப்பினை வழங்க முடியும். சகல ஊடகப் பணியாளர்களும் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டும் என்பது ஊடக நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வேண்டும்.

மெய்யானதும், முழுமையானதுமான பால்நிலைச் சமத்துவம் இன்னமும் எட்டாக் கனியாக அல்லது எய்தப்படாத இலக்காகவே தொடர்ந்தும் நீடித்து வருகின்றது.

"ஒடுக்குமுறை, வளப்பற்றாக்குறை, பொருளாதார வாய்ப்புக்களை வழங்காமை, தீர்மானம் நிறைவேற்றும் பணிகளில் வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களை மட்டும் வழங்குதல் போன்ற காரணிகளினால் பெண்கள் தொடர்ந்தும் மோசமாகப் பிற்படுத்தப்பட்டுள்ளனர்" என ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். இதன் மூலம் பால்நிலைச் சமத்துவம் என்ற இலக்கு இன்னமும் எட்டப்படவில்லை என்பதனை அவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

பெண்களின் உரிமைகள், பால்நிலைச் சமத்துவம் போன்ற விடயங்களுக்கு ஊடகத்துறை விதிவிலக்கல்ல. ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் பால்நிலைச் சமத்துவத்தை நிலைநாட்ட இன்னமும் பலவாறான அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும் என்பது நிரூபணமாகியுள்ளது.■

**துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை**

# இழக்கப்படுகின்ற சுயம்

மூன்று தசாப்த முரண்பாடு
இடையிலே தெரிந்தும்
தெரியாமலும்
விரும்பியும்
விரும்பாமலும்
சிக்குண்ட நாம்
வேறறுக்கப்பட்டு வீணாகிப் போனோம்.
முடிந்தும் முடியாமலும்
இன்றுவரை தொடர்கின்ற
இனவாதப் போக்கினுள்ளே
பாரதூரமாகிப் போன
வாழ்க்கையின் நகர்வுகள்
நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது
இன்றும்,
இதன் பின்னரும்
எம்மவர்களுக்குள்
இடம்பிடித்துக் கொள்கின்ற
குரோத வன்மங்கள்.
இதனால்
இல்லாது போகின்றது
நாமும் எமது இருப்பும்
எமக்கான சுயமும்

**தர்சினி**

# நினைப்பும் நடப்பும்



## நினைப்பு

குரல் 1 :"உவள் மனோன்மணியின்ர பெடிச்சி இந்த எலக்சனில நிக்கிறாளாம்"

குரல் 2: "ஓம் ஓம் கேள்விப்பட்டன். எங்கட ஊருக்குள்ள இருக்கிற ஒரு பிள்ளை அரசியலில போறது சந்தோசம்தான்.."

குரல் 1 :"ஓமடா.. வருறவன்கள் எல்லாம் எங்கட பிரச்சினைகளை பாக்கிறதில்ல..தங்கட அலுவல் முடிச்சா காணும் எண்டு போய்க்கொண்டிருப்பான்கள்..உவள் நம்மட ஊர்ப்பிள்ளை..பிரச்சினைகளும் தெரியும்..படிச்சவளும்கூட.. எங்களுக்கு நல்ல ஒரு சந்தர்ப்பம்.."

குரல் 2: ம்.. நானும் அதைதான் யோசிச்சனான்..சும்மா ஜனநாயகம் ஜனநாயகம் எண்டு சொல்லுவாங்கள்..எங்கட குரல் எடுபடுறதில்ல.."

குரல் 1 :"ஓமடா.. இந்த போருக்கு பிறகு பொம்பிளயளுக்கும் நிறைய பிரச்சினைகள்..அதுகள பிரதிநிதிப்படுத்த கட்டாயம் ஒரு பொம்பிளபிள்ள நிக்கிறது நல்லதுதான்.."

குரல் 2: "ஓ..உவள் படிக்கிற காலத்திலேயே ஊர்விசயங்களில நல்ல ஈடுபாடு..பிரச்சினைகளையும் நல்லா தீர்த்து வைப்பாள்...கெட்டிக்காரி..நாலுமனுசரோட கதைக்க பேச தெரியும்.."

குரல் 1 :"ம்..இஞ்ச பொம்பிளயள் எண்டா சிலபேருக்கு இளக்காரம்தான்.. புத்திசாலி ஆம்பிளயளுக்கு குடுக்கிற மரியாதை புத்திசாலிப்பொம்பிளயளுக்கு குடுக்கிறதில்ல.."

குரல் 2: "நானும் பாத்திருக்கிறன்.. படு முட்டாள்களாக இருப்பான்கள் எல்லா பொம்பிளயளும் தங்களுக்கு கீழ எண்டமாதிரி கதைப்பான்கள்..அவங்கள பாத்தா பரிதாபமாகவும் சிரிப்பாகவும் இருக்கும்."

குரல் 1 :"ஏனடா, தாங்கள் முட்டாள்கள் எண்டு இவங்களுக்கு உறைக்கிறதில்ல..?"

குரல் 2: "இல்லடா.. தாங்கள் முட்டாள்கள் எண்டு

அவங்களுக்கு உறைகிறதாலதான் அதை தாங்கமாட்டாமல் மற்றவர்களை இளக்காரபடுத்தி சுகம் காணுறது'இது ஒருவகை மனப்பிறழ்வு"

குரல் 1: சரியடாப்பா.. உந்த பிள்ளைக்கு "சப்போட்"பண்ணி "ஜெயிக்க" வைக்கோணும்..அதுக்கான வழியப் பாப்பம்

## நடப்பு

"உவள் மனோன்மணியின்ர பெடிச்சி இந்த எலக்சனில நிக்கிறாளாம்"

"ஓமடா.. கேள்விப்பட்டன்.. பெட்டைக்கோழி கூவி விடியுமே? உவள் படிசவள் எண்ட திமிரோட ஊர் துளவாராம்தான் பார்த்துக் கொண்டிருக்கிறாள். படிக்கிறகாலத்திலேயே உப்பிடிதான்.. வீட்ட ஒரு தேத்தண்ணி போடத்தெரியுமோ தெரியாது.."

"ஓமடா.. சரியாசொன்னாய்.. வீட்டில ஒரு வேலை தெரியாது நாடாள வெளிக்கிட்டுதுகள். கொஞ்சம் படிச்சு கதைக் தெரியும் எண்டவுடனே தெருவில இறங்கீருங்கள்.. பிறகு உதுகள் சொல்லுறததான் நாங்க கேக்க வேணும்."

"ம்..ம்.. வீட்டில மனிசிமாரயே வாய்திறக்க விடுறஇல்ல நாங்க.. உதுகள் வெளிக்கிட்டுதுகள்.."

"பாப்பம்.."

"அது சரியடா.. ஆரோட நிக்க போறாளாம்?"

"ஓ.. இதென்ன கலியாணமே"ஆராஞ்சு ஒருத்தனோட போறதுக்கு.. எவனாவது இளிச்ச வாயன் இவள சேத்துக்கொள்ளுவான்.. அவனுக்கும் பொழுது போகணும்.."

"உவளே எலக்சன் கேக்கிறாளாம்.. நாங்களும் றைபண்ணியிருக்கலாம்."

"அது காலம் முடிஞ்சு போச்சு.. இனி அதைப்பற்றி கதைக்க ஏலாது. இவள் ஜெயிக்க ஏலாது.. விடக்கூடாது.. பிறகு ஊருக்குள்ள ஒரு பெட்டையளும் நம்மள மதிக்காதுகள்.."

"ம்.. இப்பிடி ஊராள வாற பொம்பிளயள அடிக்கிற இடத்தில அடிச்சா ஜனநாயகம் அது இது எண்டு ஒருத்தியும் வெளிக்கிடமாட்டாளவயள்.. "

**கொற்றவை**



“இஸ்லாமிய ஷரீஆ சட்டமும், குர்-ஆனிய வசனங்களும், மதபோதகர்களின் உபநியாசங்களும் மட்டும் ரிஷானா போன்ற பெண்களைக் காப்பாற்றப்போவதில்லை.”

# ரிஷானா : தீர்க்கப்படாத வழக்கு

ரிஷானாவை யாரும் மறக்க முடியாது. ரிஷானா நம்மிடையே விட்டுச் சென்றிருக்கும் கேள்விகள் விவாதங்கள் வெறும் உணர்ச்சிப் பிளம்பாக நீர்த்துக் கொண்டிருக்கின்றன. ரிஷானாவுக்கு சவூதி அரசாங்கம் விதித்த சமய விழுமியங்களுக்கும் மனிதாபிமானத்திற்கும் சவாலான மரணதண்டனை பற்றி பல்வேறுவிதமான கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டன. பெரும்பாலும் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தையும், சவூதி அரசாங்கத்தின் சட்டவாட்சி முறைமையைக் குற்றம் சொல்வதாகவும், தண்டனையை நியாயப்படுத்துவதாகவும் விவாதிப்பதாகவும், ரிஷானா போன்று இனி யாரையும் இழக்கக் கூடாதென அனுதாபம் தெரிவிப்பனவாகவும் அவை பல்வேறான உருவைப் பெற்றிருந்தன. உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் மீது தொடர்ந்தும் பல்வேறு விதமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுக் கொண்டும் உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டும் வருவதைக் காணமுடிகின்றது.

முஸ்லிம்களின் இந்தப் பின்னடைவுக்கு முதலாளித்துவ ஊடகங்களின் பங்களிப்பும், செய்தி நிறுவனங்களின் புறக்கணிப்பும் மிகப்பிரதானம் என்பது தவிர்க்க முடியாதது என்றாலும் முஸ்லிம்களின் பிற்போக்கு நிலையின் அசல்தன்மை குறித்து ஆராய வேண்டியிருக்கிறது. எந்தவித பிரக்ஞையுமில்லாமல் காரணகாரியத்தைத் தாண்டிச் செல்லக்கூடியவர்களாகவே இஸ்லாமியர்களில் பெரும்பாலானவர்கள் மாறிக் கொண்டுவருகின்றனர்.

ரிஷானாவின் கொலைக்கான முழுப்பொறுப்பும் சவூதி அரசாங்கத்தினுடையது எனச்சாடுவதை ஒரு தப்பித்தலுக்காகவே சில இஸ்லாமியர்கள் கையாளுகிறார்கள். சவூதி அரசின் சட்டத்தை ஜனநாயகமற்றது என்றும் அது இஸ்லாமிய ஷரீஆ சட்டம் கிடையாது, சவூதி தானே வகுத்துக் கொண்டது என்றும் நிரூபிப்பதற்கு, இஸ்லாமியப் பெண் மஹ்ரமின்றி பயணிக்கக்கூடாதென்றும், மஹ்ரமான துணையுடன் அன்றி இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ்ஜைக்கூட நிறைவேற்றக் கூடாதென்றும் தடைவிதித்திருக்கின்ற சவூதி அரசாங்கம் மஹ்ரமற்ற முறையில் பணிப்பெண்களை மட்டும் நாட்டுக்குள் வரவழைப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. சவூதி அரசாங்கத்தின் பழங்குடித்தன்மையான நீதிமுறை கேள்விக்குட்படுத்தப்படுவதும், ரிஷானாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதன் பின்னணியில் சவூதி நீதிமுறையின் பழங்குடித்தன்மை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே என்றாலும், இவற்றை அடையாளப்படுத்துவதனால் மட்டும் ரிஷானா போன்று இன்னொரு பெண்ணை இழக்காமல் இருந்திட முடியுமா என்ற கேள்வி மீண்டும் விடையிலியாகிறது.

இஸ்லாமியச் சட்டம் கேள்விக்குட்படுத்த முடியாதது என்றும் அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டியதும் என்றும் கூறி சவூதியைக் குற்றம் சுமத்துவதால் இந்தப் பின்னடைவான நிலையை சீரமைத்துவிட முடியுமா? இஸ்லாமியச் சட்டத்தின் தண்டனைகள் இஸ்லாம் வளர்ச்சியடைந்த காலத்திலான தற்காலிக ஏற்பாடா அல்லது என்றென்றைக்குமானதா என்ற அடிப்படையில் ஆராயவும், விவாதிக்கவும் முன்வராத எழுத்துக்களால் ஏற்படுத்தப்படும் வெளி குறித்தும் சிந்திக்கவேண்டியது தேவையாகிறது. சாந்தி சமத்துவத்தை, மானிட ஒற்றுமையை முக்கியத்துவப்படுத்துகின்ற இஸ்லாமிய மார்க்கம் உலகின் நவீன நீண்டகாலப் போக்குகள் குறித்து எதிர்வுகூறுகிறது. இத்தகைய ஒரு மார்க்கத்தில் கருணையற்ற விதத்திலான தண்டனை முறைகள் காலாகாலத்துக்குமான அறங்களாக உள்வாங்கப்பட்டிருக்கின்ற முரண்நிலையை ஆராய்வதற்குப் போதிய களம் ரிஷானாவினால் ஏற்படுத்தப்பட்டபோதும், அது சமயத்தை விமர்சித்த குற்றத்திற்கு ஆளாக்கும் என்ற கபடம் அறமிழந்த எழுத்துக்களையும் கருத்துக்களையும் பிரவாகிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளின் தடுப்புக்கள் மிகப்பின்தங்கியதாகவும் ஆணாதிக்கம் மிக்கதாகவும் இருப்பதே இஸ்லாம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளின் தோற்றுவாயாகக் காணப்படுகின்றது. இஸ்லாத்தில் பெண்களுக்கு போதிய சுதந்திரமும், உரிமையும் வழங்கப்பட்டிருப்பதாக அல்குர்ஆனின் வசனங்களை மேற்கோள்காட்டி இயல்புக்கு முரணான கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு வாழ்வதை இஸ்லாமியர்கள் நெடுங்காலமாக மேற்கொண்டு வருகின்றனர். இஸ்லாமிய சமயத்தின் கோட்பாடுகளை இறுக்கமாகப் பின்பற்றுகின்ற ஒரு சமூகம், பெண்கள் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குப் படையெடுப்பதற்கான காரணிகள் குறித்து ஆராய முன்வருவதில்லை. அதைப்பற்றி அலட்டிக்கொள்வதுமில்லை. இஸ்லாத்தின் பெயரால் சிரசைச் சர்வ சாதாரணமாக அறுத்தெறியும் சவூதியின் காட்டுமிராண்டித்தன்மையினாலும் அதன் பழங்குடி நீதியினாலும் மட்டுமல்ல இஸ்லாமிய நடைமுறைக்கு முற்றிலும் முரணான முறையில் பெண்களிடம் சீதனம் பெறுகின்ற சீதனத்தை எதிர்பார்க்கின்ற இஸ்லாத்திற்கு முரணான சீதனக் கட்டமைப்பை உருவாக்கிய

ஆணாதிக்க சக்திகளாலுமே ரிஷானா கொல்லப்பட்டாள். இன்னும் எத்தனையோ ரிஷானாக்கள் திருமணக் கனவுகளைச் சுமந்து கொண்டு ஆண்களுக்கான வீடுகளைக் கட்டியெழுப்புவதற்காக அரபு தேசங்களில் வியர்வை சிந்திக்கொண்டும், அராபிகளினதும் ஆதிக்கவாதிகளினதும் பசிக்கு தங்கள் உடல்களை தீனியாக்கிக் கொண்டும் இருக்கின்றனர்.

செய்தி இணையத்தளமொன்றில் ரிஷானாவின் குடும்ப விபரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அவள் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான கனவுடன்தான் சவூதிக்குப் பயணித்தாள் என்ற விபரத்துடன் சில புகைப்படங்களையும் அதனுடன் காணக்கூடியதாக இருந்தது. ஆண்கள் சிலர் தங்களது அனுதாபக் கருத்துக்களை எழுதியிருந்தனர். ரிஷானாவின் தந்தையைப் பார்த்ததும் எரிச்சல் ஏற்படுவதாகவும் குத்துக்கல்லாக இருந்துகொண்டு வீடுகட்ட மகளை வெளிநாடு அனுப்பியிருக்கிறானே என்றும் சிலர் உணர்ச்சிப் பிளம்பாக வெடித்ததைப் பார்த்தபோது அபத்தமாக இருந்தது.

**இஸ்லாமிய வரலாற்றில் முஹம்மது நபியினதும், அதற்குப் பின்னரான கலீபாக்களினதும் வாழ்வில் லௌகீக வாழ்வின் போக்குகளுக்குப் போதியளவு நெகிழ்வுத்தன்மையும் இலகுத்தன்மையும் இருந்திருப்பதைக் காணமுடிகின்றது.**

ரிஷானாவின் தந்தையைப்போன்று பல்லாயிரக்கணக்கான தந்தைமார்கள் தங்கள் மகளுக்கு வீட்டை கட்ட முடியுமா? அவளுக்கொரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்க முடியுமா? என்ற அவநம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாளாந்த வருமானத்தில் குடும்பத்தை நிர்வாகம் பண்ண மட்டும்தான் அவர்களால் முடிகிறது. அதற்குக்கூட போதுமான வருமானத்தை ஈட்ட வலிமையற்றவர்களும் இருக்கிறார்கள். வெளிநாடு சென்று உழைப்பையும் உடலையும் சுரண்டத் தந்து ஈட்டிவரும் பணத்தில் பெண்கள் நிர்மாணிக்கின்ற கூரைகளுக்குள் நிழல் அனுபவிக்கின்ற ஆண்களை என்னவென்பது? இத்தகைய கீழ்த்தரமான கட்டமைப்பை மாற்ற முற்படாமல் இன்னொரு ரிஷானாவைக் காப்பாற்றுவது குறித்து வார்த்தைகளால் அளந்து கொண்டிருப்பது இஸ்லாமிய சமூகம் எதிர்கொண்டுள்ள பேரவலம்.

இலங்கையில் இருக்கத்தக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை நடத்துகின்றவர்களில் 99 வீதமானவர்கள் ஆண்களாகவே காணப்படுகின்றனர். 90 வீதமான முகவர் நிறுவனங்கள் இஸ்லாமியப் பின்புலம் கொண்டனவாகவே காணப்படுகின்றன. முஸ்லிம் பெண்களை அரபு நாடுகளுக்கு வியாபாரம் செய்கின்ற பணியை இஸ்லாமியர்களேதான் முன்னெடுக்கின்றனர். இத்தகைய முகவர் நிறுவனதாரர்கள் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர். மனிதவளங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வருமானமிக்க இத்தொழில் மற்றைய துறைகளைவிடவும் நெறிப்படுத்தப்பட்டதாகவும் போட்டி சூழலில் வளர்ச்சிக்குப் போராடுவனவாகவும் காணப்படுகின்றன. ஆட்பதிவுத்திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பவற்றுடன் மிக நெருக்கமான உள்ளார்ந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்நிறுவனங்கள் பிறப்புப்பதிவு இல்லாதவர்களுக்குக்கூட அயைாள அட்டை, கடவுச்சீட்டு பெற்றுக் கொடுத்துவிடமுடிகின்றளவு தேர்ச்சி பெற்றுச் செயலாற்றுகின்றன. சலனமேயின்றி இத்துறைசார்ந்த அனைத்து ஓட்டைகளையும் தெரிந்து வைத்துக் கொண்டுள்ள இவை, சவூதிக்கு ஒரு பெண்ணை 3 முதல் 5 இலட்சம் ரூபாவுக்கு

விற்பனை செய்கின்றன. அந்தப் பணத்தில் 1 வீதம் குறிப்பிட்ட பெண் வெளிநாடு செல்வதற்கு முன்பாக இரண்டு அல்லது மூன்று கட்டங்களில் கையளிக்கப்பட்டுவிடும். தரகுப் பணியாற்றியவர்களுக்கு சிறு தொகை போக மிகுதியை நிறுவனங்களே ஏப்பமிடுகின்றன.

சவூதி அரசாங்கம் பெண்களை ஒப்பந்த அடிப்படையில் அடிமைகளாகக் கொள்முதல் செய்கின்றதே தவிர பணிப்பெண்களாக உத்தியோக நியமனம் செய்வதில்லை. பணிப்பெண்ணின் புகைப்படம் சவூதிக்கு அனுப்பப்பட்டு உரியவர்களுக்கு அவள் பிடித்திருந்தால் மட்டுமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. சில பெண்களைப் பார்த்துவிட்டு "நோஞ்சானாகத் தெரிகிறாள்" என "கூலி"யைக் குறைக்கின்ற மனிதாபிமானமற்ற அராபியர்கள்/வீட்டு உரிமையாளர்கள் இருக்கின்றனர். அழகிய தோற்றமுள்ள பெண்களுக்கு அதிக "கூலி" தருவதற்கு உடன்படுகின்ற அராபிகளும்/ வீட்டு உரிமையாளர்களும் இருக்கின்றனர். இது அப்பட்டமான பெண் வியாபாரம். பெண்களை மிகப்பவித்திரமாகப் பேணுகின்ற ஆளுகின்ற கட்டமைப்பைக் கொண்ட ஒரு சமூகத்திற்குள் ஒப்பந்த ரீதியிலான பெண் வியாபாரம் நடைபெறுவதென்பது வெட்கக்கேடானது. வருடந்தோறும் 2 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒப்பந்த கால அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றனர்.

சவூதியில் மட்டுமே இந்த நடைமுறை என்றோ, சவூதிக்கு மட்டும்தான் பணிப்பெண்கள் செல்கிறார்கள் என்றோ இல்லை. மத்திய கிழக்கு நாடுகள் என்று கூறத்தக்க அரபு தேசங்கள் பலவற்றுக்குப் பெண்கள் செல்கின்றனர். இவ்வாறு அடிமைகளாகச் செல்லும் பெண்கள் எப்பேற்பட்ட சவால்களையும் முகங்கொடுக்கும் நிலைக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றனர். சில பெண்கள் சவூதி செல்வதற்கு முன்பே தரகர்களால் / முகவர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்களில் பலர் மீண்டும் மீண்டும் சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் பாலியல் வல்லுறவுக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாகி பிறிதொரு சமயத்தில் பாலியல் தொழிலாளர்களாகத் தங்களை வளர்த்துக் கொள்கின்றனர்.

அழுக்குகள் சுத்திகரிக்கப்படாமல் பேணப்படுகின்ற கபடத்தன்மையே இன்று இஸ்லாமிய சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ள பல்வேறு உள்ளார்ந்த சவால்களுக்குப் பிரதான காரணமாகி வருகின்றது. இஸ்லாமிய ஷரீஆ சட்டமும், குர்ஆனிய வசனங்களும், மதபோதகர்களின் உபநியாசங்களும் மட்டும் ரிஷானா போன்ற பெண்களைக் காப்பாற்றப்போவதில்லை. அவை சரியான முறையில் விளங்கிக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும். எல்லாவித யதார்த்த சவால்களையும், தத்ரூப உண்மைகளையும் சமயக் கண் கொண்டு அளவிடுவது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. இஸ்லாமிய வரலாற்றில் முஹம்மது நபியினதும், அதற்குப் பின்னரான கலீபாக்களினதும் வாழ்வில் லௌகீக வாழ்வின் போக்குகளுக்குப் போதியளவு நெகிழ்வுத்தன்மையும் இலகுத்தன்மையும் இருந்திருப்பதைக் காணமுடிகின்றது. பிரச்சினைகளையும் சவால்களையும் மிக எளிய முறையில் கையாளும் தன்மைகளினாலும் எல்லாவித பிரச்சினைகளுக்குமான நடைமுறைச்சாத்தியமான தீர்வுகள் இருந்ததினாலுமே இஸ்லாம் தனிமனித வாழ்க்கையைத் திட்டமாகவும் மனித வாழ்வுக்கான "மார்க்கம்" ஆகவும் முதன்மை பெற்றுப் பரவியது. சமகாலத்தில் இஸ்லாம் வழிபாடுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் பெற்ற "சமயம்" ஆக இறுக்கமானதாகவும் நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததாகவும் அர்த்தப்படுத்தும் நிலையை அண்மித்துள்ளது. இஸ்லாமிய சமூகத்தின் பிரச்சினைகளை ஆராய்வதும், பொதுத்தளத்தில் விவாதிப்பதும் இஸ்லாத்தின் தரத்தைக் குறைத்துவிடும் என்ற இஸ்லாமியர்களின் பின்தங்கிய அபத்தமான கற்பிதம் இன்று பாரிய சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது.■

**ஸர்மிளா ஸெய்யித்**



# ஜனநாயகமும் பெண்கள் உரிமைகளும்

## அறிமுகம்

இலங்கையில் இதுவரை காலமும் பெண்கள் உரிமைகளுக்கான செயல்வாதமானது சொந்த வாழ்க்கையாகிய குடும்பங்களின் தளத்திலும் பெண்கள் தொழில் பார்க்கும், இயங்கும் சமூகத் தளங்களிலும் மட்டுமே அணுகப்பட்டு வந்திருந்தது. பெண்களை உட்படுத்தும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களும்கூட பெண்கள் மீதான வன்முறைக்கெதிராக நடவடிக்கை எடுப்பதுடன் தனது பணிகளை முடித்துக்கொண்டன. பால்நிலை தொடர்பான விடயங்களை ஆராயும் வெளியீடுகளும்கூட சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவு முறைகளை ஆராய்வதும், அதில் மதக்கோட்பாடுகள் மற்றும் பண்பாட்டுக் கோலங்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதையே அனேகமாகத் தொட்டன. "நாம் தனியே பெண்கள் நிறுவனமே. எனவே அரசியல் விடயங்களைக் கையிலெடுக்கமாட்டோம்" என்று கூறிய அமைப்புக்கள் ஏராளம். இவ்வாறு அரசியல் முறைவழிகளில் பெண்களின் உரிமைகள் தொடர்பான வாதத்தினை உட்படுத்தாது இருந்ததற்கு இலங்கையில் பலகாலமாக நிலவி வந்த அச்ச நிலைமைகள் ஒரு காரணமாக இருப்பினும், பெண்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் பேணப்படுவதுடன் கொண்ட தொடர்புகளை அறியாமையே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறலாம். இத்தொடர்பினைத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

ஜனநாயகக் கட்டமைப்பின் அடிப்படைகள், ஜனநாயகக் கட்டமைப்பின் அடிப்படையானது ஒவ்வொரு தனிமனிதனினதும் சுயநிர்ணய உரிமையாகும். சுயநிர்ணய உரிமையானது ஒரு மனிதன் தனது வாழ்நிலையையும் எதிர்காலத்தினையும் சுயாதீனமாகத் தீர்மானிக்கும் உரிமையாகும். ஒரு குறித்த பூகோளப் பரப்பில் வாழும் மக்களின் கூட்டான சுயநிர்ணய உரிமையைத்தான் நாம் இறைமை எனக் கூறுவோம். அம்மக்கள் யாவரும் கூட்டாகத் தமது இறைமையை செயற்படுத்தவெனவே மக்களாலே அரசுக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அரசுக் கட்டமைப்புக்களான சட்டவாக்க அமைப்பு, நிறைவேற்று அமைப்பு, மற்றும் நீதித்துறையாவன, ஓர் ஒழுங்குபூர்வமாக மக்கள் தத்தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இவை இந்த ஒழுங்கினை

நிலைநாட்டுவதற்காகவே அவற்றிற்கு குறித்த அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. அரசுக் கட்டமைப்புக்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் ஏதோவொரு முறையில் மீறப்படும்பொழுது, மக்கள் தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் ஜனநாயகம் மெல்ல மெல்ல குறைகின்றது. ஒரு சமூகத்தில் ஜனநாயகம் மெல்லக் குறைகின்றதென்பதற்கான சுட்டிகள் அங்கு மனித உரிமைகள் உதாசீனப்படுத்தப்படுவதைக் காட்டும். ஏனெனில், அடிப்படை மனித உரிமைகளான சிவில், அரசியல், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளாவன மக்கள் தம் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் உரிமைகளாகும். நாம் உயிர் வாழும் உரிமை கொண்டவர்களாக, கருத்துச் சுதந்திரம் பெற்றவர்களாக, கல்வியறிவு கொண்டவர்களாக, பொருளாதாரச் சுயசார்பு பெற்றவர்களாக இருக்கும்போதுதான் சுய நிர்ணய உரிமை கொண்டவர்களாக இருக்க முடியும் இல்லையா? இவ்வகையாக, ஜனநாயகமும் மனித உரிமைகளும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த ஒரு கருவில் உதித்த இரு கோட்பாடுகளெனக் காணலாம்.

இதன்படி, ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பேணிப்பாதுகாப்பதற்கு முன்னிபந்தனைகளாக ஒரு மக்கள் சமூகம் ஒரு தொகுதி விழுமியங்களையும் மதிப்பீடுகளையும் வரித்துக்கொள்ள வேண்டியதாகின்றது. சகலருக்கும் கருத்துச் சொல்வதற்கான சுதந்திரத்தினை மதித்தல், சகலரையும் பங்கேற்க வைப்பதற்கான பொறிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், சகலரும் வளங்களையும் வாய்ப்புக்களையும் சமமாகப் பெறுவதற்கான கட்டமைப்புக்களை முன்னேற்றுவதனை முன்னுரிமைப்படுத்துதல், சகலருக்கும் குறைதீர் நடவடிக்கைகள் எடுக்கும் முகமான சம நீதியினை வழங்குதலினை உறுதி செய்தல் போன்ற இவையே இந்த விழுமியங்களின் தொகுதியாகும். ஒரு நாட்டின் பெரும்பான்மை சிறுபான்மை சமூகங்களுக்கு மட்டுமன்றி, ஏழை பணக்கார வர்க்கங்களுக்கும் ஆண் - பெண் இருபாலாருக்கும் இவை பொதுவில் பிரயோகிக்கப்பட வேண்டும். எங்கெல்லாம் இந்த விழுமியங்கள் வேரூன்றவில்லையோ அங்கெல்லாம் ஜனநாயகம் வேரறுக்கப்படுகின்றது. எங்கெல்லாம் மக்கள் மத்தியில் இவ்விழுமியங்கள் ஆழப்பதிக்கப்பட்டு இருக்கின்றனவோ அங்கெல்லாம் அவர்கள் ஜனநாயகத்தினைப் பாதுகாப்பதில் அக்கறையுடன் விழிப்பாகச் செயற்பட்டவண்ணம் இருப்பார்கள். அதேபோன்றே, அரசு கட்டமைப்புக்களிலிருந்து ஜனநாயக விரோதக் கோட்பாடுகள் வெளியிடப்படும்பொழுது அங்கு மக்கள் மத்தியில் வழங்கும் ஜனநாயக விழுமியங்கள் அழிக்கப்படுகின்றன. இவற்றை விளக்குவதற்கு இலங்கையின் சமீப கால வரலாற்றிலிருந்தே பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம். 1979ஆம் ஆண்டு இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைக் கொண்டு வந்த பொழுது சிவில் அரசியல் உரிமைகள் மக்களால் மதிக்கப்படாததாலேயே அதற்கெதிராக ஒரு போராட்டத்தினையும் பொது மக்கள் எடுக்கவில்லை எனக்கூறலாம். சிவில் அரசியல் உரிமைகளை மீறும் அரசு எத்தகைய பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்க்கக்கூடும் என்பதனை 1971ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சியின்போது கண்டுணர்ந்த போதும், தமிழ் மக்களுக்கு எதிராக இச்சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது சிங்களப் பொது மக்கள் வாளாவிருந்தனர். பின்பு 1989, 90களில் இதே பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் சிங்கள மக்களுக்கெதிராகப் பிரயோகிக்கப்பட்டதைக் கண்டோம். இந்நிலைமை இன்று 2013இல் திரும்ப இலங்கையில் தோன்றுவதை நாம் காணலாம். ஜனநாயக விரோதக் கோட்பாடுகள் அரசினால் வெளியிடப்படும்பொழுது மக்களின் விழுமியங்களும் மாறுதலடையத் தொடங்குவதற்கு சமீப காலமாக வளர்ந்து வரும் பௌத்த சிங்களத் தீவிரவாத இயக்கங்களைக் காட்டலாம். அரச ஆதரவுடன் இயங்கும் இவை காட்டுத்தீ போல் எங்கும் பரவி மக்களின் ஆதரவினைப் பெருக்கக் கூடிய அமைப்புக்களாக மாறுகின்றன. சகல இனங்களும் புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று முன்பு எண்ணிய ஒரு

நபரே பின்பு ஏனைய சமூகங்களைப் பற்றிய காழ்ப்புணர்ச்சியினைக் கொண்டவராக மாறுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். எனவே, ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான அடிப்படை நிபந்தனையானது மக்கள் சமூகங்களின் ஜனநாயகப் பண்பாடுகள், கண்ணோட்டங்கள், விழுமியங்கள் ஆகியன வலுப்படுத்தப்படுவதே என முடிவு கொள்ளலாம்.

## பெண்கள் உரிமைகளுக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் உள்ள தொடர்புகள்

ஓர் நாட்டில் சகலரையும் அதன் சகல வழிமுறைகளிலும் தீர்மானம் எடுக்கும் தளங்களில் பங்கேற்கவைப்பதற்கான பொறிமுறைகளை வலுப்படுத்துவதெனில், அங்கு பெண்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படக்கூடும் என உணரலாம். இவ்வகையாக, ஜனநாயகக் கட்டமைப்புக்களும் பொறிமுறைகளும் பெண்களின் உரிமைகளை வலுப்படுத்துகின்றன. ஆயினும் இதைத் தவிர ஓர் ஆழ்ந்த தொடர்பு பெண்கள் உரிமைகளுக்கும் ஜனநாயகக் கட்டமைப்புக்களுக்கும் உண்டு. ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் நடைமுறை என்பதைவிட அது ஒரு வாழ்வியல் என்று கூறலாம். தனது வீட்டில் குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் கருத்துச் சுதந்திரத்தினை மதிக்காத ஒருவர், நாட்டில் கருத்துச் சுதந்திரம் நிலவாத் தன்மையினைப் பற்றி உண்மையாக அக்கறைப்படவே மாட்டார். தனது நிறுவனத்தில் அல்லது தனது கட்சியில் சகலரும் தீர்மானங்களில் பங்கேற்கும் ஜனநாயகப் பொறிமுறைகளை செயற்படுத்தாதவர்கள் அரசில் ஜனநாயகப் பொறிமுறைகளை ஸ்தாபிக்க முடியாது. ஒவ்வொரு மனிதரும் தமது வாழ்க்கையைத் தாமே தீர்மானிக்கும் உரிமை கொண்டவர்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளாதவர் பெண்களின் சுயாதீனத்தினை ஏற்றுக்கொள்வாரா? இதனை மறுபக்கத்திலிருந்தும் பார்க்கலாம். உதாரணமாக, பெண்களுக்கு இருக்கக்கூடிய சுயாதீனத்தை நிராகரிக்கும் ஒருவர் ஒரு நாட்டின் சகலருடையதும் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிப்பாரா? இவ்வாறு, ஜனநாயகக் கண்ணோட்டமானது எமது வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் வியாபித்திருப்பதைக் காண்பதன் மூலம் பெண்கள் உரிமைகள் ஜனநாயகத்துடன் கொண்டுள்ள தொடர்புகளை உய்த்துணரலாம்.

அத்துடன், சர்வாதிகாரப் போக்குகள் அதிகரிக்கும்போது முதலில் பாதிக்கப்படுபவர்கள் சமூகத்தின் ஏற்கனவே நலிவடைந்திருக்கும் குழுவினரேயாகும். உதாரணமாக, ஜனநாயகம் அழித்தொழிக்கப்படும்பொழுது அந்தப் போக்கில் முதல் தொழிற்சங்கங்களே பாதிக்கப்படுவதைப் பார்க்கலாம். தொழிலாளர்களின் போராட்டங்கள் நசுக்கப்படுவதிலிருந்துதான் இவை அனேகமாக ஆரம்பிக்கின்றன. அடுத்து பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாகின்றனர். அடுத்ததாக, பெண்களின் மீதான ஒடுக்குமுறைகள் வலுவடையத் தொடங்குகின்றன. இலங்கையில் 1977க்குப் பின்னரான காலகட்டமும் பின்பு 2006க்குப் பின்னரான காலகட்டமும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். 2006இல் ஏற்கனவே கொடூர பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்த்த பயங்கரவாதத் தடைச்சட்டம் போதாதென்று அச்சட்டம் மேலும் வலுவாக்கப்பட்டது. ஏற்கனவே, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு இருந்த அதீத அதிகாரங்கள் போதாவென அரசியலமைப்புச் சட்டத்தின் 18ஆந்திருத்தச் சட்டத்தின் மூலம் அவ்வதிகாரங்கள் பன்மடங்காக்கப்பட்டன. அதன் விளைவுகளாக நாம் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் வீதி மறியல் போராட்டம் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய தொழிலாளியின் மரணத்துடன்

முடிந்தது. எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்ட நீர்கொழும்பு மீனவர்களின் போராட்டம் அதேபோல் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய ஒரு மீனவத் தொழிலாளியின் மரணத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின்பு எந்தத் தொழிற்சங்கமுமே இத்தனை காலமாக இன்னமும் வீதிக்கு இறங்கவில்லை. விலைவாசி ஏற்றம் முன்னெப்போதும் கண்டிராத முறையில் இருந்தும்கூட ஒரு தொழிற்சங்கமும் அரசுக்கு சவால் விடத் துணியவில்லை. இதே போன்றுதான் சிறுபான்மையினருக்கெதிரான அடக்குமுறைகள் வெவ்வேறு உபாயங்கள் மூலம் கட்டவிழ்க்கப்படுவதை நாம் காணலாம். அவர்களின் வாழ்விடங்களில் காணிகள் அபகரிக்கப்படுவதனால், அவர்களின் பொருளாதார அடித்தளம் உடைக்கப்பட்டு அரசியல் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுதல், சந்தையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கினை அரச கொள்கைத் திட்டங்களின் மூலம் ஒழித்தல், அவர்களின் பண்பாட்டுத் தளங்களை நேரடியான வன்முறை மூலமும் மறைமுகமான ஊடுருவல் திட்டங்களின் மூலமும் பலவீனமாக்குதல் போன்ற நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன.

பெண்களின் நிலைமையும் இதேபோன்ற அச்சமுறும் நிலையிலேயே இருக்கின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகள் பெருகியிருப்பதை காவல் துறையினர்கூட ஒப்புக்கொண்டுள்ளனர். இக்குற்றச் செயலைப் புரியும் அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளும் தண்டனை ஏதுமின்றி விடுவிக்கப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களை விசாரணை செய்யக்கூட நீதித்துறை பின்னிற்கின்றது. அரசியலில் ஆண்களின் மேலாதிக்கம் அதிகரித்திருக்கின்றது. பெண்களுக்கான இட ஒதுக்கீடு வேண்டும் என்கின்ற கோரிக்கைக்குக்கூட செவிசாய்க்கின்ற உத்தேசம் எந்த அரசியல் தலைவருக்கும் இல்லை. இந்தப் போக்குகளை இன்னமும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு பௌத்த சிங்கள மேலாதிக்கத்தினை இலங்கையில் நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகளை ஆராய்வது நல்லது. பெரும்பான்மையினருக்குத்தான் இந்நாடு சொந்தமானது என ஆரம்பித்த இவர்களது பிரச்சாரம், ஒரு குறித்த சிறுபான்மையினரின் சனப்பெருக்கத்தினைப் பற்றியதாகத் திருப்பம் கண்டது. உடனேயே சிங்கள ஆண்கள் ஐந்து மனைவியரைத் திருமணம் செய்யலாம் என்கின்ற சட்டத்தினைக்கொண்டு வரவேண்டும் என்கின்ற கோஷமாக அது மாறியது. ஐந்து மனைவியரைக்கொண்ட ஒரு ஆணுக்கு அதிக பிள்ளைகள் வருமா அல்லது ஐந்து கணவர்கள் உள்ள ஐந்து மனைவியருக்கு அதிக பிள்ளைகள் வருமா என்கின்ற விவாதம் ஒருபுறமிருக்க, இது பெண்களின் விவாக அந்தஸ்தினை மாற்றுவதற்காக ஒரு சில ஆண்களினால் கொண்டுவரப்பட்ட கோரிக்கையானதைப் பார்த்தோம்.

அது மட்டுமல்லாது, சிங்களப் பெண்கள் இனி சிங்களப் பண்பாட்டினையொட்டி ஆடைகள் அணிய வேண்டும் என்கின்ற நிபந்தனையையும் இப்பொழுது கொண்டு வந்து விட்டார்கள். முன்பு கண்டி நாட்டுச் சிங்களவர்கள் மட்டுமே அணிந்த சேலை முறை இப்பொழுது சகல சிங்களவர்களும் அணியும் சேலை முறையாகிவிட்டது. தனது பிள்ளையின் பாடசாலைக்கு வரும் தாய் சேலைதான் அணிய வேண்டும் என்பது இப்போது கல்வி அமைச்சினால் கட்டாயப்படுத்தப்பட்டு விட்டது. எனது நண்பியொருவர் பாடசாலை நிகழ்வொன்றுக்கு கையில்லாத இரவிக்கையுடன் சேலை அணிந்து சென்றபோது அவ்வதிபர் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டார். பௌத்த சிங்கள அரசினை வலுப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் எங்கு வந்து முடிந்தது பார்த்தீர்களா? எனவே, தொழிலாளர் உரிமைகளுக்காகவும், சிறுபான்மை உரிமைகளுக்காகவும் ஒரு ஜனநாயக அரசினை ஸ்தாபிப்பதற்காகவும் நடத்தப்படும் போராட்டமாகத்தான் பெண்கள் உரிமைகள் இயக்கம் இருக்க முடியும் எனக்கொள்ளலாம்.

# அமைப்புக்கள் ஜனநாயகம் குறித்து செய்யக்கூடிய நடவடிக்கைகள்

அ. ஜனநாயகம் குறித்த விழுமியங்களையும் பண்பாடுகளையும் பெண்கள் அகநிலைப்படுத்துவதற்கான கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

மக்கள் பங்கேற்கும் அரசியற் கட்டமைப்புக்களின் அவசியம், கருத்துச் சுதந்திரத்தின் தேவை, சகல இனங்களையும் குழுக்களையும் உள்ளடக்குவதன் நன்மைகள், இவற்றையெல்லாம் ஏதுவாக்கும் சட்டங்களின் முக்கியத்துவம், இவை தொடர்பான கலந்துரையாடல்களையும் விவாதங்களையும் பெண்கள் மத்தியில் கிரமமாக நடத்த வேண்டும். முக்கியமாக, இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம், நமது தேர்தல் முறைமைகள், அரசியல் கட்சிகளின் பண்பாடுகள் இவை யாவும் விமர்சன நோக்கில் அணுகப்படும் விதத்தில் இக்கலந்துரையாடல்கள் இருக்க வேண்டும். சுருங்கக் கூறில் எதனையும் சமூக நீதி குறித்த பார்வையுடன் நோக்கவும் அணுகவும் பெண் உரிமைவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

சமூக நீதி குறித்த பார்வை உள்ள பெண்கள், ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடும் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஒரு போதும் ஆதரவு கொடுக்கமாட்டார்கள். தேர்தல்களில் அவர்களுடைய வாக்களிப்பு முறைகள் இதனைப் பறைசாற்றி நிற்கும். அவர்கள் மதத் தீவிரவாதத்துக்கு இடம் கொடுக்கமாட்டார்கள். மதத் தீவிரவாதிகள் பெண்களின் ஆடை தொடர்பாக இடும் கட்டுப்பாடுகளையும் அதனை நிலைநாட்டுவதற்கு பிரயோகிக்கும் வன்முறைகளையும் அச்சுறுத்தல்களையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அது அவர்களுடைய சொந்த மதமேயானாலும்கூட, எதிர்த்து நிற்பார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தவொரு நிறுவனத்திற்குள்ளோ அல்லது ஒரு பதவிக்குள்ளோ அதீத அதிகாரங்கள் குவிக்கப்படுவதை எதிர்த்துப் போராடுவார்கள். அதிகாரப் பகிர்வுக்கும் அதிகார மட்டுப்படுத்தல்களுக்குமான வலுவான நிறுவனங்களைத் தாபிப்பதையே எப்போதும் ஆதரிப்பார்கள்.

ஆ. சமூகத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் ஜனநாயகக் கட்டமைப்புக்களைப் பேணும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

ஒரு குறித்த பண்பாடு அகநிலைப்படுத்தப்படுவதற்கு அது தொடர்பான விளக்கமும் அதனை வாழ்க்கையில் பிரயோகித்துப் பெற்ற அனுபவங்களும் முக்கியமாகும். இத்தகைய முறையில் பெண்கள் விழிப்புணர்வு பெறுவதற்கு ஏதுவான நடவடிக்கைத் திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துதல் சாலச் சிறந்தது. முதல் கட்டமாக, அவர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குள் சகல அங்கத்தவர்களுடைய சமத்துவத்தினை உறுதிப்படுத்தலுடன் ஆரம்பிக்கலாம். தீர்மானங்கள் எடுப்பதில் ஆண்களும் பெண்களும் சமமாகப் பங்குபற்றுதல், மற்றும் பிள்ளைகள் மரியாதையுடன் செவிமடுக்கப்படுதல் போன்றவை இவையாகும். அடுத்ததாக, பெண்கள் அமைப்புக்கள் மற்றும் கிராமியச் சங்கங்களுக்குள் ஜனநாயக நடைமுறைகளைப் பேணுவதற்கு உதவவேண்டும். சகல உறுப்பினர்களும் தீர்மானங்களில் பங்கேற்கும் வகையில் கணக்குகளும் நிர்வாக நடவடிக்கைகளும் திட்டச் செயற்பாட்டு விளக்கங்களும் வெளிப்படையான முறைகளில் முன்வைக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும். வேலை செய்யும் அலுவலகங்களில் இயலுமான இடங்களில் கூட்டுத் தீர்மான நடைமுறைகளைப் பெண்கள் ஊக்குவிக்க வேண்டும். தொழிற்சங்கங்களைப் பற்றிய அறிவு அவர்களுக்கு ஊட்டப்பட்டு, அவர்கள் தொழிற்சங்கங்களில் தீர்மானம் எடுக்கும் தளங்களில் பங்குகொள்வதற்கான


ஆதரவினை நல்க வேண்டும். அரசியற் தளங்களான உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள், பாராளுமன்றங்கள் போன்ற சபைகளில் மக்களின் பங்களிப்பும் சட்டவாக்கச் செயற்பாடுகளும் நீதியாக நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். தேர்தல் காலங்களிலும் புதிய சட்ட மசோதாக்கள் சட்டவாக்க சபைகளில் கொண்டுவரப்படும் காலங்களிலும் பெண்கள் இவை குறித்து விழிப்புணர்வுப் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஆதரவுகளை பெண்கள் அமைப்புக்கள் வழங்க வேண்டும்.

## இறுதியாக

இதுவரை பெண்கள் உரிமைகள் குறித்த விவாதங்கள் பிரதான நீரோட்டத்தில் விவாதிக்கப்படும் விடயங்களாக இருந்ததில்லை. பெண்கள் சிலாகிக்கும் ஒவ்வொரு விடயப் பிரச்சினையும் ஏதோ பெண்களுக்கு மட்டுமே உரித்தான பிரச்சினையாகப் பார்க்கப்பட்டு வந்திருக்கின்றது. ஊடகங்கள்கூட அவற்றிற்கு உரிய முக்கியத்துவத்தினை வழங்குவதில்லை. ஜனநாயகத்தினைப் பற்றிய மூல விவாதங்களுடன் பெண்களின் உரிமைவாதத்தினைப் பொருத்துவதன் மூலம் இவ்விவாதத்தினை பிரதான நீரோட்டத்திற்குள் கொண்டுவர முடியும். அதனைச் செய்யும் போக்கில் பெண்கள் தமக்குள் அசாத்தியமான ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள முடியும். அதனைக்கொண்டு எமது சமூகங்களினதும் நாட்டினதும் தலைவிதிகளை மாற்றியமைக்கலாம். ■

**சாந்தி சச்சிதானந்தம்**

● ● ●





காட்டூன்:
தமயந்தி முத்துக்குமாரன

# பிணங்களை அறுப்பவளின் கதை

வெண்ணிற ஆடையை
அணிந்திருக்கும் ஆகாயம்
கறுப்பை உடுத்தும் நாளொன்று
மரணம் பரவியிருக்கும் பூமியில்
மழைத் துளி விழும் கணமொன்று
இந்த வாழ்க்கைப் பயணத்தின்
ஓரிடத்தில் தரிக்க நேர்ந்த
ஜீவிதங்களின் நகர்வில்
சுவாசிக்கும், விம்மும், சிரிக்கும்
ஓசை கேட்கும் எல்லைக்கு வா
ஒரு நாளில்
ஒரு காலைவேளையில்
அல்லது ஓரிரவில்
வந்து போக வா
வாழ்க்கை என்பது இன்னுமொரு
மழைத் துளி மாத்திரமே
என உனக்குத் தோன்றும்
வரண்டு வெடித்த விசாலமான பூமி
கண்ணிமைக்காது முத்தமிடக்
காத்திருக்கும்
மழைத் துளியொன்றுக்கான
ஒரு நொடி
அது வாழ்க்கை

எந்த மனிதனும் செய்வதற்கு பிரியம் காட்டாத தொழில்களெனப் பல உலகத்தில் இருக்கின்றன. ஏமாற்றத் தேவையிராதது, சுய உழைப்பு அதிகமிருக்கக் கூடியது, உடனடி இலாபம் தரக் கூடியது என இப்படிப் பல காரணங்கள் இருந்தபோதிலும் சில தொழில்களை சமூகம் எளிதில் அங்கீகரிப்பதில்லை. எனினும், அவ்வாறான தொழில்களும் கூட யாராலாவது செய்யப்பட்டே ஆக வேண்டும். இல்லாவிடில் உலகம் நாறிப் போய்விடும் என்ற நிலைமை காணப்படுகின்ற போதிலும் சமூகத்தில் இவ்வாறான தொழில்களைச் செய்வதன் காரணமாக வெறுக்கப்படுகின்றவர்கள் உலகில் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

அவ்வாறான தொழிலொன்றைச் செய்யுமொருத்தியின் கதைதான் "நிகினி வெஸ்ஸ (ஆகஸ்ட் தூறல்)" எனும் சிங்களத் திரைப்படமாகியிருக்கிறது. வரண்ட பிரதேசக் கிராமமொன்றில் வேறுவழியின்றி தந்தையின் தொழிலைப் பின்பற்றிச் செய்ய நிர்ப்பந்திக்கப்படும் முதிர்கன்னியொருத்தியின் நடைமுறை வாழ்க்கையை மிக யதார்த்தமாகச் சித்தரிக்க முற்பட்டிருக்கிறது



"ஒருபோதும் நிலத்தை முத்தமிடாத மழை" என பின்குறிப்பிடப்பட்டிருக்கும் இத்திரைப்படம்.

இரத்தக் கறைகளைக் கழுவிக் கழுவி அழுக்கடைந்திருக்கும் வெண்களிப் பாத்திரத்தில் சிந்தும் குழாய் நீரில், கழிவுகள் படிந்திருக்கும் கையுறைகளைக் கழுவும் காட்சியின் பின்னணியில் ஒரு பெண் விசித்தழும் ஓசையோடு படம் ஆரம்பிக்கிறது. அடுத்த காட்சியில் பிணமேற்றிச் செல்லும் பழைய வாகனத்தின் சாரதி ஆசனத்திலொரு பெண் அமர்ந்து வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறாள். அருகில் அவளது வயது முதிர்ந்த தாய். வாகனத்தின் ஆசனங்கள் அகற்றப்பட்ட பிற்பகுதியில் பிணமாகக் கிடத்தப்பட்டிருக்கிறார் அவளது தந்தை. தந்தை இறந்த பிறகு அவரது உள்ளுடல்பாகங்களை அகற்றி அலங்கரிக்கும் நிலைமை எவருக்கும் வருவதை நாம் விரும்பமாட்டோம். ஆனால், அதனை அவள் அழாமலே செய்கிறாள். எல்லாம் முடிந்த பிறகு அழுகிறாள். அவர் செய்து வந்த தொழிலைப் பொறுப்பேற்கிறாள்.

இவ்வாறாக ஆஸ்பத்திரிகளில் சடலங்களாக ஒப்படைக்கப்படும் பிணங்களைப் பொறுப்பேற்று, அதன் உள்ளுடல் பாகங்களை அகற்றித் தைத்து, அலங்கரித்து, அதன் உறவினர்களிடம் ஒப்படைக்கும் தொழிலைச் செய்து வரும் ஒரு கிராமத்துப் பெண்ணைத் தனது திரைப்படத்தின் கதை நாயகியாக்கியிருக்கிறார் இயக்குனர். அவளுக்கு உதவியாளாகக் கடமையாற்றும் இருபது வயதுகளிலுள்ள ஒரு இளைஞன் மற்றும் மத்திம வயதிலுள்ள ஒரு கட்டிட வரைகலைஞர் ஆகிய மூவரும்தான் திரைப்படத்தின் பிரதான கதாபாத்திரங்கள்.

திருமண வயதைத் தாண்டிய தனது மகள் சோமலதாவுக்கு பத்திரிகைகளில் வரன் தேடும் சராசரித் தாயின் நிலைப்பாடு, தனக்குப் பின் தனது மகளுக்குத் துணை யார் என்ற கேள்வியை எஞ்சச் செய்கிறது. தகுந்த வரன்களுக்கு அவள் விண்ணப்பிக்க, வரும் பதில் கடிதங்களை சோமலதா நிராகரிக்கிறாள். பிணங்களை அறுத்து அலங்கரிப்பதைத் தொழிலாகக் கொண்டவளுக்குள்ளும், திருமணம் முடிக்க நேர்ந்தாலும் தான் தொழிலை விடப் போவதில்லையென உறுதியாகச் சொல்பவளுக்குள்ளும் ஒரு கனவு இருக்கிறது. அது, தனது கிராமத்து மக்களுக்காக மயானத்தில் மின்சாரம் மூலமாக பிணங்களை எரிக்கும் கட்டிடமொன்றைத் தனது செலவில் நிறுவுவது. அதற்கான கட்டிடத்தை ஒரு கட்டிட வரைகலைஞர் வரைந்து கொடுக்கிறார். நோயாளியான அக்கட்டிட வரைகலைஞர் மீது அவளுக்குள் எழும் ஒரு தலைக் காதலை ஒரு மெல்லிய புகையென திரைப்படம் முழுவதும் ஊடாடிச் செல்ல வைத்து இறுதிக் காட்சியில் அக்காதலே எதிர்பாராத முடிவுக்கு அவளை இட்டுச் செல்வதை நேர்த்தியாக அணுகியிருக்கிறது திரைப்படம்.

இதற்கிடையில் யாருமற்ற அநாதையென நிற்கும் ஒரு இளம்பெண்ணைக் காதலிக்கும், உதவியாளான இளைஞன் குறித்துத் தெரிய வரும்போது, அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் சோமலதா, பின்னர் அந்த இளம்பெண்ணினதும், அவளது குழந்தையினதும் பிணங்களை அறுத்து அலங்கரிப்பது அதிர்ச்சியுறச் செய்கிறது. அந்த இளைஞனுக்கும், சோமலதாவுக்குமிடையில் நேசமோ, நட்போ இருப்பதாக படத்தில் எந்தக் காட்சியிலும் காட்டப்படவில்லை. எனினும் படத்தின் இறுதிக் காட்சி திரையில் உறைந்து ஓயும்போது அந்த இளைஞன் அவளை யாருக்கும் சொல்லாமலேயே உள்ளூர நேசித்திருக்கும் விதம் திரைப்படத்தை நிமிர்த்தியிருக்கிறது எனலாம்.

வாழ்வின் சில கணங்களில் நாம் யாரையுமே நம்பாத, நம்ப முடியாத சூழ்நிலைகளைக் கடந்துவந்திருப்போம். நிர்ப்பந்தங்கள், நெருக்கடிகள், பலவந்தங்கள், வற்புறுத்தல்கள் மற்றும் ஏமாற்றங்கள் போன்றன இம்மாதிரியான நிலைப்பாடுகளுக்குள் எம்மைத் தள்ளிவிட்டிருக்கும். அவற்றோடு காலமும் நகர்ந்துகொண்டேயிருக்கும். காலம் தரும் முதிர்ச்சியான மனநிலை பல தீர்மானங்களுக்கு மனிதனை எளிதாகத் தள்ளி விடுகின்றது. அத் தீர்மானங்கள் சம்பந்தப்பட்டவரது வாழ்க்கையை முற்றாக மாற்றியமைத்துவிடக் கூடியவை. அது அவரை உயர்த்தவும் கூடும். அதல பாதாளத்துக்கு வீழ்த்திவிடவும் கூடும். ஆனால் சில கட்டாயமான சந்தர்ப்பங்களில் அம்முடிவுகளை எடுக்கவே வேண்டியிருக்கும்.

வெறிபிடித்த காட்டு யானை வந்து தன்னைத் தாக்கிக் கொல்லவேண்டுமென, பரந்து விரிந்த மாபெரும் குளக்கரைக்கு நள்ளிரவில் வந்து காத்திருக்கும் சோமலதாவுக்குள் ஆண்கள் மீது கடும்வெறுப்பும், ஆண்கள் எல்லோருமே மிகவும் மோசமானவர்கள் என்ற நிலைப்பாடும் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. தனது இலட்சியக் கட்டிடத்தை நேர்மையான முறையில் கட்டுவதற்காக அவள் அக் கிராமத்தில் சந்திக்க நேரும் ஆண்கள் எல்லோருமே அவளிடமிருந்து ஏதேனுமொரு பிரதிபலனை எதிர்பார்ப்பது அவளை அம் முடிவுக்குள் தள்ளியிருக்கிறது. பிணங்களை அவளிடம் ஒப்படைக்க இலஞ்சமாகப் பணம் கேட்கும் வைத்தியசாலை சிற்றூழியன், வைத்தியர், கட்டிடம் கட்ட அனுமதிக்கும் கடிதமொன்றைத் தர அவளையே கேட்கும் கிராமத்துத் தலைவன், கட்டி முடிக்கப்படும் கட்டிடத்தைத் திறந்து வைப்பதோடு அதன் அடிக்கல்லில் தனது பெயரைப் போட வேண்டுமெனக் கூறும் அரசியல்வாதி, அவளை வாழ விடமாட்டேனென சதா மிரட்டிக் கொண்டேயிருக்கும் சக சவப்பெட்டிக் கடை முதலாளி என அவள் சார்ந்திருக்க நேரும் ஆண்களெல்லோருமே அவளது மனநிலையில், விரோதிகளாகவே இருக்கிறார்கள். இந்நிலையில்தான் கரப்பான்பூச்சி, சிறு கொசுவுக்குக் கூடப் பயந்து அலறும் கட்டிட வரைகலைஞன் மீது அவளுக்கு ஒருதலைக் காதல் வருகிறது. அவனால் அவளுக்கு மாத்திரமன்றி, எவருக்குமே எந்தப் பாதிப்பும் இல்லை எனும் அளவுக்கு அவன் நல்லவன் எனத் தெளிவாக அவள் உணரும் சந்தர்ப்பத்தில் தனது காதலை அவனிடம் சொல்லத் துணிகிறாள். அதனால் அவளுக்கு நிகழ்வதென்ன என்பதுதான் படத்தின் இறுதிக் காட்சி.



**வெறிபிடித்த காட்டு யானை வந்து தன்னைத் தாக்கிக் கொல்லவேண்டுமென, பரந்து விரிந்த மாபெரும் குளக்கரைக்கு நள்ளிரவில் வந்து காத்திருக்கும் சோமலதாவுக்குள் ஆண்கள் மீது கடும்வெறுப்பும், ஆண்கள் எல்லோருமே மிகவும் மோசமானவர்கள் என்ற நிலைப்பாடும் ஆழமாக வேரூன்றியிருக்கிறது.**

மிகவும் பிரபலமாக இருக்கும் எந்த நடிகையும் ஏற்கத் துணியாத கதாபாத்திரமான சோமலதா எனும் கதாபாத்திரத்தை ஏற்று மிகச் சிறப்பாக நடித்து அசத்தியிருக்கிறார் திரைப்படத்தின் கதாநாயகி சாந்தனி செனவிரத்ன. கிராமத்துப் பெண்களுக்கேயுரிய முக பாவனைகளும், தன்னம்பிக்கையும், தைரியமும் மிளிரும் உடல்மொழியுமாக திரைப்படம் முழுவதும் ஆக்கிரமித்திருக்கிறார். திரைப்படத்தில் இவர் வராத காட்சிகளை எண்ணிச் சொல்லிவிடலாம் எனும்படியாக படம் முழுவதும் முழுமையாக தனது நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். இதுவரையில் இருபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்திருக்கும் இவருக்கு, கடந்த வருடம் நடைபெற்ற "துபாய் சர்வதேச திரைப்பட விழா"வில் இத்திரைப்படத்தில் நடித்தமைக்காக "சிறந்த நடிகை"க்கான விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

கதாநாயகிக்கு நேர்மாறாக திரைப்படத்தின் கதாநாயகனாக நடித்திருக்கும் பிமல் ஜெயகொடி, படத்தின் சில காட்சிகளில் மாத்திரமே வருகிறார். எனினும், படத்தின் திசையைத் தீர்மானிப்பவர் இவர்தான் எனலாம். இன்னுமொரு பிரதான

கதாபாத்திரத்தில் பிணத்தின் பாகங்களைப் புதைக்கும் இளைஞனாக நடித்திருக்கும் ஜகத் மனுவர்ணவின் பாத்திரப்படைப்பு மிகவும் யதார்த்தமானது. காட்டு யானைத் தாக்குதலில், தனது பிரியத்துக்குரிய கர்ப்பிணி மனைவி மரணமுறுகையில் இவரது ஓலமும், மௌனமும் கூட துயரத்தை உரைப்பது சிறப்பு.

திரைப்படமானது, இலங்கையில் காடுகளை அண்மித்து இருக்கும் வரண்ட கிராமங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் இன்னுமொரு பிரச்சினையான காட்டு யானைத் தாக்குதல்கள் குறித்தும் மௌனமாக தனது பார்வையை முன்வைத்திருக்கிறது எனலாம். திரைப்படத்தின் கதை அம்சத்தோடு மேற்படி பிரச்சினையானது, தொடர்ச்சியாக திரைப்படம் முழுவதும் சித்தரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. காட்டு யானைகளால் ஏற்படும் ஆபத்துக்களைச் சொல்கிறது. எனினும் ஒரு யானை கூட இறுதி வரை காட்டப்படவேயில்லை. இவ்வாறாக மரணத்துக்கு மிகவும் நெருக்கமானவர்களுடனான கதையை எழுதி, அதனைத் திரைப்படமாக்கி வெற்றி கண்டிருக்கிறார் இலங்கையின் இளம் இயக்குனர்களில் ஒருவரான அருண ஜயவர்தன. இலங்கை, களனி பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் ஒரு தொலைக்காட்சி அலைவரிசையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றியவர். இவரது முதலாவது திரைப்பட முயற்சியே இதுவாகும். தான் பார்த்து வந்த வேலையை விட்டுவிட்டு, 2011 ஆம் ஆண்டில் இத்திரைப்பட வேலைகளை ஆரம்பித்த இவர் 2012 ஆம் ஆண்டில் திரைப்படத்தைப் பூர்த்தி செய்து வெளியிட்டிருக்கிறார். 112 நிமிடங்கள் ஓடக் கூடிய இத்திரைப்படத்துக்கு மிகப் பொருத்தமாகவும் ஆழமாகவும் இசை வழங்கியிருக்கிறார் இசையமைப்பாளர் நதீக குருகே.

2012 ஆம் ஆண்டு சிங்கப்பூர், பூஸான், மும்பாய், கேரளா, துபாய் ஆகிய நகரங்களில் இடம்பெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களில் இத்திரைப்படமும் திரையிடப்பட்டதோடு, இத்திரைப்படத்துக்கு "2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசியத் திரைப்படம்" எனும் விருது பிரான்ஸில் நடைபெற்ற "வெஸ்ஸோல் ஆசியத் திரைப்பட விழா"வில் கிடைத்தது. அத்தோடு அதே திரைப்பட விழாவில் "NETPAC" விருதும் இத்திரைப்படத்துக்கே கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.



**உலகில் மரணம் மாத்திரமே சிறந்த வியாபாரம் எனக் கூற முயலும் திரைப்படத்தின் முடிவானது எவருமே எதிர்பாராதது. இது ஏன் இவ்வாறு நடந்தது என்ற கேள்வியை கவலையோடு பார்வையாளர்கள் மீது திணிக்கிறது**

உலகில் மரணம் மாத்திரமே சிறந்த வியாபாரம் எனக் கூற முயலும் திரைப்படத்தின் முடிவானது எவருமே எதிர்பாராதது. இது ஏன் இவ்வாறு நடந்தது என்ற கேள்வியை கவலையோடு பார்வையாளர்கள் மீது திணிக்கிறது. நாம் மிகவும் நேசித்த ஒருவரால் மாத்திரமே நமது வாழ்க்கையின் திருப்பங்களையும், முடிவுகளையும் தீர்மானிக்க முடியும். வஞ்சிக்கும் சினேகங்கள் உலகில் பல உள்ளன. ஒரு நேர்கோட்டில் செல்லும் நமது வாழ்க்கையில் குறுக்கிட்டு அதன் பாதையை மாற்றவும், திசை திருப்பவும் அவை முயலும். பலவீனமான இதயங்கள் அச்சாகசங்களினால் ஏமாந்துவிடுகின்றன. வாழ்க்கையை இடைநடுவே நிறுத்திக் கொள்கின்றன. வரண்டு வெடித்த நிலத்தில் விழும் ஒரு துளி மழை உடனடியாகக் காணாமல் போய்விடுவதைப் போல! ■

**எம். ரிஷான் ஷெரீப்**

# ஜனநாயகம்

இலங்கை ஒரு ஜனநாயக நாடாக உள்ள போதிலும் மக்களுடைய உணர்வுகள் ஆரோக்கியமான முறையில் உள்வாங்கப்பட்டுள்ளதா? அல்லது ஆட்சியாளர்களினால் கவனத்தில் கொள்ளப்படுகின்றதா என்பது மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டியதொரு விடயமாகவுள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51 வீதம் பெண்களாக உள்ள போதும் ஜனநாயகத்தில் அவர்களின் பங்கேற்பு குறைவாகவே உள்ளது. அனைத்து துறைகளிலும் பெண்கள் முடிவெடுக்கும் பதவிகளில் காணப்பட்டாலும் உண்மையில் 5 வீதமான பிரசன்னமே காணப்படுகின்றது. பெண்கள், கிராமப்புற மக்கள், ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் போன்ற நாட்டின் சனத்தொகையின் பல பிரிவுகள் வன்முறைகள் மற்றும் நியாயமற்ற நடவடிக்கைகள் காரணமாக தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை அல்லது பங்கேற்காது வெளியேறி விடுகின்றனர். இதனால் ஜனநாயகப் பங்களிப்பில் பெண்கள் பங்கேற்க முடியாதவர்களாக்கப்பட்டுள்ளனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்கின்ற கருவியினூடாக அரசு மக்கள் மீது பலாத்காரமாக செயற்படுகின்ற ஒரு தன்மை காணப்படுகின்றது. மக்களாட்சியில் மக்களது கருத்துக்களுக்கு செவிசாய்க்க வேண்டிய அரசு, சட்டவாக்கம் என்கின்ற ஜனநாயக கருவியினூடாக சட்டங்களை ஆக்கி மக்களை அடக்கியாள்வதனை காணமுடிகிறது. மேலும் அரசு தனது இலக்குகளை அடைவதற்கு மேலாதிக்க சக்திகள் மூலம் ஜனநாயகத்தை பயன்படுத்துகின்ற விதமும் புலனாகின்றது. பெண்களுக்கு ஜனநாயகத்தில் எப்போதும் ஒரு வலுவான பங்கு இருந்தது. உலக சனத்தொகையில் பெண்கள் அரைவாசி என்பதுடன் அவர்களது குரல்கள் ஜனநாயக வழிவகைகளில் கேட்கப்படவேண்டும். ஜனநாயக பிரதிநிதித்துவம் மூலம் பெண்களின் நலன்கள் அல்லது அக்கறை மற்றும் அவர்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும். அரசின் ஒவ்வொரு கட்டமைப்பிலும் பெண்களது நலன்கள் எந்தளவிற்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது என்பது கவனிக்கபடவேண்டிய விடயமாகவுள்ளது.

சிவில் யுத்தத்தின் பின்னரான நிலைமைகளில் காணி உரிமைகள் அரசின் அதிகாரத்துக்குள் கட்டுப்படுத்தப்படுவதையும் இதற்குஅரசு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளும் நீதி கிடைக்குமா? இல்லையா என்ற வினாக்களுடன் காத்திருக்கும் கணவனை இழந்த மற்றும் தடுப்புக்காவல்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் மனைவிமார்/பெண்களின் நலன்களை அரசு கவனத்தில் கொள்வதாகவோ ஜனநாயக முறையில் இதற்க தீர்வு வழங்க வேண்டும் என்பதையோ உறுதிசெய்யாமல் சர்வாதிகாரப்போக்கில் செயற்படுவதையே காணமுடிகிறது.

மேலைத்தேய நாடுகளைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்பது நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படைத்

தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் மக்களது வாழ்க்கைத்தரம் ஜனநாயக நடைமுறைகளால் உத்தரவாதமளிக்கப்படுவதனால் ஜனநாயக மரபுகளும் ஆரோக்கியமான முறையில் அமுல்படுத்தப்படுகின்றன. மனித உரிமைகள், சூழல் பாதுகாப்பு, பெண்ணுரிமைக்கு ஆதரவான கோஷங்கள், சட்டத்துறையின் வளர்ச்சி, திறந்த பொருளாதாரம், பன்முகப்படுத்தப்பட்ட கல்விமுறைமை போன்ற விடயங்கள் ஜனநாயகத்தை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு அதன் பலன்களை மக்கள் அனுபவிக்கின்றனர்.

எமது சமூக சமய கலாசார பொருளாதாரக்கட்டமைப்பு ஜனநாயக ஆட்சிமுறையின் உச்ச பயனைப்பெற முடியாமல் வடிவமைக்கப்பட்டுள்ளதா? அல்லது எம்மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ளதால் எம்மால் பயன்பெற முடியாமல் உள்ளதா? என்பதும் இன்றைய காலகட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.
ஜனநாயத்தின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் விருப்பு என்கின்ற தத்துவத்தின் அடிப்படையில் அரசாங்கங்கள் தங்களுக்கு ஏற்ற வகையில் சட்டங்களை உருவாக்கி சட்டத்துறையின் நிச்சயத்தன்மையையே கேள்விக்குள்ளாக்குவதோடு அரசியல் பழிவாங்கலுக்காக சட்டங்களை பயன்படுத்துவதால் ஜனநாயகம் கேள்விக்குறியாகியுள்ளது. இவ்வாறான நிலமைகளில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களாகும்.

எனவே ஜனநாயகம் என்பது நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படைத்தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் அமைவதுடன் எமது நாடு CEDAW வை ஏற்று அங்கீகரித்துள்ளமையினால் அதன் ஏற்பாடுகளுக்கு அமையவும் ஜனநாயகத்தில் பெண்களுக்கு இடம் வழங்கப்பட வேண்டியதுடன் அவர்களது உரிமைகளுக்கும் ஜனநாயக வழியில் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். ■

**கிசாந்தினி பாலன்**



http://www.bazaardesigns.com/6495-fighting-for-democracy/

## ஜனநாயகத்தின் இறுதி யாத்திரையில்

# பெண்கள் பலிக்கடாக்களா?

> "தனது மனப்போக்கில் நீதியை அழிப்பவர்
> அழித்தொழிக்கப்படுவார்.
> சமுத்திரத்தின் அலைகளே
> மறைந்திருக்கும் புயலின் ஒலியில்
> அவனது குரல் புதைக்கப்படும்
> அவனது முட்டாள்தனமான
> வேலைகளுக்கு
> கடவுளும் சிரிப்பார்"

மனிதர் மிலேச்சத்தனத்தில் இருந்து நாகரீகத்திற்கும், அறிவுடைய மனிதர்களின் தீர்ப்பிற்கு அமையவும் நீதி வழங்க ஆரம்பித்த நாள் முதல், மனிதர் உருவாக்கிய சட்டம் ஆரம்பமாகியது என கிரேக்க நாடகமான இஸ்கிலஸ்சின் இயூமனைட்ஸ் நாடகத்தின் "அனிட்டா" தேவகன்னிகை இவ்வாறு குரலெழுப்பிக் கூறுகிறாள். நீதியின் தேவ கன்னிகையான அனிட்டா தேவதை மூலம் இஸ்கிலஸ் அந்த முதல் வழக்கை நெறிப்படுத்துகிறார். அதன் முறைப்பாட்டுத் தரப்பின் பெண்கள் குழுவின் சார்பில் நீதியின் தேவ கன்னிகையான அனிட்டா தேவதை மூலம் இஸ்கிலஸ் முதன்முறையாக இந்த வழக்கை நெறிப்படுத்துகிறார். நீதியின் தேவ கன்னிகையான அனிட்டா தேவதை பெண் குழுவினர் (தூதர்கள்) தமது தாயைக் கொன்ற மகன் கொலை செய்யப்பட வேண்டுமென இந்த நாடகத்தின் கீழ் வரியின் பொருள் மதிப்பிறக்கம் செய்வதைப் பொருட்படுத்தாமல் தரக்குறைவாகக் கணிக்கப்படுவது கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

முறைப்பாட்டாளர்களான தேவதைகளுக்கு ஒரு கௌரவமான அந்தஸ்தை வழங்குவதற்கு அனிட்டா நடவடிக்கை எடுக்கிறார். கண்ணுக்குக் கண், தலைக்குத் தலை, உயிருக்கு உயிர் பெறும் மிலேச்சத் தன்மையில் இருந்து மனிதனை நாகரீகமயமாக்கும் சட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டாலும், தரங் குறைத்து கணிக்கப்பட்ட பெண்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கு அது செயற்பட்டாலும், செயற்படாவிட்டாலும் எமது இம்முகவுரை இலங்கையின் இரண்டு பெண்களுக்கு எதிராகச் சட்டம் உரிய முறையில் பயன்படுத்தபடாமையும், அதன் மூலம் கடவுள் எவ்வாறு இருப்பினும், ஜனநாயகத்தை மதிக்கும் உலகின் முன்னே இலங்கையில் ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்ட முறையை ஆராய்கிறது.

இலங்கைப் பிரஜைகளுக்கான ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு கடப்பாடு கொண்ட ஜனநாயகத்தின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகள், அவர்களின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அரச நிறுவனங்கள் மற்றும் அரச கொள்கைகள் காரணமாக முட்டாள்தனமாக தனது உயிரைப் பலிகொடுத்த ஒரு பெண் ரிசானா நவ்பீக். இப்பெண் இலங்கைச் சமூகத்தில் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தார். தனதும், தனது குடும்பத்தினதும் வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக சவூதி அராபியாவில் ஒரு வீட்டில் வீட்டுப் பணிப்பெண்ணாக இணைந்தார். இப்பெண் வயது வராத சிறுமியாக இருந்த போதிலும் முழு உலகமும்



**பிரதம நீதியரசருக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றப் பிரேரணையும் விசாரணையும் ஜனநாயக விரோதமானது என உள்நாட்டிலும், சர்வதேச நாடுகளிலும் உள்ள அனைவரும், ஒரு குரலில் எதிர்த்தனர்.**

இன்று இவரை அறிந்துள்ளது. ரிசானா சேவை செய்த வீட்டின் நான்கு மாதக் குழந்தையின் மரணம் தொடர்பாக, சவூதி அரசாங்கம் ரிசானாவைக் கைது செய்தது. அவர் கைது செய்யப்படும்போது 17 வயது இளம் சிறுமியாகவே இருந்தார். அதாவது, 18 வயதிற்கு குறைந்த இப்பெண் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டு வீட்டுப் பணிப்பெண்ணாக சேவை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இலங்கையில் நிலவும் வறுமையே இதற்குக் காரணம். இந்தக் கபடத் தனமான வஞ்சகச் செயலுக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் சட்டபூர்வமற்ற ஏஜென்ஸி நிறுவனம் மாத்திரம் அல்லாமல் அதனுடன் இணைந்த அனைத்து அரச நிறுவனங்களும், அவற்றின் கொள்கைகளும் பொறுப்புக் கூற வேண்டும். சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நா. சமவாயத்தை அமுல்படுத்த கடப்பாடு கொண்ட நாடு என்ற வகையில் இந்த நாடும் ரிசானாவின் கொலைக்கு வகைப் பொறுப்புக் கூற வேண்டும்.

நிலைமை இவ்வாறு இருக்க, நான்கு மாதக் குழந்தையை பராமரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டமையால் ரிசானா, ஷரியா சட்டத்திற்கு அமைய தண்டனைக்குள்ளானார். இலங்கை அரசு இதற்கெதிராக சரியான முறையில் செயற்படவில்லை. பால் தொண்டையில் இறுகி இறந்த குழந்தைக்குப் பதிலாக உயிருக்கு உயிர் வேண்டுமென, ரிசானாவின் எஜமானி மிக இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்த போது, இலங்கை அரசு இது விடயமாக நேர்மையாகத் தலையீடு செய்து ரிசானாவின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என இலங்கை அரசாங்கம் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. இலங்கை ஜனாதிபதி சவூதி அரேபிய மன்னரிடம் ரிசானாவுக்கு விடுதலை வழங்குமாறு கோரிக்கை விடுத்தபடியால் விடுதலை கிடைக்குமென சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் கூறியது. சவூதி அரேபியா அரசின் மன்னரான அப்துல்லா பின் அப்துல் அடீஸின் கவனத்தை ஈர்ப்பதற்கு அனைவரும் தவறிவிட்டனர் என்பது உலகத்திற்கு வெளிச்சமாகியது. அது மாத்திரமல்லாமல் ரிசானா நவ்பீக்கின் மரணதண்டனை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டபோது ரிசானாவின் சார்பில் ஒரு சட்டத்தரணியையும், மொழிபெயர்ப்பாளரையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை. ரிசானாவின் உயிர் அரசுக்கு முக்கியமல்ல. சட்டத்தரணியின் கட்டணமாக நாற்பதாயிரம் டொலரை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு செலுத்தியதாகவே நாம் அறிகிறோம்.

2005 யூன் மாதத்தில் கைது செய்யப்பட்ட ரிசானாவுகக்கு சவூதியின் தவாமி நீதிமன்றத்தினால் 2007 யூன் 16ஆம் திகதி மரணதண்டனை விதிக்கப்பட்டது. 2010 ஒக்டோபர் மாதத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றமும் ரிசானாவின் தலையைச் சீவி மரணதண்டனை நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்ப்பையே உறுதிப்படுத்தியது. 18 வயதைவிடக் குறைந்தவருக்கு மரண

தண்டனை நிறைவேற்றுவதை சவூதி அரசு தாமதித்து காலத்தைக் கடத்தியது. அதே சமயம் இலங்கையின் அதிகாரிகள், இந் நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணியை உழைத்துத் தரும் ஒரு முதன்மை நாட்டின் உழைப்பாளர் படையின் ஒரு பெண்ணின் உயிரைக் காக்கும் தோரணையில் ஒன்றுமே ஒழுங்காகச் செய்யாமல் காலத்தைக் கடத்தினர். ரிசானாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த வேளை எமது நாட்டு ஜனாதிபதி 2012 வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தியபோது, 2012 இல் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அன்னிய செலாவணியாகப் பெற்ற 6 பில்லியன் டொலர் பற்றி பெருமையாகக் கூறினார். 2014 இல் வெளிநாட்டு வருமானம் 10 பில்லியன் டொலராக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சூளுரைத்தார்.

சவூதி அரசும் ஐ.நா.வின் சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கும் 1996 இல் கைச்சாத்திட்டுள்ளது. தமது நாட்டில் வீட்டுப் பணிப்பெண்ணாக ஈடுபடுத்தப்பட்டவர் குறைந்த வயதை உடையவர் என்றால் சவூதி அரசுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பிரச்சினையாக அது அமையும். சவூதி சட்டத்தின்படி ஒரு தாய் தனது குழந்தைக்கு இரண்டு ஆண்டுகள் தாய்ப்பால் வழங்க வேண்டுமென கூறப்படுகிறது. அவ்வாறு இருக்கையில், அந்த வீட்டின் எஜமானி நான்கு மாதக் குழந்தைக்கு புட்டிப்பால் வழங்கவும், கைக்குழந்தையை பராமரிக்கவும் வயது குறைந்த ஒரு சிறுமியை ஈடுபடுத்தியுள்ளார். எனவே சட்டத்தின் முன்னே அவரும் குற்றவாளியாவார். சட்டத்தின் முன்னே குற்றவாளியாகும் ரிசானாவின் எஜமானி தனது குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்த ஒரு மகா பாதகி ரிசானா என்று எடுத்துக் கூறினார். அவ்வாறு இல்லையாயின் சவூதி அரசின் உயர் உத்தியோகத்தரான மேற்படி எஜமானியின் கணவர் தனது செல்வாக்கைச் செலுத்தி சட்டத்திலுள்ள ஓட்டைகளை மூடி மறைத்து உண்மையான சட்டத்தைப் பூசி மெழுகியுள்ளார். சட்டத்தின் முன்னே சமவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற ஜனநாயக ரீதியான உரிமையும் ரிசானாவுக்கு மறுக்கப்பட்டுள்ளதோடு சட்டத்தரணியை அமர்த்தும் உரிமையும் அவருக்கு வழங்கப்படவில்லை.

எப்படியோ நடந்தது நடந்து முடிந்து விட்டது. இலங்கை அரசாங்கம் தனது ஜனநாயகம் என்ற போர்வையை மூடிமறைப்பதற்கு ரிசானாவின் கழுத்தைப் பயன்படுத்தியது. தனது ஜனநாயக எதிர்ப்பினை "ஷரியா" சட்டம் என்ற பெயரில் ரிசானாவின் கழுத்தே சவூதி அரசுக்கும் தேவைப்பட்டது. ரிசானாவின் கழுத்து வெட்டப்பட்டு இரண்டு மணித்தியாலங்களின் பின்னரும் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா, வெகு விரைவில் ரிசானா விடுவிக்கப்படுவார் என்று சூளுரைத்தார். 2013 ஜனவரி 09 ஆந் திகதி காலை முற்பகல் 11.40 க்கு ரிசானாவின் கழுத்து வெட்டப்பட்டபோதிலும், அன்று பிற்பகல் 01.40 மணிக்கு ரிசானா விடுவிக்கப்படுவார் என பாராளுமன்றத்தில் மேற்படி அமைச்சர் உரையாற்றியதை சிறிதேனும் ஜனநாயகத்தை மதிக்கும் ஊடகங்கள் மாத்திரமே அம்பலப்படுத்தின.

> “ சட்டத்தின் தூய்மையான நீரை
> தாம் விரும்பியவாறு அசுத்தப்படுத்த
> வேண்டாம்
> இந்த நீதித்துறையைப் பேணிப்
> பாதுகாக்கவும்
> அப்போது, அந்நீதிமன்றம் உங்களைப்
> பாதுகாப்பதோடு
> தான்தோன்றித்தனமான அதிகாரத்தில்
> இருந்தும்
> அடிமைத்தனத்தில் இருந்தும்
> உங்களைப் பாதுகாக்கும் ”

மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டத்துறையின் முதல் யூரியாக ஏதென்சின் புத்திஜீவிகளுக்கு அழைப்பு விடுக்கும் "அனிதா" தேவதை இயூமனைட்ஸ் நாடகத்தில் பிரஜைகளுக்கு இவ்வாறு கூறுகிறார். இச்சட்டம் இன்றைய இலங்கையில் எவ்வளவு தூரம் தூய்மையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் மூலம்,

தான்தோன்றித்தனமான அதிகாரத்தில் இருந்து பிரஜைகள் காப்பாற்றப்படுகின்றனரா? எவ்வாறாயினும் பிரஜைகள் ஜனநாயகத்தைக் கோரி முன்செல்லக் கூடிய அதி உயர் நிறுவனம் நீதிமன்றமாகும். ஜனநாயகத்தின் காவலரான இந்த நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மைக்கு பாரதூரமான அச்சுறுத்தலை விடுத்து ஜனநாயக விரோத செயற்பாடாக நெறிப்படுத்தப்படுகிறது. இது மற்றுமொரு சிறுமியை பலிக்கடாவாக்கி இது இடம்பெற்றது. ஜனநாயகத்தை மதிக்கும் முழு உலகமும் இலங்கையில் வெட்கக்கேடான முறையில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டதையிட்டு கண்டனம் தெரிவித்துள்ளது. எதுவிதமான சட்டத்தையும், நீதியையும், ஜனநாயகத்தையும் மதிக்காத இலங்கை அரசு பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்தது. அரசின் சொற்படி நடக்கும் கீழ்ப்படிவான ஒரு நபரை பிரதம நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தது. சகலவிதமான பாவங்களையும் அரசாங்கம் வெளிப்படையாகவே செய்தது. எதிர்கால இலங்கைப் பிரஜைக்கு ஜனநாயகத்தின் கடைசி நம்பிக்கையையும் இல்லாதொழித்தது. சட்டமும், ஒழுங்கும் இல்லாத ஒரு நகரத்தில் அராஜகமே தலைவிரித்தாடும். எதிர்கால இருண்ட யுகத்தையே இது பிரதிபலிக்கின்றது.

இவ்வாறாக ஜனநாயக விரோத நடவடிக்கையினால் பலிக்கடாவாக்கப்பட்டவர் சாதாரணமானவர் அல்ல. இலங்கையின் பிரதம நீதியரசர் ஆவார். நீதித்துறையில் அடையக் கூடிய அதிக உயர் பதவியை அவர் வெற்றி கண்டார். இத்துன்பியல் நிலைமைக்கு ஆளாகியவர் பிரதம நீதியரசர் கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா அவர்கள் ஆவார். ஒரு தனிநபர் என்ற வகையில் தனது அனைத்து ஜனநாயக உரிமைகளையும் அவரால் பயன்படுத்த முடியவில்லை. பிரதம நீதியரசருக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றப் பிரேரணையும் விசாரணையும் ஜனநாயக விரோதமானது என உள்நாட்டிலும், சர்வதேச நாடுகளிலும் உள்ள அனைவரும், ஒரு குரலில் எதிர்த்தனர். அதே சமயம், பிரதம நீதியரசரின் பெண்மையைப் பயன்படுத்தி மேற்படி ஜனநாயக விரோத தெரிவுக் குழுக்களின் முன்னே பிரதம நீதியரசர் அழைக்கப்பட்டு அவமானத்திற்கு உட்படுத்தப்பட்டார். நியாயமானதும், சுதந்திரமானதுமான ஒரு விசாரணை ஆணைக்குழு முன்னே அவர் நடத்தப்படவில்லை. பாலியல் ரீதியான சொற்றொடர்களும் அவர் முன்னே பயன்படுத்தப்பட்டன. ஆகவே, வேண்டுமென்றே அவரை அகற்றி விட்டு அவர் ஜனநாயக விரோதமான முறையிலே விரட்டப்பட்டார்.

அவர்களின் உபாயங்கள் வெற்றி கண்டன. அநீதிக்கும் நியாயமின்மைக்கும் எதிராக இத் தெரிவுக் குழுவில் இருந்து பிரதம நீதியரசர் ஒதுங்கிக் கொண்டார். இயற்கை நீதியின் கோட்பாடுகளை மீறி அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இச்செயற்பாட்டின்போது பெண்கள் எதிர்நோக்க முடியாத சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தும் நபர்கள் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்தனர். நீதியும் நியாயமும் தெரிவுக்குழுவில் இடம்பெறவில்லை. ஏற்கனவே அவர் தலைமை தாங்கிய நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு இருந்த அரசியல்வாதிகள் அவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுப்பதற்கு இடமளிக்கப்பட்டது. அவர் இந்நடைமுறையை எதிர்த்த போதிலும் அவை கருத்தில் கொள்ளப்படவில்லை. இலங்கை வரலாற்றில் முதல் பெண் பிரதம நீதியரசராகவும், கல்வியில் மிக உயர்ந்த பட்டங்களையும் பெற்ற திருமதி சிராணி பண்டாரநாயக்காவை விரட்டி அடிப்பதற்கு ஒரு சதி மேற்கொள்ளப்பட்டு அச்சதி இன்று வெற்றி அடைந்துள்ளது. அவர் முன்னே தர்க்கங்களை முன்வைப்பதற்கு எதுவிதமான தகைமைகளுமற்ற நடவடிக்கை மூலம் சிராணியின் திறமையும், கல்வி அறிவும் செல்லாக் காசாக்கப்பட்டன. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அறிஞர்களும், சட்டத்தரணிகளும், அறிவு ஜீவிகளும், தொழில்சார் நிபுணர்களும், மதத் தலைவர்களும், சட்ட நிறுவனங்களும், அரசியல் அமைப்புக்களும், பொதுநலவாய நாடுகளும் இக்குற்றப் பிரேரணை நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு அழுத்தம் கொடுத்தாலும் இலங்கை அரசு அவை ஒன்றையுமே பொருட்படுத்தவில்லை. அவருக்கு எதிரான குற்றப் பிரேரணை

ஜனநாயகத்திற்கு விரோதமானது. இக்குற்றப் பிரேரணை பழிவாங்கும் நோக்கங் கொண்டதாகவும், அரசு விரும்பும் தீர்ப்புக்களை வழங்காமை காரணமாகவுமே அவர் இவ்வாறு பழிவாங்கப்பட்டார். "திவி நெகும" (வாழ்வெழுச்சி) சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு தொடர்பாக இவ்வரசாங்கம் பழிவாங்கத் தீர்மானித்தது. சமுர்த்தி அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்ட எண்பது கோடி ரூபாயை கணக்காய்வாளர் நாயகத்தின் கண்காணிப்பிற்கு உட்படுத்தாமல் தனி ஒரு அமைச்சரின் கீழ் பொறுப்பேற்கப்படுவது மாகாணசபை முறைமைக்கு முரணானது எனவும், இச்சட்டத்தைக் கொண்டு வருவதாயின் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டுமெனவும் தீர்ப்புக் கூறப்பட்டது. இதற்கு முன்னர் அரசுக்கு சாதகமான பல நீதிமன்றத் தீர்ப்புக்களை அவர் வழங்கி இருந்த போதிலும் "திவி நெகும" சட்டம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு அரசுக்கு சாதகமான முறையில் அமையாததே அவரைப் பழிவாங்குவதற்கு காரணமாகும். அவ்வாறு தீர்ப்பளித்திருந்தால் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நீதித்துறையையே சாரும். அரசு ஜனநாயகத்தை பேணிப் பாதுகாக்கத் தயாரில்லை என்றே இதன் மூலம் புரிகின்றது. அரசுக்கு எதுவிதமான சிறு தீங்கையும் விளைவிக்காமல் நீதிமன்றத் தீர்ப்புக்களைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் புதிய பிரதம நீதியரசரை நியமிக்கும் சதித் திட்டத்தின் ஓர் அங்கமே சிராணி பண்டாரநாயக்காவை விரட்டி அடித்ததன் நோக்கமாகும்.

கலாநிதி சிராணி பண்டாரநாயக்க தனது சொத்துக்களைப் பிரகடனம் செய்யவில்லை என அவர் மீது ஓர் குற்றம் சுமத்தப்பட்டது. அவரது கணவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று இருக்கத்தக்கதாக அந்த நீதிமன்றத்திற்கு தனது ஆளுமையைச் செலுத்தக் கூடிய ஒரு பதவியை வகிப்பது தவறு என்பது மற்றுமோர் குற்றமாகும். சிராணி பிரதம நீதியரசராகக் கடமையாற்றும்போது அவரது கணவரை அரசு ஓர் உயர் பதவியில் நியமனம் செய்வதன் மூலம், பிரதம நீதியரசரிடம் அரசுக்கு சார்பான தீர்ப்புக்களைப் பெறுவது ஓர் நோக்கமாகவும்

**ரிசானா நவ்பீக்கின் மரணதண்டனை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டபோது ரிசானாவின் சார்பில் ஒரு சட்டத்தரணியையும், மொழிபெயர்ப்பாளரையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை.**



இருந்திருக்கலாம். கணவனுக்கு எதிராக ஓர் வழக்கு தொடரப்பட்டு இருக்கையில் அவர் பிரதம நீதியரசராகப் பதவி வகிக்க முடியாது என்பதை ஒரு காரணியாக முன்வைத்து அவரைப் பதவியில் இருந்து அரசு நீக்கியது.

தற்போது சிராணி பண்டாரநாயக்காவை நீக்கி புதிய நீதியரசர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். இப்புதிய நீதியரசரான மொஹான் பீரிஸூக்கு எதிராக ஏற்கனவே ஒரு வழக்கு விசாரணையில் உள்ளது.

ஆகவே, இந்த இரண்டு விடயங்களில் பாரதூரமான ஜனநாயக விரோத செயற்பாடு எது என புரிந்துகொள்வதற்கு ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தை அறிய வேண்டிய அவசியமில்லை (S.C.F.R. 536/2010 சுங்கத்திற்கு அறவிட வேண்டிய வரிப்பணம் கபடத்தனமாக செலுத்தப்படாமை பற்றிய வழக்கு மேற்கோள் ராவய பத்திரிகையில் இருந்து எடுக்கப்பட்டது).

இங்கு பிரதிவாதியாக திரு.மொஹான் பீரிஸின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணவனுக்கு எதிரான ஒரு வழக்கு காரணமாக திருமதி சிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் பதவியில் இருப்பது தகைமையற்ற ஒரு செயலாயின் மொஹான் பீரிஸ் அப்பதவிக்கு தகுதியற்றவர் என்னும் விடயம் தொடர்பாக பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், மொஹான் பீரிஸ் அரசாங்கத்திற்கு சார்பாக வாழ்த்துப்பா பாடுவதற்கு எப்போதும் தயார் என்றபடியால் அது ஒரு சாதகமான அம்சமாகும். மக்களுக்குப் பாதகமான ஜனநாயக விரோத அரசாங்கத்தின் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் தீர்ப்புக்களை வழங்கக் கூடிய வேறு தகைமை அவசியமில்லை. நீதித் துறையின் சுயாதிபத்தியம், ஜனநாயகத்தின் காவலன் என்ற வகையில் செயற்படுவது தான்தோன்றித் தனமான ஓர் அரசுக்குத் தேவையற்றதாகும். அதீத அதிகாரங்களைப் பாதுகாப்பதற்கு நாட்டின் ஜனநாயகத்தை சுக்குநூறாக்குவது பிரச்சினையற்றது. அதற்கு ஒரு பெண்ணாக இருக்கலாம் அல்லது ஆணாக இருக்கலாம். உலகம் நோக்கிக் கொண்டிருக்கையிலேயே குறிப்பிட்ட ஜனநாயக உரிமைகளை எதுவித வெட்கமுமின்றி சர்வாதிகார அரசுகள் நடைமுறைப்படுத்தும். இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பாக வெட்கப்படுவோர் ஜனநாயகத்தை மதிப்போர் ஆவர்.

தனக்கு எதிராக குற்றப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு தயார் நிலைமையில் உள்ளமையை அறிந்த போதிலும், தனது பதவியைக் காத்துக் கொள்வதற்காக மன்னிப்புக் கோரவோ, அரசு முன்னிலையில் முழங்காலில் மண்டியிடவோ சிராணி துணியவில்லை. நீதித்துறையின் அதிஉயர் பதவியை வகித்த பெண்மணி என்ற வகையில் மன உறுதியோடு நிலைமையை எதிர்நோக்கினார். அவர் கல்வி அறிவு நிறைந்தவராக இருந்த காரணத்தினால் குற்றப் பிரேரணைக்கு முகங் கொடுக்கத் துணிவோடு முன்வந்தார். ஆனால், உபாயங்களைக் கையாண்டு விசாரணைகளில் இருந்து பாராளுமன்ற தெரிவுக்குழு அவரை ஒதுக்கி வைத்து, போலிக் குற்றப் பிரேரணைகள் மூலம் அவரைப் பதவி நீக்கம் செய்வதே அரசாங்கத்தின் குறிக்கோளாக அமைந்தது. ஆயிரம் பக்கங்கள் கொண்ட 300 ஆவணங்களை விசாரணை மேற்கொள்வதற்கு ஒரு தினத்திற்கு முன்னர் விசாரணைக்குழு அவரிடம் ஒப்படைத்தது. விசாரணைக்குத் தயாராவதற்கு சிராணி காலாவகாசம் கேட்டார். தெரிவுக் குழு அதற்கு இடமளிக்கவில்லை. அவர் சார்பில் சாட்சி கூற முன்வந்தோருக்கு இடமளிக்கப்படவும் இல்லை. ஆனால், அவர் விசாரணையில் இருந்து விலகிய பின்னர் குற்றப் பிரேரணைக்கு சார்பான சாட்சிக்காரர்கள் அழைக்கப்பட்டு இருந்தனர். இந்த கபடத்தனமான விசாரணைக் குழுவில் இருந்து (சபாநாயகர் நியமித்த பாராளுமன்றத் தெரிவுக் குழு) விரட்டி அடிப்பதற்கு இறுதி உபாயமாக அவருடைய பெண்மை ஏளனம் செய்யப்பட்டது. பெண்மையின் கௌரவத்தைக் காப்பதற்கு அவர் விசாரணைக் குழுவில் இருந்து தாமாகவே விலகிக் கொண்டார். தர்க்க ரீதியாக, நியாயமான முறையில் விசாரணை மேற்கொண்டிருப்பின் நிச்சயமாக சிராணி வெற்றி பெற்றிருப்பார்.

பிரதம நீதியரசரை நீக்க வேண்டுமென ஒரு தலைபட்சமாக மேற்கொண்ட தீர்மானம் பாராளுமன்ற பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்படுமென்று கூறினாலும் அது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. சபாநாயகர் 2012 டிசெம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்தார். இவ்வாறு நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பாக 2013 ஜனவரி 11 ஆந் திகதி மேற்படி தெரிவுக் குழுவின் பெறுபேறுகளை அக்குழு சபையில் முன்வைத்து பிரதம நிதியரசரை நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது முற்றிலும் சட்டவிரோதமானதாகும். அவரை பதவியில் இருந்து நீக்குவது இயற்கை நியதிக்கு மாறானது. பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்பு தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து சிராணி தாமாகவே விலகிக் கொண்டார். இந்நடவடிக்கை ஒரு மோதலை தவிர்ப்பதற்கான நடவடிக்கையாக அமைந்ததையிட்டு அனைவரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர். மிகப் புத்திசாலித்தனமாகவும். நிதானமாகவும் செயற்பட்ட பிரதம நீதியரசர் தொடர்பான தகவல்களை அறிக்கையிடுவதற்கு அரசு

ஊடகங்களுக்கு இடமளிக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக அரச ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது, அதற்கு அவசியமான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அரசு வழங்கியது. ஒரு பெண் என்ற வகையில் பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்வந்த நீதித் துறையின் பாதுகாவலரான திருமதி சிராணி பண்டாரநாயக்க எதேச்சதிகாரம் கொண்ட அரசியல் அதிகாரத்தினால் வெளியேற்றப்பட்டாலும், இலங்கையின் ஜனநாயகம் பற்றி உரையாடும்போது ஒரு முக்கிய பாத்திரமாக உலகப் பிரசித்தி பெற்றார். அவருடைய ஜனநாயக உரிமைகள் மோசமான முறையில் மீறப்பட்டமையை உலகமும் அறிந்து கொண்டது. அதேசமயம், ஜனநாயக உரிமைகள் மீறப்படும்போது எத்தகைய சக்திவாய்ந்த பாத்திரமாக இருந்த போதிலும், தீவிரவாதிகள் பெண்மையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதையும் உலகம் கண்டது.

சட்டத்துறையைச் சார்ந்த சமூகத்தினர் நீதித்துறையின் சுயாதிபத்தியத்தையும், நாட்டின் கௌரவத்தையும் பாதுகாப்பதற்கு பாரிய போராட்டம் ஒன்றை நடத்தினர். ஆனால், ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கைவிட அரசு தயாராக இருக்கவில்லை. சர்வதேச சமூகம் இது அநீதியானது என்று எவ்வளவு எடுத்துரைத்தாலும் அரசு அதற்கு செவிசாய்க்கவில்லை. சர்வதேச சமூகம் என்னதான் கூறினாலும் அரசு தனது அதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டதே தவிர இராஜதந்திர ரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு முன்வரத் தயாராகவும் இருக்கவில்லை. துணிவுமிக்க பெண்ணாக நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க சிராணி பண்டாரநாயக்க முன்வந்தாலும் எவ்வகையிலும் பொருத்தமற்ற ஒரு நபரையே பிரதம நீதியரசர் பதவிக்கு அரசாங்கம் நியமித்தது. சுயாதீனமான "நீதித்துறையைக் கண்டு அஞ்சுபவர்கள் துஷ்டத்தனமான ஆட்சியாளர்களே" என ஒரு கூற்று உண்டு. இதைப் புரிந்துகொள்ளும் துணிவுமிக்க ஆண்களும் பெண்களும் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க எப்போதும் முன்வருவர். ஆனால், இது இயல்பாக இடம்பெறமாட்டாது. மக்கள் இவ்விடயத்தில் முன்னணிப் பாத்திரம் வகிக்க வேண்டும். மேற்கூறிய இரண்டு பெண்களுக்கு எதிராக ஜனநாயகம் எவ்வாறு செயற்படத் தவறியது எனப் பார்த்தோம். ஜனநாயகம் தரங் குறைக்கப்பட்டால் மக்களுக்கு ஆபத்து விளையும். இந்நடவடிக்கைகளையிட்டு மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். நாடு சீரழியும் வரை வெறுமனே பார்த்துக் கொண்டிருத்தல் ஜனநாயகம் என தவறாகப் புரிந்துகொள்ளவும் கூடாது. மக்களின் எதிர்ப்புக் குரலை ஆட்சியாளர்கள் பயங்கரவாதம் என்றே வர்ணிப்பர். மாற்றுக் கருத்துக்களை வகிப்போர் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படக்கூடும். ஆய்வற்ற தேசப்பற்றையும் மதத் தீவிரவாதத்தையும் முன்னெடுத்துச் செல்ல ஆட்சியாளர்கள் பின் நிற்கமாட்டார்கள். இதனால், மக்கள் அச்சமடையக் கூடும். ஆனால் அச்சத்தைப் போக்கி ஜனநாயகத்தை நிலைநாட்ட, சுதந்திரத்தை நிலைநாட்ட, முன்னோக்கிப் பயணிப்பதன் மூலமே அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

“அச்சம் தவிர்ந்தால்
நல்லாட்சியை நிலைபெறச் செய்ய முடியும்
நல்லாட்சி இன்றேல் பாவச் செயல்கள்
அதிகரிக்கும்
நாம் விழிப்புடன் இருக்காவிட்டால்
சட்டம் துச்சமென மதிக்கப்படும்
குற்றமற்றவர்கள் கண்டகண்ட இடங்களில்
கொலை செய்யப்படுவார்கள்
சட்டமும் ஒழுங்குமற்ற நகரம்
அராஜகத்தின் விளையாட்டுத் திடலாகும்.”

ஜனநாயகத்தை இழந்த மேற்கூறிய இரு பெண்களின் சார்பாக, ஜனநாயகம் அச்சுறுத்தப்படுகின்ற இவ்வேளையில் சட்டத்தின் தேவதையான அனிட்டாவைப் போல, அனைத்து பிரஜைகளும் ஓரணி திரண்டு குரலெழுப்ப வேண்டிய காலம் வந்து விட்டது. சட்டமும் ஒழுங்கும் இல்லாத ஒரு தேசத்தை அதிகாரப் பேராசை கொண்ட பாவிகளின் விளையாட்டுத் திடலாவதைத் தவிர்த்து ஜனநாயகத்திற்குக் குரலெழுப்ப வேண்டிய காலம் வந்து விட்டது. ■

**சீத்தா ரஞ்ஜனி**

# யுத்தத்திற்குப் பின்னரான
# பெண்களது காணி உரிமை

போருக்குப் பின்னரான மீள் அபிவிருத்தியிலே இலங்கை அரசாங்கமானது பல சர்வதேச நிறுவனங்களுடனும் இந்தியா மற்றும் சீனா போன்ற வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் சேர்ந்து வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை மீளக் கட்டியமைத்து வருகின்றது. இந்த அபிவிருத்தியின் முகவர்களாக ஆண்களே இருந்து வருகின்றனர். அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்களில் பெண்கள் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கை யுத்தம் முடிவடைந்திருக்கின்றமையானது குண்டு வீச்சுக்களை நிறுத்தியிருக்கின்றதே தவிர வடக்கு கிழக்கில் வாழுகின்ற மக்களின் வாழ்க்கையின் வேறு எந்தச் சூழ்நிலையினையும் மாற்றவில்லை. ஆண்களாலேயே ஆரம்பிக்கப்பட்டு ஆண்களாலேயே முடித்து வைக்கப்பட்ட இராணுவ யுத்தம் முடிவடைந்ததன் பின்பும் இலங்கை அரசாங்கமானது தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தினை அமுல்படுத்தி வருகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகாலச் சட்டங்களும் சேர்ந்து மக்களின் நடமாட்டம், நடமாட்டத்திற்கான உரிமை, மக்கள் ஒன்றுகூடுவதற்கான உரிமை, அவர்களின் வேலைவாய்ப்பிற்கான உரிமை, அவர்களின் வாழ்வாதாரத்திற்கான உரிமை ஆகியவற்றினை யுத்தத்தினால் அனைத்தையும் இழந்த மக்களுக்கு இல்லாமல் ஆக்கியிருக்கின்றது. அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்தினால் கிராம மட்டத்தில் கூட பொதுத் தளங்களை பெண்கள் அணுகுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதாக அரசாங்கம் கூறிவருகின்ற போதிலும் இந்தச் செயன்முறையானது கட்டமைக்கப்படாததாகவும் அரசியல் ரீதியாக முனைப்புப் பெற்றதாகவும் ஆகக்குறைந்த தராதரங்கள் கூட அற்றதாகவும் காணப்படுகின்றது. அண்மையிலே அரசாங்கம் காணிகள் வழங்கப்படுவதை சுற்றுநிருபம் மூலம் தடுத்தமையானது காணியற்ற மக்களை நட்டாற்றில் தள்ளியிருப்பதுடன் அவர்கள் மீளக்குடியேறுவதையும் இயலாமலாக்கியிருக்கின்றது.

காணி என்பது மக்களின் வாழ்க்கையின் முக்கியமான அம்சமாக இருக்கின்றது. காணியானது மக்களுக்கு எதிர்பார்ப்புக்களையும், உரித்தையும், வாழ்வாதாரத்தினையும் கௌரவத்தினையும், பெண்களுக்கு வழங்குகின்றது. பெண்களின் வாழ்வானது அவர்களுக்குச் சொந்தமான காணியுடன் இரண்டறப் பிணைந்திருக்கின்றது. ஒருவர் அவருடைய காணியினை இழப்பதானது அவரின் வாழ்வினையும் அவரின் அடையாளத்தையும் அவரிடமிருந்து அகற்றுவதற்கு ஒப்பான கொடூரமான செயலாகும். மக்களுக்குக் காணி எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்திருந்தும் கூட காணியை அபகரிக்கின்ற சம்பவங்கள்

இலங்கையில் துரதிஷ்டவசமாக நடைபெற்று வருகின்றன.

வடக்குக் கிழக்கில் இலங்கை அரசாங்கமானது உயர்பாதுகாப்பு வலயம் என்கின்ற பெயரிலே மக்களின் காணிகளை அபகரித்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரிலே உயர் பாதுகாப்பு பிரதேசம் என்ற பெயரிலே ஆயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர். பின்பு அவர்களின் காணியானது இறுதியிலே இந்திய அரசாங்கத்தின் நிலக்கரி மின்னாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்து மக்கள் தங்களுடைய காணிகளுக்கு உரிய உறுதிகளைக் கொண்டுள்ள போதிலும் கூட இந்த நிலைமை நடைபெற்றிருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள முள்ளிக்குளத்திலே இராணுவம் அபகரித்திருந்த மக்களின் காணிகளை அவர்களுக்கு இப்பொழுது மீளவழங்க மறுத்துவருவதுடன் அங்கே வீடுகளை தங்களின் சொந்தப் பாவனைக்காகப் புதுப்பித்தும் வருகின்றனர். மன்னாரில் உள்ள சிலாவத்துறையிலே மக்களின் காணிகளை இராணுவம் எடுத்துள்ளது.

அம்பாறை அஷ்ரப் நகரில் உள்ள மக்களை இராணுவம் வலுக்கட்டாயமாக விரட்டிய பின்னர் அவர்கள் செய்து வந்த வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச் செய்கையைத் தாம் செய்து வருகின்றனர். அதேபோல மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட சிலாவற்றறைப் பகுதியைத் தமதாக்கிக் கொண்டு அப்பிரதேச மக்கள் செய்து வந்த மீன்பிடித் தொழிலை கடற்படையினர் அவர்களே செய்கின்றனர். யுத்தம் இடம்பெறாத முள்ளிக் குளம் போன்ற பகுதிகளைத் தம் வசம் வைத்துள்ள இராணுவமானது மக்களது வாழ்வாதாரத் தொழில்களைத் தாம் செய்து வருகின்றனர். இன்றுவரை முள்ளிக்குள மக்கள் தற்காலிகத் தங்குமிடங்களில் மற்றும் தெரிந்தோர் காணிகளில் குடியிருந்து வருகின்றனர். தாமே தொழில் உபகரணங்களைக் கொண்டு கடற்றொழிலை மேற்கொண்டு வந்த இவர்கள் இன்று கூலிக்கு மீன் பிடிக்கச் சென்று சொற்ப சம்பளத்தைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிலும் மற்றும் இடம்பெறாத பகுதிகளிலும், மீள் குடியேற்றப் பக்கங்களிலும் இராணுவமானது மக்களது தொழில்களைத் தமது கைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்து நடாத்துகின்றது.

வன்னிப் பகுதியில் குறிப்பாக A9 வீதியியோரத்தில் உணவுச் சாலைகளை அமைத்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பயணிகளது உணவுத் தேவைகளை தாம் நிறைவு செய்கிறனர். இதனால் ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் ரீதியிலும் பெரும் தாக்கத்தை இராணுவம் செலுத்தி வருகின்றது. நாட்டில் பல பகுதிகளில் இராணுவம் மரக்கறி விற்பனையிலும் ஈடுபடுகின்றது. கிழக்குப் பகுதியை எடுத்தால் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் கடற்கரையோர உல்லாசப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் உள்ள மக்களது காணிகளை வலுக்கட்டாயமாகவும், பயமுறுத்தியும் விற்கச் செய்கின்ற போக்குக் காணப்படுகின்றது. அவற்றில் உணவுச் சாலைகள், விடுதிகள் என்பவற்றை முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்கள் நடாத்தி வருகின்றனர். எவ்வித நஷ்ட ஈடும் இன்றி காலம் காலமாக அங்கு வாழ்ந்த மக்கள் உண்ண உணவுக்கு வசதியின்றி வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கத்தினால் வடக்கு கிழக்கிலே எவ்வாறு காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்பதற்கு இவை சில உதாரணங்களாகும். இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள காணிகளில் பெரும்பாலானவை வளமான நிலங்களாகவும் கடற்கரைப் பிரதேசங்களைச் சேர்ந்தவையாகவும் இருக்கின்றன. இவை உள்நாட்டில் இடம்பெயர்ந்து திரும்பிவருகின்ற மக்களின் வாழ்வாதாரத்தில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் அரசாங்கமானது காணிகளை இழந்த இக்குடும்பங்களுக்கு நட்டஈட்டினை வழங்கியுள்ள போதிலும் அவை மிகவும் சொற்பமான தொகையாக இருப்பதுடன் இக்குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்குப் பொறுத்தமற்றவையாகவும் இருக்கின்றன. ஏற்கனவே வாழ்ந்த மக்களது பாரம்பரிய வாழ்க்கை மற்றும் தொழில் முறைமையை இல்லாது ஒழிப்பதாகவே வழங்கப்படுகின்ற

நஷ்டஈடுகள் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வருகின்ற உள்நாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம் பெண்கள் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு பல இடர்களை எதிர்கொள்கின்றனர். தாம் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இடத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கும் அங்கிருந்து செல்வதற்குமான பிரயாணச் செலவினையும் செலவழிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உணவு முத்திரையின் செலவினையும் இவர்கள் பெற்றுக் கொள்வதில்லை. அத்துடன் இந்தப் பயணத்திற்கு இடைப்பட்ட பிரதேசங்களில் இவர்கள் தங்குவதற்கு தங்குமிட வசதி எதுவும் இல்லையென்கின்ற காரணத்தினால் இவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இடத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் சென்றுவருவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். இம்மக்களில் அதிகமானோர் கடந்த 22 வருடங்களாக புத்தளத்தில் வாழ்ந்து வருகின்றனர். வடக்கிற்குத் திரும்பிச்சென்று மீளக் குடியேறத் தீர்மானமெடுத்துள்ள மக்கள் வறியவர்களாகவும் காணியற்றவர்களாகவும் இருக்கின்றனர். குடும்பமொன்று திரும்பிச் செல்லத் தீர்மானித்து யாழ்ப்பாணத்தில் தாமாகவே தம்மைப் பதிவுசெய்து கொண்டால் அந்தக் குடும்பங்கள் உடனடியாகவே பல இக்கட்டுக்களுக்கு முகங்கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இரண்டு தரப்பிலும் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் இறப்புச் சான்றிதழ்களையோ, பிறப்புச் சான்றிதழ்களையோ பதிவு பூர்த்தியாகாதவிடத்து வழங்குவதற்கு மறுக்கின்றனர். திரும்பிச்செல்வதை வசதிப்படுத்துதவதற்கு அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படுவதில்லை

போருக்குப் பின்னரான மீள் அபிவிருத்தியிலே இலங்கை அரசாங்கமானது பல சர்வதேச நிறுவனங்களுடனும் இந்தியா மற்றும் சீனா போன்ற வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் சேர்ந்து வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை மீளக் கட்டியமைத்து வருகின்றது. இந்த அபிவிருத்தியின் முகவர்களாக ஆண்களே இருந்து வருகின்றனர். அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்களில் பெண்கள் உள்ளடக்கப்படவில்லை. அபிவிருத்திப் பணிகளில் அவர்களுக்குத் தொழில்வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றது.

வன்னிப் பகுதியில் வீதியருகே அமைந்துள்ள கடைகள் பெருமளவில் இராணுவத்தினராலேயே நடாத்தப்படுகின்றன. இது பெண்களின் வாழ்வாதார வாய்ப்புக்களை தட்டிப் பறித்திருக்கின்றது. இராணுவத்தின் மீது உள்ள அச்சம் காரணமாக இவ்வாறான கடைகளைத் திறப்பதற்கு பெண்கள் அச்சப்படுகின்றனர். பாதுகாப்புக் காரணங்களினாலும் பெண்களின் நடமாட்டமானது கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றது. சிறுபான்மைச் சமுதாயத்தினருக்குச் சொந்தமான காணிகளை எடுத்துக் கொள்வதை நிறுத்துமாறும், மக்களிடமிருந்து காணிகளை அபகரிக்கும்

**வன்னிப் பகுதியில் குறிப்பாக A9 வீதியியோரத்தில் உணவுச் சாலைகளை அமைத்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பயணிகளது உணவுத் தேவைகளை தாம் நிறைவு செய்கிறனர். இதனால் ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் ரீதியிலும் பெரும் தாக்கத்தை இராணுவம் செலுத்தி வருகின்றது.**

அதிகாரத்தில் உள்ளவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் பல தரப்பினரும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். அத்தோடு இலங்கை அரசாங்கமானது யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களின் மீள்குடியேற்றத்தினை துரிதமாக செய்வதாகக் கூறுகின்றது. இருப்பினும் திரும்பி வருவோருக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் பாதுகாப்பினையும் வழங்குவதில் குறைபாடுகளே மேலோங்கி உள்ளன.

ஆகவே, போருக்குப் பின்னரான பெண்களது வாழ்வாதார மற்றும் காணியுரிமைகள் இராணுவமயமாக்கப்பட்ட சூழலில் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளன. காணி அபகரிப்பினால் பெண்களது நடமாட்ட சுதந்திரம் உட்பட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளும் பறிக்கப்படுவதோடு மோதலுக்குப் பின்னரான மீள் அபிவிருத்தியிலே பெண்கள் கடனாளிகளாகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களாகவும் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்காக அல்லலுடன் போராடுபவர்களாகவே வாழ்கிறார்கள். இவ்வாறான பின்னணியிலேயே தற்காலத்தில் பெண்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர் என்பது வேதனைக்குரியது. இவற்றின் பெறுபேறாகவே தாய்மார் தமது குழந்தைகளோடு தற்கொலை செய்கின்ற சம்பவங்கள் உருவாகின்றன. இவற்றினைத் தடுப்பதற்கு பெண்களது வாழ்வாதாரம் மற்றும் காணி தொடர்பான விடயங்களில் அரசு கவனம் செலுத்துவது இன்றியமையாத ஒன்றாகும். ■

**வடக்கு கிழக்கு பெண்கள் அமைப்பு**

# ஏமாற்றமாகிப்போன உணர்வுகள்



என் உணர்வுகள் மதிக்கப்படாது
சீரழிக்கப்படுகின்றன
எப்போதும்
அவர்களுக்குத் தேவையானதை
மட்டுமே
என்னிடத்தில் இருந்து
பிழிந்தெடுக்கின்றனர்.
ஏமாற்றமாகிப்போன
உணர்வொன்றிப்பற்ற
உடல்களின் உரசலாக மட்டுமே
உள்ளதால்
என் உணர்வுகளைக் கூட நான்
மதிப்பதில்லை
சதைப் பிண்டமாகப்பட்ட
எனது உடலும் உயிரும்
புறக்கணிக்கப்பட்ட
உணர்வுகள் வற்றிய
உயிர்ப்பின்றி செத்தவைகளாகவே
இந்தத் தொடுகையும் உறவும்
இன்னும் தொடர்கின்றன...

**குகா**

**அரசாங்கத்தால் தினமும் அதிகரிக்கப்படுகின்ற உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் போசாக்கின்மையை எதிர்கொள்கின்றார்கள்.**



# மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வாழ்தலுக்கான உரிமைகள்

இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவு தொடர்பாக மக்கள் தமது விசனத்தைத் தெரிவிக்கின்றனர். இருந்த போதிலும் அரசாங்கம் அது தொடர்பாக எவ்வித அக்கறையும் இன்றி அலட்சியமாக இருப்பதாகவே அதனது தொடர் செயற்பாடுகள் தெளிவுறுத்துகின்றன. ஏனெனில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அடிக்கடி விலையேற்றம் செய்வதன் ஊடாக நாட்டில் பலரும் வருமானப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு காரணமாக முன்பு யுத்தம் கூறப்பட்டு வந்தது. நாட்டின் பாதுகாப்புச் செலவினைக் காரணம் காட்டி அரசாங்கம் கூறிய விளக்கமானது தற்போது அவசியமற்ற ஒன்றாகி விட்டது.



புகைப்படம் - வேலாயுதம் ஜெயச்சித்ரா

இருந்தபோதிலும் யுத்தத்தின் பின்னரான மீள் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு என்பன மந்த கதியான வேகத்தில் செல்கின்ற போதிலே இவ்வாறான விலையேற்றம் நாட்டில் வறுமை மற்றும் போசாக்கின்மையையே கொண்டு வரும். குறிப்பாகப் பெண்களின் நிலை பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. இதனடிப்படையில் தற்போது அரசாங்கத்தால் தினமும் அதிகரிக்கப்படுகின்ற உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் போசாக்கின்மையை எதிர்கொள்கின்றார்கள். திட்டமிட்டு அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களினை விலையேற்றுகின்ற போது, நாட்டிலே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு முன்வருவதில்லை. தமது வருமானத்தினைக் கொண்டு குடும்பங்களில் மிகச் சொற்பமான அளவு விடயங்களையே அவர்களால் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை யுத்த காலத்தில் இடம்பெற்ற உயிர் அழிவு மற்றும் பொருளழிவுகளில் இருந்து இன்னமும் மீளாத சிறுபான்மைச் சமூகமானது இவ்வாறு அடிக்கடி உயர்ந்து கொண்டே செல்கின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் திணறுகின்றதை அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. அத்தோடு வடக்குக் கிழக்கு இளைஞர், யுவதிகள் பெருமளவில் அரச உத்தியோகத்தை மட்டுமே நம்பி உள்ளார்கள். ஏனெனில் அங்கு கொழும்பு மற்றும் பிற பகுதிகளைப் போன்று தனியார் துறையில் வேலை வாய்ப்புப் பெறுவது குறைவு. அதற்கான வசதிகளும் அருகியே காணப்படுகின்றன. இந்த வேளையில் அரசாங்கமானது வேலை வாய்ப்பு வழங்குவதில் கூட பாரிய இழுத்தடிப்புகளை மேற்கொள்கின்றது. போதிய வருமானத்தை வழங்கி விட்டு பொருட்களை விலை உயர்த்துவதால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் வந்துவிடாது. ஆனால் வருமானப் பற்றாக்குறை, வேலை வாய்ப்பு, அகதி முகாம் வாழ்க்கை, மீள்குடியேற்றத் தாமதம், இருப்பிடங்கள் அபகரிப்பு போன்ற பல்வேறு காரணங்களை நிறைவு செய்யாது அத்தியாவசியப் பொருட்களை தினம் தினம் உயர்த்துவதால் சாதாரணமாக உழைத்து வாழ முற்படுகின்ற மக்களது நிலை கவலைக்கிடமானது.

யுத்தம் பெருமளவில் பெண்களையும், குழந்தைகளையுமே இன்று தனிமையாக்கியுள்ளது. அவ்வாறிருக்கும் போது, வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு, வேலை வாய்ப்பின்றி சிறிய சிறிய கூலி வேலைகளைச் செய்து வாழ்கின்ற பெண்தலைமை தாங்கும் குடும்பங்களது நிலை பற்றிக் கூற வேண்டியதில்லை. அதுமட்டுமன்றி இராணுவமானது தமது பாதுகாப்பைக் காரணம் காட்டி வடக்குக் கிழக்கில் சிறுபான்மைச் சமூகத்தின் குடியிருப்புகள், தொழில்வளம் மிக்க இடங்கள் போன்றவற்றை அபகரித்து வருகின்றது. அவ்வாறு அபகரிக்கப்படுகின்ற இடங்களில் செய்யக் கூடிய தொழில்களைத் தாமே செய்து வருகின்றனர். இதனால் பெண்கள் தமது பிள்ளைகளுக்குப் போதியளவு உணவைத் தானும் கொடுக்க முடியாத பாரிய இக்கட்டுக்குள் சிக்கியுள்ளார்கள்.

இவற்றைக் கொண்டு பார்க்கும் போது சாதாரண மக்களது அன்றாடத் தொழில்களையெல்லாம் இராணுவமானது தாம் செய்வதோடு மட்டுமல்லாது மக்களது வாழிடங்களையும் தம்வசம் வைத்திருப்பதால் பொது மக்களது வாழ்க்கை எப்படி சுபீட்சமடையும்? யுத்த வெற்றியால் மட்டும் எல்லோரும் நிம்மதியுடன் வாழ்ந்து விட முடியாது. வாழ்க்கையை வாழ்வதற்கு உணவு, உடை தொழில் உட்பட்ட அடிப்படைத் தேவைகள் இன்று இல்லாது போய்க் கொண்டிருக்கின்றன. இதுவரை காலமும் நாட்டினை சின்னாபின்னமாக்கிய யுத்தத்தினைக் காரணம் காட்டி இனிவரும் காலத்தில் மக்களது வாழ்வாதரத்தை மற்றும் வாழிடங்களை அத்துமீறி அபகரித்தல், உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து வருவதால் வறுமைப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிப்பதோடு போசாக்கின்மை மற்றும் நோய்த் தாக்கத்தை எமது சந்ததி எதிர்கொள்ள நேரிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை ■

**குகநிதி குகநேசன்**

# தொன்னையும் நெய்யும்

இன்று எங்கள் நிறுவனத்தின் ஆண்டுவிழா.

அதற்கான ஏற்பாடுகள் வெகு பிரமாதமாக இடம்பெறுகின்றன.


இந்தக் குளிர் உறைந்த ஊரில் வாழையை எங்கே தேடுவது? நாலு அடி உயரமான பிளாஸ்ரிக் வாழைதான் கை கொடுத்தது. பூக்கள், மலர்ச் சரங்கள் என வாடாத பூக்களைக் கொண்டும் ஐம்பதைத் தாண்டிய இளைஞர்களும், இளைஞிகளும் பரபரப்போடு அம்முதியோர் இல்லவிழாவுக்கு அழகூட்டுகின்றனர்.

ஜெசிக்கா காலை எழுந்த நேரம் தொடக்கம் கண்ணாடி முன்னே நின்று தனது தலைமுடியை அழகுபடுத்துவதற்குக் கண்களை முழுங்கிக் கிடக்கும் மூக்குக் கண்ணாடியூடாகப் பார்த்துச் சரி செய்கிறா.

யோகம், மாலினி, ரேவா, பாலா யாவரும் வேணு குழுவோடு இன்று மாலை இடம்பெறவுள்ள நாடகத்திற்கு ஒத்திகை பார்க்கின்றனர்.

செல்லம்மா, முத்தழகி, மிராண்டா, தெய்வானை, லோரன்ஸ் என ஒரு பெரிய கூட்டம் நரம்பும் உடம்பும் ஜதிக்கும் தாளத்திற்கும் தயக்கமுறும் முதுமையிலும் நடனப் பயிற்சியில் மூழ்கியுள்ளனர்.

கவனித்து பார்த்தால் கால் சுகமில்லாத கனகா தவிர மற்றைய யாவரும் ஏதோ ஒரு எடுகோளோடு உற்சாகமாக இருப்பது இந்தக் குளிர்நாட்டில் எத்தனை இனிமையானது.




இவ்வயோதிபர் இல்லத்தில் தங்கியிருப்போர் அனைவருமே 55 வயதைக் கடந்தவர்கள். 80, 84 களிலும் இளைஞரைத் தோற்கடிக்கும் துடிப்புடன் அங்கத்தவராயிருக்கும் வயதேறிய இளைஞரை என்னென்பது?

"கண்மணீ சகுந்தலா என் காதல் ரோஜாவே எங்கே உன் மலர்க்கரங்கள்? இங்கே மிக அருகில் வா இதோ என் நினைவாக என் காதலின் சின்னமாக இக்கணையாழியை உன் தளிர் விரல்களில்........." முதியோர் இல்ல ஆண்டுவிழாவிலே இடம்பெறவுள்ள சகுந்தலை நாடகத்தின் ஒத்திகை அரங்கேறுகிறது. சகுந்தலாவாக நடித்த சோதிக்கு வயது 70, இளவரசன் துஷ்யந்தனாக நடித்த இராசதுரை 68 வயதினர்.

அன்றைய விழா நிகழ்வுகளிலே சிறப்பு விருந்தினர் உரை தவிர ஏனைய நிகழ்ச்சிகள் வரவேற்புரை தொடக்கம் நன்றியுரை வரை பங்கேற்போர் உரையாற்றுவோர், பாடுவோர், நடிப்போர், ஆடுவோர்

யாவருமே இம்முதியோர் இல்ல அங்கத்தவர்களான வாழ்வில் அந்தி வேலையை அண்மிக்கொண்டிருக்கும் ஆண்களும் பெண்களுமே.

இவ்வமைப்பில் இணைந்திருப்போரின் உள்ளநிலைக்கும் அறிவுக்கும் ஏற்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுண்டு. இங்குள்ளோரில் பலர் கல்வியறிவில் படித்துப்பட்டம் பெற்றுப் பெரும் பதவிகளை அலங்கரித்தோர், சிலர் படிப்பறிவுகுன்றியோ இல்லாமலோ இருப்பினும் பட்டறிவு அனுபவம்மிக்கோராக அறிவுநிலையில் உயர்ந்திருப்பினும் உடல்நிலை தளர்ந்தவர்களாக அதனால் மனத்தாக்கம் பெலவீனம் உற்றவர்களாக இருப்பதையும் இத்தன்மைகளை அவர்களது நடன, நாடக, உரை, இசை வெளிப்பாடுகளில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

இவர்களுடைய கொண்டாட்டங்கள் பொழுதுபோக்குகளில் தனியே வீடுகளில் வாழும் முதியோரும் கலந்து சிறப்பித்து மகிழ்வது உண்டு.

முதியோரான கோதை, வவி, சாந்தி எனப் பலரும் எப்போ குளிர்காலம் முடியும். கோடை பிறக்கும் என நாள் எண்ணியபடி ஏங்கியே இருப்பர்.

குளிர் உடம்பைக் கொட்டுகிறது. உண்மைதான்.

கனடாவிலே பிறந்து வளர்ந்தோரும் எமது நாட்டைச் சேர்ந்த இளைஞரும் பனி பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. பனிச்சறுக்கு, பனி கட்டிகளிலே உருவங்கள், பந்து போன்றன செய்து விளையாடும் விளையாட்டு என பனிக்காலத்தையும் வரவேற்று மகிழ்ந்து கொண்டாடிக் குதூ கலித்துப் பழகிவிட்டனர்.

தான் தனித்து வாழும் மாடியில் 37வது தளத்திலிருக்கும் கோதை யன்னலூடே பார்வையைப் பதிக்கிறாள்

பால் போல, மாச்சீனி போல, வெள்ளை உப்புப் போல...... சே என்ன அழகு தரை, வீதி, வீடு, கட்டிடம், கூரை, மரங்கள் என எல்லாவற்றையும் மூடி மறைத்துக் கொண்டிருக்கும் ஒரே வெள்ளைப் பனி மலைதான்.

எமது தாய் மண்ணிலென்றால் கோடை, மாரி என இரு பருவகாலங்களையும்தான் பெரிதாகக் கணித்துக்கொள்வோம்.

ஆனால் இங்கே பல்லின மக்கள் பெருக்கம் போலவே கோடை, மாரி, இலையுதிர், வசந்தமெனப் பருவகாலங்களும் பெருக்கிக்கொண்டேயிருக்கும்.

பனிக்காலத்தில் யாவருமே தாமும் தம் வேலையோடு வீடுகளில் முடங்கிக் கிடப்பதால் சடங்குகள் கொண்டாட்டங்களில் கூடி மகிழும் வாய்ப்புக்கள் அரிது. கோடை பிறந்ததும் கொண்டாட்டம் குதூகலத்திற்குக் குறைவேயில்லை. ஓட்டப்போட்டிகள், போட்டீஸ், திறந்தவெளி விளையாட்டுக்கள் எனப் பலவகையான கொண்டாட்டங்கள் நிகழ்ச்சிகளால் மக்கள் பூரித்து மகிழ்வர்.

மேகத்தை விலத்தி வானத்தில் மெல்லத் தலை நீட்டும் சூரியனைப் போல கோதையும் தன் பஞ்சுப்போர்வையை மெதுவாக நீக்கிக் கட்டிலை படுக்கையை விட்டகன்றாள். தாயகத்திலிருந்து முன்னரும் சில தடவைகள் கோடை காலங்களில் கனடாவிற்குச் சில விழாக்களின் கௌரவ விருந்தினராகக் கணவனோடு வந்து கலந்து கொண்ட நினைவுகள் மனதைச் சுற்றி வட்டமிட்டன......

கோடை காலம் என்றதும் அங்கு இடம்பெறும் கொண்டாட்டங்கள், குதூகலங்கள், விழாக்கள் சடங்குகள், சந்தைகள், ஒன்றுகூடல்கள், கூட்டங்கள், சந்திப்புக்கள், நடன நாடக அரங்கேற்றங்கள், ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள்..... அப்பப்பா சொல்லியே மாளாது. அத்தனை விசேடங்களும் உறவோடும், நட்போடும் புதுமுகங்களோடும் கூடக் கூடி மகிழ்ந்து களிப்புறும் நாட்களாகவே அவை களைக்கட்டும்.

அதுவரை காலமும் "வேலை, வேலை, நேரமின்மை" என்ற மன இறுக்கத்தோடும் தொழில் அக்கறையோடும் உறைந்து போயிருந்த மக்களின் உள்ளமும் உடலும் சற்று ஆறி நெகிழ்ந்து களிப்புறும் இந்தக் கோடைக்கு அத்தனை வரவேற்பு. பாடசாலைகள் கூட கோடை விடுமுறைக்கு மூடிக்கிடக்கும்.

கோதை தனது சொந்த நாட்டில் சுயாதீனமாக, உயிர்பிழைக்க முடியாத அவலம். இப்படிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் துயருற்று வருந்தினர். உயிரைக் கையிலே பொத்தியபடி நிம்மதியான வாழ்வை தேடியலைந்த பல்லாயிரக்கணக்கானோர் உலகின் பல்வேறு நாடுகளில் குடியேறி அகதியாக வாழ்வைக் கடத்துகின்றனர். அத்தகைய கூட்டத்தில் தானும் ஒருத்திதானே என்ற நிலை கோதையின் மனதில் பதிந்து கிடந்தாலும் வெகு சுதந்திரமாக, கை நீட்டிக் காலாறி வாய் திறந்து பேசி நிம்மதியாக வாழக் கிடைத்த இந்த நிலையையிட்டு அவள் தன் குலதெய்வத்தை வேண்டாத நாட்களே இல்லை.

"என்னதான் சுதந்திரமாக இங்கு நாம் வாழ்கிறோம்" என மனம் சுதாகரித்துக் கொண்டாலும் எம் சொந்த மண்ணில் உற்றார் உறவினருடன் கூடி வாழ்ந்து அனுபவித்த கோடி நன்மைகளை இவ்வளவு எளிதில் தொலைத்து விட்டு வாழ முடியுமா?

இந்தக் கூட்டு வாழ்க்கையின் ஆணிவேரே அறுந்து போனதால் முதியோர் அநாதரவாகி சந்து பொந்துகளெல்லாம் முதியோர் இல்லம் முளைத்து விட்டது. உலகம் முற்று முழுதாய் மாறி இளையோர் முதியோர் மத்தியில் சிந்தனை மட்டமே பாரியளவில் வேறுபாடு அடைந்துள்ளது.

இல்லையென்றால் ரீ.வீ பார்க்கும் ஒரு சின்ன விசயத்திலேயே கூட அவள் "விஜே" காட்சிக்கு விட பெறாமகன் அதை மாற்றி "டிஸ்கவரி" தொலைக்காட்சியைப் போட மருமகள் "சண் ரிவி"க்கு மாற்ற பேரன் ஓடிவந்து "காட்டூன்" சனலுக்கு மாற்ற இப்பிடி ஆளாளுக்கு எல்லா விஷயங்களுமே மாறிப்போவது வெகுசகஜமாகிவிட்டது.

இது எங்கட வீட்டில் மாத்திரமல்ல எங்குமே இந்தப் போக்குத்தான் தலைவிரித்தாடுது.

இந்த மாற்றங்கள், யோசனைகள் மனதில் சோர்வைத் தீண்ட மேசையில் கிடந்த "தாய்வீடு" என்ற பத்திரிகையை மெல்லப் புரட்டினாள் கோதை.

றொறன்ரோவிலிருந்து வெளிவரும் உதயன், சுதந்திரன், செந்தாமரை, ஈழநாடு என ஏராளமான தமிழ்ப்பத்திரிகைகளுள் நல்ல

**இந்தக் கூட்டு வாழ்க்கையின் ஆணிவேரே அறுந்து போனதால் முதியோர் அநாதரவாகி சந்து பொந்துகளெல்லாம் முதியோர் இல்லம் முளைத்து விட்டது. உலகம் முற்று முழுதாய் மாறி இளையோர் முதியோர் மத்தியில் சிந்தனை மட்டமே பாரியளவில் வேறுபாடு அடைந்துள்ளது.**

இலக்கியத்தரமான இதழாக மலரும் "தாய்வீடு" என்ற பத்திரிகை அதன் பெயருக்கேற்ப எம் நினைவுகளை எம் தாயகத்திற்கு இழுத்துச் சென்று அங்கே எம்மை இருத்திவிடும்....... நினைவுகள் அங்கேயே வட்டமிடும்............

ஊரிலே முதியோர் இருந்தார்கள் உண்மையே. ஆனால் அவர்களுக்கென்று பிறிம்பாகத் தனிப்பட்ட "முதியோர் இல்லம்" என்ற அமைப்புக்கள் இருந்ததாக எனது 65 வயது அனுபவத்தில் நான் அறிந்ததில்லையே.

தாயகத்தின் தொடர்ந்த நினைவுகள் மனதைக்குடைய அன்றைய கலியாணங்கள், கார்த்திகைகள், திருவிழாக்கள், சடங்குகள், காட்சிகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன.

"அக்கா மகளுக்கு கலியாணம் என்றதும் உன்ரை குதூகலத்தைப் பார்த்துத்தான் நான் ரசிக்கிறேன்" சால்வையை மடித்து கரையை அழுத்தி நிமிர்த்தி தோளில் போட்டபடியே அன்பு ததும்ப மனைவியின் ஆயத்தநிலையின் அழகை ரசித்து மகிழ்ந்தவாறு கூறினார் சிவலிங்கமூர்த்தி.

"என்னை மாத்திரம் லோட்டி பண்ணுங்கோ........ எதற்கும் என்னை நொட்டாமல் உங்களுக்கு நாளே விடியாதே. ஹூ உம்.. சாமான்களெல்லாம் வானிலே ஏத்தியாச்சுது. வாங்கோ.... வாங்கோ போய்ச்சேர எவ்வளவு நேரமாகுமோ?" என அவசரப்படுத்தினாள் கோதை. முறுக்கு மீசையை லேசாகத் தடவியபடியே வண்டியின் முன் சீற்றில் ஏறிக்கொண்டார் சிவலிங்கமூர்த்தி.

"முறுக்கு உரலோடு, கடகம், பெட்டி,

தாய்ச்சிச்சட்டி, அரிதட்டு, புற்பாய், கம்பளம் என எல்லாச்சாமான்களும் பக்குவமாகப் பின்னே போட்டிருக்கு" என்றாள் ஈஸ்வரி மாமி சேலைத்தலைப்பை இழுத்து இறுக்கமாகச் சொருக்கிக் கொண்டே.

சீடை, முறுக்கு, அரியதரம், பயித்தம் பணியாரம், மிக்சர் எனக் கலியாணத்திற்கு என்னென்ன பலகாரங்களுக்கு எந்தளவு ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பவளம் சின்னம்மா நினைவூட்டினாள்.

சடங்கு ஏற்பாடுகளிலும் உரையாடல்களிலும் ஆயத்தங்களிலும் கணிப்பிட முடியாதளவு ஆனந்தமும் பூரிப்பும் களைகட்டியது.

கலியாண வீட்டுப்பந்தல் வாகனங்கள் போகும் வீதியையும் மூடி பெரும் கொட்டகையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோதை தம்பதியின் வான் அங்கே தரித்துக் கொண்டது.

கலியாண வீட்டு வெளிவிறாந்தையில் "பெற்றோல்மக்ஸ்" லைட்டும் வெற்றிலைத் தட்டம் சுருட்டு சகிதம் ஆண்களெல்லோரும் ஒரே பேச்சும் கும்மாளமும்................ "இரட்டைத் தலையோடு ஆடு குட்டி போட்டது................. ஒட்டு மாமரத்தில் அம்பலவி, விலாட், செம்பாடு, கறுத்தக்கொழும்பான் எனப் பல இன மாம்பழங்களும் காய்த்துத் தொங்கியது................. குழறிச்செல்லாச்சியின் கணவன் கோவிந்தன் குடிச்சுப் போட்டு வந்து அடிக்கச் செல்லாச்சி கோயில் குருக்களின் மகனோடு காணாமல் ஓடிப்போனது................ பள்ளிக்கூட வாத்தியார் மாணவியைப் பலாத்காரம் செய்தது............" என அவ்வட்டாரத்துச் செய்திகளெல்லாம் இவர்கள் சம்பாசணையில் அத்துப்படியாக ஒலித்தது. இப்புதினங்களின் சுவைக்கு வலுவூட்டுவது போல மோரும், இளநீரும், தேசிக்காய்த்தண்ணீரும் பரிமாறப்பட்டன. இவற்றில் திருப்தி காணாத முருகேசு, கோபால் என்று சில கூட்டம் தமக்கேற்ற கொட்டில்களை நாடிப் பயணித்துக் கொண்டனர்.

மாமி, மச்சாள், சின்னம்மா, பெரியம்மா, அத்தை, பாட்டி, சித்தி, மக்கள், மருமக்கள் என உறவுகளெல்லாம் கூடிக் குசினியில் பாத்திரங்களோடு பாத்திரங்களாகவும் அடுப்படியிலை கூடிக் கும்மாளங்களும் கேலிப்பேச்சுக்களும் ஔவை, கம்பன், காளமேகமெல்லாம் பிச்சை வாங்கும் தரத்தில்தான்.

சத்தமோ காதைப் பிளந்தது.

"சாரதா மச்சாள் என்ன? அவற்றை உழைப்புப் போதாதென்றே நாலு பையங்களோடை நிறுத்திப் போட்டாய்? என்னவாயிருந்தாலும் வீட்டுக்கு லெட்சுமி போல ஒரு பெட்டைக் குஞ்சு வேண்டாமே?" கோப்பியை மெல்ல விழுங்கியப்படியே கேட்டால் வரதா.

"ஐயோ இந்தப் பிள்ளைகளோடை தலையை உடைக்கிறது போதாதே. என்றாலும் எதுக்குமொரு உதவியாகப் பெட்டைப் பிள்ளையொன்றில் ஆசையில்லாமல் இல்லை. எதற்கும் மேலை இருக்கிறவனும் கண் திறக்க வேண்டாமோ...." விரும்பியும் விரும்பாததும் போல் சாரதா பதிலளித்தாள்.

சின்னத்தங்கம் பெத்தாச்சியை இஞ்சத்தே டொக்டர்மாரெல்லாம் கைவிட்டிட்டினம். இப்ப இன்னும் பெரிய டொக்டரைப் பார்க்கக் கொழும்புக்குக் கொண்டு போட்டினமாம். முத்தம்மா மொத்தமாக இந்தக் கதையைச் சொல்லி முடிப்பதற்குள் கோழியடைப்புக் கூடாரச் சிமிக்கியையும் ஆட்டி ஆட்டி, "ஜனசக்தி சனசமூக நிலையம் போன கிழமை நடத்தின பாரதி விழாவில் யோகநந்தினி என்டொரு வடிவான கேர்ள் நல்ல ஒரு ஸ்பீச் குடுத்ததாம். அதோடை அள்ளுப்பட்ட குமார்....."

"ஆர் அந்தக் குமார்...?" குறுக்கிட்டாள் பார்வதிச் சித்தி.

"அவர்தான் சனசமூக நிலையச் செயலாளர். அவருக்கு அந்த கேர்ள் மேலை ஒரு கண்ணாம். பெட்டையின்ரை தேப்பனுக்கு இவற்றை போக்கு கொஞ்சமும் பிடிக்கலையாம்." இதைத்தான் கிரிசா வந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

வானொலி ஒருபக்கம் அலறியபடி இருந்தாலும் இந்தப் பெண்களின் ஒருமித்த கூட்டம் அவரவர் வயதிற்கும் தகுதிக்கும்

ரசனைக்குமேற்றபடியான கலந்துரையாடல்கள், செய்திப் பரிமாற்றங்கள், புதுப்புது விடயங்களைக் கேட்டறிதல், வருந்துவோர் மீது அனுதாபம் கொள்ளல் என இந்த இனிய வாத்சல்யத்துடன் பற்றுக்கோடாக விடயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது, இவையும் பலருடைய வாழ்வில் சில மையப்புள்ளிகள்தான்.

பிறந்து வளர்ந்த ஊரும் பெற்றதாயின் மடியும் அனுபவிச்சவர்களுக்குத்தான் ஒரு மறக்க முடியாத பரவசம் பற்றுதல்.

ஊர் சிந்தனைகளில் தோய்ந்திருந்த கோதையின் உள்ளத்தில் ஊடறுத்துக் கொண்டு கண்களைக் குளமாக்கியது கோகிலா தந்த செய்தி.

"கணவனைப் பறிகொடுத்த கவலை நீங்க, தாரமிழந்து தனித்து வாழும் ஒருத்தனோடை கூட்டங்கள், கொண்டாட்டங்கள், விருந்துகள், விழாக்களென வெட்கமில்லாமல் சுற்றித்திரிகிறீங்களாம். கேட்கவே காது கூசுது பெரியம்மா" என்று கோதையின் ஒன்றுவிட்ட அக்கா மகள் கோகிலா தொலைபேசி மூலம் தயங்கித்தயங்கித்தான் சொல்லி முடித்தாள். பயந்து பயந்து அவள் சொல்லவும் கோதைதான் பலதடவையும் தெண்டித்து கெஞ்சிக் கெஞ்சி உண்மையறியக் கேட்டுவைத்தாள்.

மனம் தறிகெட்டுப் பறந்தது. இந்தச் சனங்கள் எப்பதான் திருந்தப் போகிறதோ?..........

எத்தனை அடிகள், அழிவுகள், இழப்புக்கள், இடப்பெயர்வுகள் என என்னத்தைப்பட்டும் இந்த நொட்டைக் கதைக்கு மட்டும் குறைச்சலில்லை.

என்ரை வயதென்ன? எங்கட குடும்பத்தின்ரை நிலையென்ன? ஒழுக்கமென்ன? உண்மையிலை மனிதமூளையுள்ள சோறு சாப்பிடும் மானுடன்... பேசும் பேச்சா இது...........?

இத்தனை பிள்ளைகள் பேரப்பிள்ளைகளைக் கண்டு அறுபத்தைந்து வயதிலே காதல் இல்லைக் காமம் பிறக்குதோ...........?

இந்தக் கழிசடை மக்களின்ரை ஊத்தைப் பேச்சை எங்கே கொண்டு போய்க் கொட்டுவது...? அங்கலாய்த்தாள் கோதை.

தான் கேள்விப்பட்ட வார்த்தைகளின் அதிர்ச்சி தாங்க முடியாமல் கோதை விதிர் விதிர்த்துப் போனாள்.

கைகளை மேசையில் வைத்துத் தலையை அதன் மேல் சாய்த்தபடி சிறிது நேரம் மௌனமானாள்.

ஆழ்ந்த மௌனம் மனதை வருடியது. மனம் மல்லாகத்தைச் சுற்றி வட்டமிட்டது. போர்ச்சூழலால் மல்லாகத்தில் குடிகொண்டிருந்த கோதையும் கணவன் சிவலிங்கமூர்த்தியும் எல்லோரும் போல தற்காலிகத் தங்குமிடங்கள், அகதி முகாம் கொட்டகைகள் எனப் பல இடங்களிலும் பழகி இறுதியாகக் கனடா மண் ஈர்த்துக்கொண்டது.

பாதுகாப்பின்மை, அலைச்சல், மனக்கிலேசம் எனத் தாங்கொணாத்துயர் தொய்வு வருத்தத்தைக் கொடுத்து தொலைத்தது. பனிக்குளிர் கூடிய சுவாத்தியம் ஏற்றுக்கொள்ள முடியாமல் சிவலிங்கமூர்த்தியின் உயிரைக் காவு கொண்டது.

கோதை தனிமரமானாள்.

நினைவுகள் தொடர்ந்தன.

அழுது அழுது கண்ணீர்வற்ற கோயிலையும் நம்மோர் கூடும் கூட்டங்களையும் தனதாக்கிக் கொண்டாள்.

இன்றைய நிலையில் கணவன் மனைவி இருவருமே கட்டாயம் வேலைக்கு போக வேண்டும். குழந்தைகள் இருப்பின் அவர்களது பொழுது கல்விக்கூடங்களோடும், நூல்நிலையங்களோடும் மற்றும் விளையாட்டு பொழுதுபோக்குகளுக்கான கிளப்புகளோடும்தான் அதிகம் போகும். எமது நாட்டினர் போல கணவன் மனைவி பிள்ளை என்ற ஒட்டுறவெல்லாம்..... நேரம் அனுமதித்தால்தான்........... அதுதான் இவர்களுக்கு நேரம் கிடைப்பது அறிதே.

விதவையாகிவிட்ட கோதை அரசாங்கம்

**இன்றைய நிலையில் கணவன் மனைவி இருவருமே கட்டாயம் வேலைக்கு போக வேண்டும். குழந்தைகள் இருப்பின் அவர்களது பொழுது கல்விக்கூடங்களோடும், நூல்நிலையங்களோடும் மற்றும் விளையாட்டு பொழுதுபோக்குகளுக்கான கிளப்புகளோடும்தான் அதிகம் போகும். எமது நாட்டினர் போல கணவன் மனைவி பிள்ளை என்ற ஒட்டுறவெல்லாம்..... நேரம் அனுமதித்தால்தான்............ அதுதான் இவர்களுக்கு நேரம் கிடைப்பது அறிதே**

கொடுத்த ஒரு படுக்கையறை கொண்ட தொடர் மாடியில் தானே சமைத்துச் சாப்பிடுவது, கீழே பூங்காவில் உலாவுவது, அங்குள்ள நூல் நிலையத்தில் பத்திரிகை, சஞ்சிகை படிப்பது, கீழேயுள்ள பொருள் கொள்வனவு செய்வது, அயலில் வாழ்பவர்களோடு அளவளாவுவது எனத் தான் வாழ்க்கையைப் பதனிட்டுக் கொண்டாள்.

கோதை இருக்கும் தொடர் மாடியிலிருந்து சிறிது தூரம் தள்ளியுள்ள மாடியில் வசிக்கும் ராகவன் இவளுடைய தனிமையைப் போக்கும் நண்பனானான். ராகவனுடைய ஒரே மகன் லண்டனில் வெள்ளைக்காரப் பெண்ணை மணமுடித்து சந்தோஷமாக வாழ்கிறான். ராகவன் கடைச் சாப்பாட்டோடு காலத்தைத் தள்ளுவார்.

முதியோர் ஒன்று கூடல், கவிதை கதை இலக்கிய நாடகப் போட்டிகள், ஆண்டுவிழாக்கள் எனப் பலபட இடம்பெறும் நிகழ்ச்சிகளில் கண்டு பழகிய அறிமுகம். பின் காலப்போக்கில் கோதைக்கும் தனது காரில் "லிப்ற்" கொடுப்பது ஏதாவது நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்வது, சுகவீனமானபோது வைத்தியரிடம் போக மருந்து வாங்க என உதவும் என்றெல்லாம் இருவரது நட்பும் வளர்ந்தது.

கணவன் சிவலிங்கமூர்த்தி உயிர் வாழ்ந்த காலத்தில் சுகவீனம் காரணமாக அவர் போய்பார்த்து ரசிக்க முடியாத உலகின் பெரும் அதிசயமான மாபெரும் நீர்வீழ்ச்சியான நயாகராவைப் போய்ப்பார்ப்பதற்குக்கூட, வேறு சில முதியோர் அமைப்புக் குழுக்களுடன் சேர்த்துக் கோதையையும் அழைத்துச் சென்றவர் ராகவனேதான். கோதையைப் பொறுத்தளவில் தனது கணவன் இன்று உயிரோடு இல்லாதிருந்தும் ஒரு மூத்த சகோதரன் கூட இருந்து அன்பு காட்டி உதவுவது போலவே ராகவனின் நட்பும் தனது மன அமைதிக்கும் ஆறுதலுக்கும் ஒரு சகோதரபாசத்தைப் பொழியும் துணையாகவே கருதிக் கொண்டாள்.

அதற்கு நன்றியாக கோதை வடை, ரொட்டி ஏதாவது சுட்டால் புளிச்சாதம், சாம்பார் சாதம் என வகை பண்ணினால் தவறாது ராகவனுக்கு ஒரு "பிளேற்" கொடுப்பது என்று பழகிக் கொண்டாள்.

நெய்க்குத் தொன்னை ஆதாரமாக தொன்னைக்கு நெய் ஆதாரமா? என்பது போல் தாம் வாழ்வில் சுமந்த வலிகளையும் கொல்லும் தனிமையையும் புரிந்து கொண்டும் அவற்றை போக்குவதற்கும் தத்தமது இழப்புக்களை மறப்பதற்கும் ஏதோ தாம் வாழும் காலம் சிண்டுசிக்கலின்றி மெதுவாக நகர வேண்டுமென்ற தெளிவான எண்ணமே இருவர் மனதிலும் குடிகொண்டிருந்தது.

ராகவனும் தனது ஓய்வு நேரத்தை, மோட்டார் வாகனத்தைப் பலருக்கும் பயன்படுத்துவதில் மகிழ்ச்சி கொள்பவர். தனித்து வாழும் முதியோர்கள் அதுவும் சிறப்பாக நாம் நாட்டு பெண்கள் வெட்கப்பட்டு இலகுவில் எந்த உதவியையுமே கேட்க மாட்டார்கள். அப்படித் "தேவையின்றி மற்றவர்களைக் கடமைப்படுத்துவானேன்" என்ற நொந்த உள்ளத்துடன் நினைத்து தம் தேவைகளையும் முடக்கிக் கொள்வர்.

எல்லா வளங்களையும் இழந்து வரண்டு போய்த் தவிக்கும் எம் நாட்டில் இந்த அன்பு, பரஸ்பரம், புரிந்துணர்வு, உதவும் பண்பு என்பவற்றை உணராமல் கருத்துமாறி கை,கால் முளைத்து பிசாசுக்கோலம் கொண்டு பல கிசுகிசுப்புக்கள் பிசுபிசுக்க தொடங்கிவிடும்.

"டிரிங், டிரிங்.......... டிரிங்.... டிரிங்" ரெலிபோன் மணி பல தடவைகள் அலறிய பின்பே தன்னிலைக்கு திரும்பினாள் கோதை.

இறங்குவதற்காகத் தரையைத் தொடுமளவில் விமானம் தன் பயணத்தைப் பூர்த்தியாக்க முயன்றுவரும் சிறிது நேரம் ஆகாயவெளியில் சுற்றிக் கொண்டேயிருக்கும் நிலை போலவே கோதைக்குத் தான் தற்போதுள்ள சூழ்நிலையைப் புரிந்து கொண்டாலும் கூட கோகிலா கூறிய கருத்துக்களின் கோவைகளிலிருந்து முற்றுமுழுதாக இன்னமும் அவளால் விடுபட முடியவில்லை. சுற்றிச் சுழலும் விமானம் போல அவள் மனமும் அங்கேயே உழன்று கொண்டிருந்ததை அவளால் தவிர்க்க முடியவில்லை.

எவ்வளவு முயன்றும் கோதையை தன்பக்கம் ஈர்க்க முடியாது தோற்றுப் போன சோகத்தில் தொலைபேசி தன் அலறலை நிறுத்திக் கொண்டது.

"என்னவாயிருந்தாலும் ஆம்பிளையள் ஆம்பிளையள்தான். அவைக்கென்ன? சேறு கண்ட இடத்தில் மிதிச்சுத் தண்ணீர் கண்ட இடத்தில கழுவுவினம், சுயநலவாதிகள். அதோட விஷயம் சரி. நாங்க பொம்பிளையள். அவையளைப் போல இருக்க முடியாதுதானே? நாம அடக்க ஒடுக்கமாகக் கெட்டபேர் வராமல் எங்கடை மரியாதையை நாங்களே பக்குவமாகக் காப்பாத்திக் கொள்ள வேண்டியதுதானே.

**ஆண்கள் சினேகபூர்வமாக பழகுவதென்பது இக்காலத்திற்குப் புதிய வரவு. எங்கடை காலத்தில ஒரு இளம்பெண் ஆணோடு பேசினாலே அது காதலாகத்தான் கருதப்படும். இன்று பெண் பிள்ளைகள் எல்லோரும் படிக்கத் தொடங்கியதால் ஆண் - பெண் நெருங்கிப் பழகும் அவசியம் தேவைப்பட்டது**

உங்களைச் சொல்லேல்லை. இப்ப படிச்ச பொம்பிளையள் சில பேர் இதுதான் தங்கள் சுதந்திரமென்று தாம் விரும்பியபடி தலைகீழாக நடக்கத் தொடங்கித்தானே இத்தனை அழிவுகளும்.................... ஏதோ இங்கை மற்றவையளும் உங்களைப் பற்றிக் கதைப்பதைக் கேட்கப் பொறுக்க முடியாமல்தான் நான் இதை உங்களுக்குச் சொன்னேன் பெரியம்மா. என்மேலை குறையெண்ணாதேங்கோ.

"விமலா மாமியும் அப்படியிப்படிதான் பேசித்திரியிறா" பதியப்பட்ட றொக்கோட் போல கோகிலாவின் பேச்சு கோதையின் மனதில் அசை போட்டுக் கொண்டது.

இதிலிருந்து மனதை மாற்றிக் கொள்ள வெளியே புறப்பட்ட கோதை கதவைப் பூட்டிக் கைப்பையினுள் திறப்பைப் போட்டு நிமிரவும், "அன்ரி" என்று அழைத்தபடி அயலிலே உள்ள மஞ்சுளா வந்தாள்.

கோதையைப் பார்த்ததும், "என்ன ஒரு மாதிரி முகமெல்லாம் வாடிச் சோர்ந்து போய்.............. என்ன உடம்புக்கு ஏதாவது.... சுகயீனமா? என்ன" என்றாள் மிகுந்த வாஞ்சையுடன்.

"நான் நல்லாய்த்தான் இருக்கிறேன். எப்போ ஊரால் திரும்பி வந்தீர்?" என்றாள் கோதை தன் மனச்சஞ்சலத்தை மூடி மறைத்தபடி.

"ஊர் புதினமா? அது அடியோடு மாறிக் கிடக்குது அன்ரி. எண்ணத்தைச் சொல்ல?" என்றபடியே வெளியேயுள்ள கூடத்தின் இருக்கைகளில் இருவருமே உட்கார்ந்து கொண்டனர்.

"என்ன அன்ரி எப்போதும் கலகலப்பாகப் பேசும் உங்கள் குரலில் ஏதோ சோகம் தோய்ந்து........... நல்லா யோசிக்கிறீர்கள் போல இருக்குது. என்ன விஷயம்? எதுவென்றாலும் எனக்கு மறைக்க மாட்டீர்களே அன்ரி. என்ன பிரச்சனை?" என்று உரிமையுடன் பேசி கோதையின் மனக்கதவுகளைத் திறந்து வைத்தாள் மஞ்சுளா.

"ஐயோ பிள்ளை மஞ்சு உம்மிடம் நான் எதையும் மறைப்பதில்லையே. எனது மனப்பாரத்தை உம்மோடு பகிராமலா? காகம் எத்தனை தடவை முழுகினாலும்

கரிய நிறம் மாறாது என்பது போல உலகம் எந்தளவு வளர்ந்தாலும் விரிவடைந்தாலும் சில சனங்களின் மனநிலை என்றுமே விரிவடையாது. இந்தக் காகத்தின் கரிய நிறத்தை என்றுமே மாற்ற முடியாதது போல, எனக் குரல் தளதளக்கக் கோதை சொல்லி முடிப்பதற்கிடையில்,

"என்ன? எங்கடை ஆக்களைப் பற்றியே சொல்லுறியள்?" எனக் குறுக்கிட மஞ்சுளா, தொடர்ந்தாள்.

"அங்கை ஊரிலை சந்திக்குச்சந்தி ஆண்,பெண் பிள்ளைகளின் ஆடல்பாடலும் குடியும் கும்மாளமும் கலாசாரம் கட்டுப்பாடெல்லாம் உடைந்து போய்ச்சுது. மாறி நடக்கும் மோசமான விசயங்களைக் கேட்டுக் காதே புளிச்சுப்போம். எங்கடை ஆட்களெல்லாம் எப்படி எப்படியெல்லாம் மாறிப்போயிட்டினம் என்டது தெரியுது. அதுவும் வாழும் வளரும் பிள்ளையள் ஊரோடும் கோயில் குளத்தோடும் உறவோடும் ஒண்டிக் கிடந்து கொண்டே இத்தனை மோசமென்றால் நம்பவே முடியவில்லை. எல்லாம் இன்றைய நாகரீக மோகம்தான். ஆனால் யோசித்துப் பார்க்கேக்கை இங்கை கனடாவில பல்வேறு கலாச்சார குறுக்கீட்டின் மத்தியிலை அதுவும் மாவிலை, பூக்கள், கோவில் சுற்றாடல் இல்லை...... தனித்தோ முச்சக்கரவண்டியிலோ வெளியே போக முடியாத சூழ்நிலை இருந்தும் கூட தம்மாலியன்றளவு ஏதோ சூழலுக்கேற்ப சமாளித்து வாழப்பழகுகின்றனர். அப்படியிருந்தும் தமது மண்ணோடேயே ஒட்டிவாழ்பவர்களுக்கு ஏன் இந்தத் தடுமாற்றமோ?" எனப் பெரிய மேடைப் பிரசங்கம் போலத் தனது மனக்கருத்தைக் கோதையிடம் கொட்டியளந்தாள் மஞ்சுளா.

இல்லை மஞ்சு பெண்களோடு ஆண்கள் சினேகபூர்வமாக பழகுவதென்பது இக்காலத்திற்குப் புதிய வரவு. எங்கடை காலத்தில ஒரு இளம்பெண் ஆணோடு பேசினாலே அது காதலாகத்தான் கருதப்படும். இன்று பெண் பிள்ளைகள் எல்லோரும் படிக்கத் தொடங்கியதால் ஆண் - பெண் நெருங்கிப் பழகும் அவசியம் தேவைப்பட்டது. அதுவும் திருமணத்தில் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டில் வந்த நாம் இளம்

**தாம்பத்தியத்திற்காகத்தான் ஆண் பெண் ஒன்றுபட வேண்டுமா? இது நாகரீகமற்ற மிருகத்தனமல்லவா? எப்படி இளமையில் ஒருவன் ஒருத்திக்கு நட்புத் தேவைப்படுகிறதோ அப்படியே முதுமையிலும் ஆண் பெண் நட்பாயிருப்பதை நமது ஆட்கள் புரிந்து கொள்ளவே மாட்டார்களா?**

வயதினர் எங்கே அனுபவமின்னையாலும், உணர்ச்சிவசப்பட்டும் பொருத்தமில்லாத ஜோடியில் ஏமாந்து போய்விடக் கூடாதே எனக் கண்ணில் எண்ணெய் வார்த்தபடி கவனிப்போம். அப்படி நாம் பாதுகாப்பது பிள்ளைகளின் எதிர்கால நலத்தை நோக்கி.

"ஆனால் நான் சங்கடப்படும் கதை வேறை." தொடர்ந்தாள் கோதை. திருமணம் முடிந்து குழந்தைகள் பெற்று வாழ்ந்து முடித்த நிலையில் கணவனோ மனைவியோ தவறிவிட, தனது மனஆறுதலுக்கு, சில பிரச்சினைகலைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு, அவற்றில் பங்குபற்றுவதற்கு, தனிமையைப் போக்குவதற்கு, உதவி பெறுவதற்கு மனமொத்த ஒருவரோடு நட்பாயிருத்தல் அவசியம்தானே. அது தன் இனமாகவும் இருக்கலாம். மாறுபட்டு ஆண் பெண் நட்பாகவும் இருப்பதில் என்ன பிரச்சினை? அந்தந்த வயதோடொத்த அனுபவங்கள் ஒன்றித்தவர்களுக்கு இடையில்தானே இந்த ஒற்றுமை நட்பும் பலப்படும். தாம்பத்தியத்திற்காகத்தான் ஆண் பெண் ஒன்றுபட வேண்டுமா? இது நாகரீகமற்ற மிருகத்தனமல்லவா? எப்படி இளமையில் ஒருவன் ஒருத்திக்கு நட்புத் தேவைப்படுகிறதோ அப்படியே முதுமையிலும் ஆண் பெண் நட்பாயிருப்பதை நமது ஆட்கள் புரிந்து கொள்ளவே மாட்டார்களா?" என உரத்த குரலில் பொரிந்து தள்ளினாள் கோதை.

அதுவரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த மஞ்சுளா "அன்ரி நீங்கள் நன்றாகப் படித்தனீங்கள் தான். ஆனாலும் இந்த நாட்டின் நடப்புக்கள் எமது சொந்தநாடு போல

பெண்களை ரெண்டாம்தர பிரசையாகவே அடிமைப்படுத்தும் நோக்கோடோ பார்ப்பதில்லை. பெண்கள் உரிமைகள் இங்கு நன்றாகப் பேணப்படுகின்றன. முதியோரையும் நன்றாகவே பராமரிக்கிறார்கள். பெரிய பெரிய வியாபார ஸ்தலங்களிலெல்லாம் வாரத்தில் சில நாட்களை ஒதுக்கி பிரசாஉரிமையுள்ள முதியோருக்கு ஒரு சில வீதம் குறைவான விலையில் பணம் செலுத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், வாழ இடம், நோயுற்றோருக்குச் சில போக்குவரத்து வசதிகள் இத்யாதி..... இத்யாதியெனப் பல சலுகைகள் நல்குகின்றனர்.

சகல வசதிகளுமுடனான முதியோர் இல்லங்கள் இங்கே சுகாதாரம், அவரவர் ஆற்றலை வெளிக்கொணர கதை, கவிதை, உரை, நாடக அரங்குகள், கைவேலை அலங்காரங்கள், தொலைக்காட்சி எனப் பொழுதுபோக்குகள், விளையாட்டுக்கள், சுற்றுலா போவது எனச் சந்தோசமாகப் பொழுதைக் கழிக்கப் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்று கூறிக்கூறி கையிலிருந்த போத்தல் கூல் ரிங் முழுவதையும் குடித்து முடித்தாள் மஞ்சுளா.

"ஊரிலை சமூக நலப்பணித்துறையென்ற பெயரில் முதியோருக்கு சில உதவிகள் செய்ய முயன்றாலும் வளர்முகநாடுகளில் இவற்றை நாம் அதிகம் எதிர்பார்க்கவும் முடியாதுதானே. ஆனால் இங்குள்ள பெண்கள் கார் ஓட்டுவது தொடக்கம் வீட்டு பொருட்கள் வாங்குவது என தங்கள் சகல வேலைகளையும் தாமே முடித்துக் கொள்கின்றனர். ஆண்களும் கூட சமையல், வீட்டு வேலைகளில் தாராளமாக உதவுகின்றனர். அங்கேயெல்லாம் பெண்ணுரிமை மேடைவரைதான். ஒரு சில இடங்களில் விடியலுக்கான ஒளி தென்பட்டாலும் கனத்த இருள் மூடிக்கொண்டுதான் கிடக்கிறது. இல்லாவிட்டால் ஒருவருக்கொருவர் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் அனுசரித்து உதவி வாழும் போது இப்படியொரு சிந்தனையும் பேச்சும், கேள்வியும் கிசுகிசுப்பும் இன்றும் கூட இடம்பெறுமா என்ன?........." தொடர்ந்து பேசிக்கொண்டிருந்த மஞ்சுளா இந்த பேச்சை நிறுத்தி "அதோ ராகவன் மாமா மாப்பிள்ளை போல் வேட்டி சட்டையில் வாறார்" என்று கூறிச் சிரித்தாள்.

அதற்குள் அருகில் வந்த ராகவன், "என்ன கோதையம்மா இன்னும் வெளிக்கிடல போல இருக்கே. ரெண்டு பொம்பிளைகள் சேர்ந்தால் நேரம் போறதே தெரியாதோ? சீக்கிரம் ரெடியாகுங்க". என்றதும்தான் அன்றைய நாள் ஆண்டு விழா கோதைக்கு நினைவுக்கு வந்தது. மஞ்சுளாவின் பேச்சால் ஓரளவு தெளிந்திருந்தாலும் உடனடியாக ராகவனுடன் சேர்ந்து போகும் அளவுக்கு கோதையின் மனது தெளியவில்லை. அதனால் அன்றைய பயணத்தை தவிர்க்க காரணம் தேடி சிந்தித்துக் கொண்டு, அவ்விடத்திலேயே தயங்கி நின்ற கோதையை கவனிக்காது "என்ன பிள்ளை நீரும் இண்டைக்கு எங்களோட வாரீரே..... சோதி பாட்டி, இராசதுரை தாத்தாட லவ் சீன் பார்க்கலாம்..... ரிகேசலே நல்லா இருந்திச்சு...." என்று மஞ்சுளாவுக்கு சொல்லிய ராகவன், சோதி அக்கா "ஹோம்"க்கு வந்த முதல் வரிசமும் சகுந்தலாவாக நடிச்சவாவாம். அப்ப நீங்களும் மூர்த்தி அண்ணாவும்தான் கௌரவ விருந்தினராக வந்திருந்தனீங்க எண்டு நேற்று ரிகேசல் பாக்க போனப்ப சோதியக்கா சொல்லி சந்தோசப்பட்டா" என்று கோதைக்கும் ஒரு தகவலையும் சொன்னார்.

இதை கேட்டதுமே கோதையின் முகத்திலிருந்து காணாமல் போயிருந்த மலர்ச்சி மீண்டும் எங்கிருந்தோ வந்து குடிகொள்ள, "ஓம் ஓம்...... அது நடந்து ஏழெட்டு வரிசம் இருக்கும். கிழவியெண்டாலும் மேடை ஏறிட்டா எண்டால் சோதி அக்காவுக்கு 18 வயது இளமை வந்திடும். சரி நீங்க கதைச்சு கொண்டு இருங்க 5 நிமிஷத்தில வெளிக்கிட்டு வாறேன்" என்று சொல்லி அங்கிருந்து சிரித்தபடி கிளம்பினாள் கோதை.

"இவவும் ஆக்களுக்கு உதவி செய்ய வெளிக்கிட்டால் குமரி மாதிரிதான்." என்று ராகவன் மஞ்சுளாவுக்கு சொல்வது கேட்டது. காதில் விழ கோதையின் சிரித்த முகம் இன்னும் பிரகாசமாகி ஒளிர்ந்தது......

மஞ்சுளா ஏதோ வேலை இருப்பதாகச் சொல்லிக் கிளம்பிவிட, ராகவனும் கோதையும் ஆண்டு விழாவுக்கு கிளம்பினார்கள், பழைய ஆண்டு விழாக்களின் நினைவுப் பகிர்தல்களின் மகிழ்வால் உள்ளத்தையும் சிரிப்பால் காரையும் நிறைத்துக்கொண்டு. ■

**பத்மா சோமகாந்தன்**




மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் 2015இல் முடிவுக்கு வரும்பொழுது அவைகளை பிரதியீடு செய்வது என்ன என்பது பற்றிய கலந்துரையாடல்களில் அடுத்த "புதிய" எண்ணக்கருவைத் தரும்படி அரசியல்வாதிகள் மற்றும் கருத்துரைஞர்கள் மீது ஒரு அழுத்தம் உள்ளது.

சமத்துவமின்மை மீது கவனம் செலுத்தாமையானது மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளின் ஒரு முக்கியமான போதாமையாக இருந்ததுடன்
உண்மையில் இது 2015க்கு பிந்திய நிகழ்ச்சி நிரலுக்கான ஒரு பெரிய முன்னுரிமையாகவும் மாறியுள்ளது. ஆனாலும் இந்த

# அபிவிருத்தி முன்னுரிமை என்பது பால்நிலை சமத்துவமே

பால்நிலை என்பது வெறுமனே பல சமத்துவமின்மைகளில் ஒன்றல்ல. ஆனால் அது எல்லா இடமும் ஊடுருவியிருப்பது என்பது எமது அடிப்படையான வாதமாகும்....

சமத்துவமின்மை பற்றிய கலந்துரையாடலானது பால்நிலை சமத்துவத்திற்கான சர்வதேச அர்ப்பணிப்பினைத் தரம் குறைக்கும் அல்லது தலைகீழாக்கும் ஒரு வழியில் பரிணாமம் பெற்று வருகிறது. வருமான சமனின்மையை அளவிடுவதற்கு புதிய வழிகளை வரைவு செய்வது வரவேற்கத்தக்கது. ஆனாலும் பால்நிலை மற்றும் சமூக சமத்துவமின்மைகளானவை இந்த அளவீடுகளுக்குள் வெளிப்படையாகக் காணப்படவில்லை.

சமூக சமத்துவமின்மைகளுக்குப் பெரும் அக்கறை அளிக்கப்படும் அதேவேளையில் வறுமையையும் புறக்கணிப்பையும் உருவாக்கும் பல சமத்துவமின்மைகளில் வெறுமனே ஒன்றாக பால்நிலையைக் கருதுவதானது கவலை அளிக்கும் போக்காக உள்ளது. தற்போதைய பால்நிலை சமத்துவ இலக்கினை பொதுவானதும் மற்றும் இதுவரைக்கும் வரைவிலக்கணம் செய்யப்படாததுமான சமத்துவமின்மை இலக்குகளுடன் மீள் பிரதியிடுவதற்கான ஒரு முன்மொழிவும் உள்ளது.

பால்நிலை என்பது வெறுமனே பல சமத்துவமின்மைகளில் ஒன்றல்ல. ஆனால் அது எல்லா இடமும் ஊடுருவியிருப்பது என்பது எமது அடிப்படையான வாதமாகும்..

முதலில் இது பெண்களை, எல்லா வருமான மட்டங்களிலும் மற்றும் தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள குழுக்களிலும் சாதி, இனம் மற்றும் இயலாமை என்பவற்றால் பாதிப்புறும்

நிலையில் உள்ள குழுக்களினுள்ளும் அவர்களை மேலும் பாதிப்புறும் நிலையில் வைக்கிறது.

இரண்டாவதாக எல்லா சமூகங்களிலும் பால்நிலையானது உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத்தின் சமூக உறவுகளின் நிறுவனமாக கட்டமைக்கப்படுகிறது. இதே வகையிலேயே வர்க்க சமத்துவமின்மைகள் முதலாளித்துவ சமூகங்களிலும் கட்டமைக்கப்படுவதுடன், தென்னாபிரிக்காவில் இன சமத்துவமின்மைகள், இந்தியாவில் சாதி சமத்துவமின்மைகளும் கட்டமைக்கப்படுகின்றன. உலகின் பல பாகங்களில் குடும்பத்திலும் சனசமூகத்திலும் நாளாந்த பணம் செலுத்தப்படாத, பராமரிப்பு வேலைகளில் ஆண்களும் பெண்களும் எடுக்கும் பொறுப்பில் குறிப்பிடத்தக்க சமத்துவமின்மை உள்ளது. அத்துடன் வளங்களை ஒன்று சேர்த்தல், ஊதியமுள்ள, ஊதியமற்ற அடிப்படைகளில் குடும்பத்திற்கும் சனசமூகத்திற்கும் பங்களிப்பு செய்தல், வளங்களை திரட்டுதலுக்கான அவர்களின் இயலுமை, இந்தப் பங்களிப்புக்களுக்காக கொடுக்கப்படும் பெறுமானம் மற்றும் அங்கீகாரம் அவர்களின் தன்னாற்றல் செயற்படுதல் ஆகியவற்றில் சமத்துவமின்மையே காணப்படுகிறது.

மூன்றாவதாக, பால்நிலை அசமத்துவத்தின் கட்டமைப்பு இயல்புகளை விளங்கிக் கொள்ளல் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அத்தியாவசியமாகும். பால்நிலை சமத்துவம் பற்றிப் பாரதூரமாக அக்கறை எடுக்கப்படும் நிலையில் சமூகத்தில் பரந்த வீச்சுடைய நன்மைகள் அதிகரிக்கின்றன. பால்நிலை சமத்துவம் கவனிக்கப்படாவிடின் இந்த நன்மைகள் இல்லாத நிலையில் இழப்புக்கள் ஏற்படுகின்றன.
வேலைவாய்ப்பிலும் கல்வியிலும் பெருமளவு பால்நிலை சமத்துவத்தைக் கொண்ட நாடுகள் உயர் வீதமான பொருளாதார வளர்ச்சியையும் மனித அபிவிருத்தியையும் கொண்டிருப்பதாக அறிக்கையிடப்படுவதை சமீப கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கு மறுதலையான உறவானது — அதாவது முறையான பொருளாதார வளர்ச்சி பால்நிலை

**பால்நிலையை ஒரு தெளிவான இலக்காக உள்ளடக்கத் தவறும் எந்தப் புதிய சட்டகமும், முன்னைய அர்ப்பணிப்புகளிலிருந்து கணிசமான அளவில் பின்வாங்குவதுடன், இப்பிரச்சினையானது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்ற தெளிவானதும் அபாயகரமானதுமான சமிக்ஞையை வழங்கும்.**

சமத்துவத்திற்கு பங்களிப்பு செய்கின்றது என்பது மிகவும் பலவீனமானதாகவும் நிலையான தன்மை குறைந்ததாகவும் உள்ளது.

பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலு ஆகியவை பற்றிய மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் எத்தகைய வரையறைகளைக் கொண்டிருந்த போதிலும் அர்ப்பணிப்பு உள்ள பால்நிலை இலக்கு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் பெண்கள் மட்டிலான தமது கடப்பாடுகளுக்கு அரசாங்கங்கள் பொறுப்புச் சொல்வதற்கான ஒரு பொறிமுறையாகவும், பால்நிலை சமத்துவம் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கான ஒரு பரிந்துரைப்பு கருவியாகவும், சமத்துவத்தால் அடையப்பெற்ற இலாபங்களை மறுதலையாக்குவதற்கு அச்சுறுத்தும் சக்திகளுக்கு எதிரான ஒரு பாதுகாப்புக் கோடாகவும், பால்நிலை தொடர்பாகப் பணியாற்றுவதற்கான நிதிகள் மற்றும் அளவீடுகளுக்கான ஒரு ஊக்கியாகவும், இப்பொறிமுறையானது இருக்க முடியும். பால்நிலையை ஒரு தெளிவான இலக்காக உள்ளடக்கத் தவறும் எந்தப் புதிய சட்டகமும், முன்னைய அர்ப்பணிப்புகளிலிருந்து கணிசமான அளவில் பின்வாங்குவதுடன்,

இப்பிரச்சினையானது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்ற தெளிவானதும் அபாயகரமானதுமான சமிக்ஞையை வழங்கும்.

பால்நிலையை 2015க்கு பிந்திய சட்டகத்தில் பிரதானப்படுத்துவது முக்கியமானதாக இருக்கும். அதேவேளையில் எல்லா இலக்குகளையும் போதிய அளவில் ஏனைய இலக்குகளின் கீழ் பொருத்திவிட முடியாது. உதாரணத்திற்கு கர்ப்பிணிகள் இறப்பு வீதமானது மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் விடயத்தில் முக்கியமானது. ஆனால் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு, வயதுக்கு முந்திய திருமணம், பெண்களுக்கு எதிரான வன்முறை, வீட்டில் சுகாதாரம் போன்றவற்றில் பணத்தைச் செலவழிப்பது பற்றிய தீர்மானங்களை எடுப்பதில் ஆண்களின் மேலாண்மை போன்ற பால்நிலை சமத்துவமின்மைக்கான ஆழமான காரணங்களில் கவனம் செலுத்துவதை விட, சுகாதார இலக்குத் தலையீடுகளின் கீழ் சேவை வழங்குவதிலேயே இது அதிக கவனம் செலுத்துகிறது.

முக்கிய இலக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது விவாதத்திற்கான பொருளாகும். ஆனால் இதுவரைக்குமான தீர்மானத்துடன் உடன்படுவதாகக் காணப்படும் அளவுகோல்கள் மீதே நாம் கவனம் செலுத்துவோம். இந்த இலக்கானது ஓரங்கட்டப்பட்ட பெண்கள் மற்றும் சிறுபிள்ளைகளின் முன்னுரிமைகளைப் பிரதிபலிக்க வேண்டும் பால்நிலை சமத்துவமின்மையின் கட்டமைப்பு ரீதியான காரணங்களை கவனத்திற்கு எடுக்க வேண்டும் தேசிய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் ஏனைய இலக்குகளின் கீழ் வைக்கப்பட முடியாத பிரச்சினைகளைத் தீர்க்கவும் வேண்டும். குறித்த விசேடித்த அநீதிகளிடையே வருவனவானவை, உலகம் பூராகவும் உள்ள பெண்கள் நிறுவனங்களால் தனித்த மிக முக்கியமான பிரச்சினை என இனங்காணப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறை, தாய்மார் சுகவாழ்வு உட்பட இனப்பெருக்க சுகாதார உரிமைகள், பொதுத்தளத்தில் பெண்கள் பங்குபற்றுகையை வரையறுப்பதில் ஒரு பெரும் காரணியாக உள்ள கூலி செலுத்தப்படாத பெண்களின் வேலைச்சுமைகள் ஆகியவை ஏனைய இலக்குகளில் நேர்த்தியாக விழாத, பால்நிலை தொடர்பான பிரத்தியேகமான அநீதிகளாக உள்ளன.


கட்டமைப்பு சமத்துவமின்மைகள் மீது ஒரு உருமாற்றத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கோரிக்கைகள் பின்வருவனவாகும். உற்பத்தி வளங்களும், வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களும் பெண்களுக்கு நியாயமான முறையில் சென்றடைவதை உறுதிப்படுத்துவதின் ஊடாக பெண்களைப் பொருளாதார ரீதியாக வலுவூட்டல், உள்ளூர், தேசிய சர்வதேச மட்டங்களில் பொது மற்றும் தனியார் துறைகளில் அவர்கள் முறைசார், முறைசாரா தீர்மானம் எடுக்கும் நிலைகளில் பெருமளவில் பிரதிநிதித்துவம் செய்வதை உறுதிப்படுத்துவதின் மூலம் அரசியல் ரீதியாக வலுவூட்டுதல் அத்துடன் பெண்களின் உரிமைகள் மற்றும் பால்நிலை நீதிக்காக தம்மை அர்ப்பணித்துள்ள நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதன் ஊடாக கூட்டாகக் குரல் எழுப்பும் அவர்களின் இயலுமையைப் பலப்படுத்திப் பெண்களை சமூக ரீதியில் வலுவூட்டுதல் ஆகும்.

பால்நிலை சமத்துவமின்மையின் கட்டமைப்புக் காரணங்களை தீர்க்காதுவிடின் முன்னேற்றமானது சமதையற்றதாகவும், மறுதலையாக மாறக்கூடியதாகவும் இருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் எமக்குக் கற்பித்துள்ளன. இப்பாடங்களைக் கைவிடுவதும், முன்னைய அர்ப்பணிப்புகளில் இருந்து பின்வாங்குவதும், அர்ப்பணிப்புடைய பால்நிலை இலக்கை அகற்றிவிட்டு அதே வேளையில் சமத்துவமின்மை என்ற எண்ணக்கருவை அரவணைப்பதானது கொடூரமானதும் தீங்கு நிறைந்ததுமான சிலேடையாக இருக்கும். ■

**நய்லா கபீர்**
**ஜெசிக்கா வுட்றோவ்**

மூலம் :
the guardian, Poverty Matters Blog

www.guardian.co.uk/global-development/poverty-matters/2013/may/14/gender-equality-development-priority/print




http://asiancorrespondent.com/94561/india-rape-sets-off-debate-over-womens-rights/

# பெண்கள்

## சாதிக்க வேண்டியவை இன்னும் எவ்வளவோ...


உண்மையான ஜனநாயகம் தொடர்பாகச் சிந்திக்கும்போது பெண்களின் பங்கேற்பின் ஊடாக மட்டும் அது பூரணத்துவம் பெறுகின்றதென ஒருபோதும் சிந்திக்க முடியாது. ஏதேனுமொரு தேர்தல் செயற்பாட்டின்போது விருப்பினைத் தெரிவிப்பதன் மூலமோ, தேர்தலில் வேட்பாளராக அல்லது பிரசார நடவடிக்கைகளில் பங்கேற்பதன் மூலமோ பூரணமான ஜனநாயகம் வந்துவிட்டதென அர்த்தப்படமாட்டாது. பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்ற வேளைகளிலும், அவர்களது சமூகத் தேவைகளைப் புறக்கணித்து அனைத்துப் படிநிலைகளிலும் நிறுவனங்களிலும் அவர்கள் இரண்டாம் பிரஜைகளாகக் கருதப்படுவதானது சம கால உலகில் வினவப்பட வேண்டிய ஒரு விடயத்தைப் போலவே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய சிக்கலாகவும் மாறியுள்ளது.

சட்டவாக்கத்துறையிலும், நிறைவேற்றுத் துறையிலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பெண்களின் மனித உரிமைகள் மீறப்படாத வகையிலும் அந்த உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற வகையிலுமான முறைகளையும் தரக்கட்டுப்பாடுகளையும் தாபிப்பதற்காகவும், அவை உரியவாறு நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதற்காகவும் வேலைத்திட்டமொன்று இருத்தல் வேண்டும். அதேவேளை, தேவை ஏற்படும் பட்சத்தில் அல்லது தமது உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அது தொடர்பாக பொறுப்பளிக்கும் நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்வதற்கான சுதந்திரமும் அவகாசமும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அது பாதிக்கப்பட்ட பெண்கள் சாதகமான முறையில் சட்ட நடவடிக்கைகளுக்குச் சென்று குற்றம் சாட்டப்பட்ட நபருக்குத் தண்டனை

வழங்கக்கூடிய வகையிலேயே வழங்கப்படுதல் வேண்டும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிறுவனங்களாகக் கருதப்படுகின்ற நிறுவனங்கள் ஒழுங்கான முறையில் அமுல்படவில்லையெனில் அல்லது தற்போதுகூட மாகாண ரீதியில் அல்லது பிரதேச ரீதியில் அல்லது மத்திய அரசாங்க மட்டத்தில் இவை தாபிக்கப்படவில்லையெனில் அதன் மூலம் தெட்டத் தெளிவாக எமக்கு வழங்கப்படும் செய்தி யாதெனில், பெண்களின் மனித உரிமைகள் மதிக்கப்படுவதானது ஆண்களின் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை விடக் குறைந்த மட்டத்தில் உள்ளதென்பதும், பாதுகாப்பு சம்பந்தமாகவும் நியாயமான சம்பளம், சொத்துக்களை அடைவதற்கு அவர்கள் கொண்டுள்ள உரிமை என்பன நடப்பு அரசாங்கத்தினால் கருத்திற் கொள்ளப்படவில்லையென்பதுமாகும். பெண்களின் பிரஜாவுரிமையின் பூரணமற்ற நிலையினையும், வலுவற்ற நிலைமையினையும் அது உறுதிப்படுத்துவதுடன், சம உரிமைகள் அல்லது சமத்துவம் தொடர்பான வகைப்பொறுப்பிலிருந்து அரசாங்கம் நழுவிச் செல்கின்றது என்பதும் உண்மையாகவே அதன்மூலம் தெளிவாகின்றது.

"சனநாயகம் வீட்டில் ஆரம்பித்து நாடு வரை பரவுகின்றது" என்பது சில காலங்களுக்கு முன்னர் பிரபல்யமாகவிருந்ததொரு கூற்றாகும். அது உண்மையானது. வீட்டில் அனுபவிக்கும் சுதந்திரம் மற்றும் சனநாயகம் என்பன நாடு பூராகவும் பரவிச் செல்லல் வேண்டும். இருப்பினும் வீட்டில், வீட்டு வன்முறைக்கு உள்ளாகும் ஒருவரால், தமது உரிமைகள் தொடர்பாக தமது வீட்டிலுள்ள ஆண்களிடம் அனுமதி, அங்கீகாரம் கோரும் பெண்களால் எந்தவோர் இடத்திலும் சனநாயம் தொடர்பாகப் பேசமுடியாது. இலங்கையிலுள்ள பெரும்பாலான பெண்களின் நிலைமை இதுவில்லையா?

பெரும்பாலான தெற்காசியப் பெண்களின் நிலைமையும் இதுவே எனக் கூறுவதில் தவறில்லை. உலகின் பல நாடுகளில் இந்த நிலைமை மாறிவருகின்றது. "ஐக்கிய நாடுகளின் பெண்கள்" அல்லது (UN Women), பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவற்காக மூன்று




புகைப்படம் - கிருசாந்த பெட்ரிக்ஸ்

**எந்தவொரு விவரணத்தின்போதும், தீர்மானங்களை வகுக்கும்போதும் பால்நிலை சமத்துவமின்மையும் சமநிலையற்ற தன்மையும் சனநாயகம் பூரணத்துவம் பெறாதிருப்பதற்குப் பாரிய அளவில் தாக்கம் ஏற்படுத்துகின்ற ஒரு பிரதான காரணியாகவும் தடையாகவும் அமைந்துள்ளது**

விடயங்களை மேலெழுப்பிக் காட்டுகின்றனர். அவையாவன, தெரிவு செய்தல், குரலெழுப்புதல் மற்றும் வகைப்பொறுப்புக்கூறல் என்பனவாகும் (Choice, Voice and Accountability). இதற்காக உலகம் முழுவதிலும் பாரிய அளவிலான விழிப்பூட்டல்கள் மற்றும் வலுவூட்டல்கள் என்பன மூலம் பெண்களின் ஆர்ப்பாட்ட இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவை பிரபல்யமடைவதற்கும், மக்கள் மயமாவதற்கும், சமூகமயமாவதற்கும் நடப்பு முறைகள் இடமளிப்பது மிகவும் அரிதாகவேயுள்ளது.

அதற்கான காரணம் ஆண் ஆதிக்க சமூக மனோபாவங்களைக் கொண்ட பெரும்பாலானோர் நாட்டை ஆட்சி புரிவதாகும். இந்த நிலைமைகளைப்

புரிந்துகொண்டும், தமது மனோபாவங்களை மாற்றிக்கொண்டும் பெரும்பாலான பாரம்பரிய மனோபாவங்களைக் கொண்டிருந்த நாடுகள் தமது பயணப்பாதையை மாற்றிக்கொண்டு வருகின்றன. ரியுனீசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளிலுள்ள சிவில் அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள் அந்த நாடுகளுக்கான அரசியலமைப்பு மாற்றங்களின் போது தமது முன்னுரிமைகளை இனங்கண்டு அந்த உரிமைகளை அடைந்துகொள்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையிலும் அத்தகைய மாற்றங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி கருத்தரங்குகளிலும் வலுவூட்டல்களிலும் ஈடுபட்ட சிவில் அமைப்புகளாகச் செயற்பட்டு வருகின்ற பல பெண்கள் அமைப்புகள் தேசிய மட்டத்தில் அறிக்கைகளைத் தயாரித்து அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் சமர்ப்பித்துள்ளன. உலகின் முதல் பெண்பிரதமர் இலங்கையிலிருந்து உருவானாலும் அவர் பிரதமராக இருக்கும்போதே அவரது மகள் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக உலக சாதனை படைத்தாலும் இன்னமும் நிறைவேற்றுத் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5% விஞ்சவில்லையெனில் அந்த நாட்டில் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக என்னதான் பேச முடியும்? அங்கு நிலவுகின்ற சனநாயகம்தான் என்ன? ஒட்டுமொத்த அரசியல் செயன்முறையினுள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்குமாறு அரச சார்பற்ற பெண்கள் அமைப்புகளும் சிவில் சமூக அமைப்புகளும் பல பிரேரணைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தாலும், அவை அரசியல் பிரமுகர்களினதும் கட்சித் தலைவர்களினதும் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்புடையதாகவோ முக்கியமானதாகவோ அமைவதில்லை. பிரதான ஓட்டத்திலுள்ள அரசியல் கட்சிகள் தேர்தல் காலப்பகுதிகளிலேனும் பெண்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு முன்னுரிமையளிப்பதில்லை. பெண்களின் பங்கேற்பு சம்பந்தமாகத் தீர்மானங்களையும் முடிவுகளையும் மேற்கொள்கின்ற சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்மையும், அவ்வாறு அவற்றில் பெண்கள் இடம்பெற்றாலும் அந்தப் பெண்கள்கூட அதன் முக்கியத்துவத்தை அறியாமை அல்லது அவர்களின் குரல் பலவீனமாக அழிவுற்றுச் செல்லல் அல்லது மேலெழாமை இடம்பெறுகின்றது.

அரசாங்கம் இடைக்கிடை ஒப்பமிட்டுள்ள சீடோ சமவாயம், பீஜிங் பிரகடனம், ஐக்கிய நாடுகளின் பெண், சமாதானம் மற்றும் பாதுகாப்புப் பற்றிய 1325 தீர்வுத் திட்டம் போன்ற ஆவணங்கள் எவ்வளவோ இருப்பினும் அவை பின்பற்றப்படுவதோ அவற்றுக்கு மதிப்பளிக்கப்படுவதோ அல்லது அவை ஏற்றுக்கொள்ளப்படுவதோ இல்லை. அனைத்தும் வெறுமனே ஆவணங்களாக மட்டும் வரையறுக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைவதன் மூலம் பாதுகாக்கப்படுகின்ற சனநாயகம் தான் என்ன? இங்கே நாங்கள் கேள்வி எழுப்புவதற்காகக் கொண்டுள்ள உரிமையும் பெண்களின் மனித உரிமையாகும்.

ஒட்டுமொத்த குடித்தொகையில் 53%மான பெண்கள் குடித்தொகையானது வாக்கு விகிசாரத்தைக் கணிக்கும் போது 56% ஆகவுள்ளது. இருப்பினும், இன்றைய இலங்கைப் பாராளுமன்றத்தில் உள்ள 225 பிரதிநிதிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 13 ஆகும். மாகாண சபைகளில் 4.9%மான பெண்களின் பங்கேற்பு பிரதேச சபைகளில் 1.9% மான குறைந்தளவு விகிதாசார மட்டத்தில் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தி, சனநாயம் மற்றும் சம உரிமைகள் அல்லது சமவாய்ப்புகள் இதன் மூலம் பிரதிபலிக்கின்றனவா? தேசிய அபிவிருத்தியின்போது பெண்களின் பங்கேற்பு மற்றும் அந்நியச் செலாவணியை ஈட்டும்போது பெண்களினால் மேற்கொள்ளப்படும் அர்ப்பணிப்பு மதிப்பிடப்படாமல் மதிப்பிறக்கம் செய்யப்படுவது நிர்வாகிகளினாலேயாகும் எனக் குறிப்பிடுவதற்குப் பெண்களுக்கு உரிமையும் சனநாயக சுதந்திரமும் உள்ளது.

இங்கு நினைவூட்ட வேண்டியதும் அதிகளவில் வலியுறுத்த வேண்டியதும் யாதெனில், அரசியல் செயன்முறையிலும் தீர்மானம் வகுக்கும் செயன்முறையிலும் சமநிலையற்ற மற்றும் குறைந்தளவிலான பங்கேற்பினை மேம்படுத்துவதற்காக சாதகமான சட்டங்களையும் கொள்கைகளையும் சமூகமயப்படுத்துவதன் முக்கியத்துவம் அரசுகளால் உணரப்படாமையாகும். பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்காக தேர்தல்கள் மறுசீரமைப்புப் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்காக சர்வகட்சிப் பாராளுமன்ற பெண்கள் அதிகார சபையானது சிறுவர் அபிவிருத்தி, மகளிர் வலுவூட்டல் அமைச்சுடனும் தேசிய மகளிர் குழு மற்றும் நாட்டிலுள்ள ஏனைய மகளிர் அமைப்புகளுடனும் இணைந்து செயற்பட்ட சந்தர்ப்பத்தில்கூட இந்த முன்மொழிவுகள் எதுவும் இறுதி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், பெண்களைப் பொறுத்தமட்டில் சனநாயகத்தினை யதார்த்தமாக மாற்றியமைக்க வேண்டுமானால் மூன்று அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென சர்வதேச கருத்தியல் ஏற்றுக்கொண்டுள்ளது. முதலாவது, பெண்கள் அரசியலில் உயிரோட்டமான வகையில் பங்கேற்பதிலுள்ள பிரதான தடைகள் அகற்றப்படுதல் வேண்டும். அவையாவன, நடமாடும் ஆற்றல், தகவல்களை அறிவதற்கான வாய்ப்புக்கள், பொருளாதாரத் தடைகள், பாதுகாப்பற்ற தன்மை, பெண்களுக்கெதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தல் என்பவற்றை முற்றுமுழுதாக சமூகக் கூட்டுத்தாபனத்திலிருந்து இல்லாதொழிப்பதாகும். இரண்டாவது, பங்கேற்பு மற்றும் குரல் எழுப்புதல் என்பன ஒன்றல்ல இரண்டு என்பதை சரிவரப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். பெண்களுக்குத் தமது உரிமைகள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் தொடர்பாக தமது குரலை பொதுத் தேவைகளுடன் இணைத்து எழுப்பக்கூடிய சுற்றுச்சூழல் உள்ளதா என்பதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.
அரசியல் கட்சிகளுக்குள்ளே எந்தளவு தூரத்துக்கு அல்லது ஆழத்துக்கு சனநாயகம் காணப்படுகின்றது? சிவில் சமூகத்திலுள்ள பெண்களின் பங்கேற்பு சட்ட இயற்றல் மற்றும் திருத்தச் செயன்முறையின்போதும் தேர்தல்கள் சட்டங்களைத் திருத்தும்போதும் பெறப்பட்டுள்ளதா? ஆர்ப்பாட்டச் செயற்பாடுகளின் போது போதுமானளவு பாதுகாப்பினைப் பெற்றுள்ளனரா? மூன்றாவது அல்லது இறுதியான விடயமாக சனநாயக நிறுவனங்கள் எவ்வளவு தூரம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வகைப்பொறுப்புக் கூறியுள்ளன? ஏதேனுமோர் அரசு அல்லது நிறுவனம் பெண்களின் பங்கேற்பினை நிராகரிக்குமானால், அதேவேளை, பெண்களின் குரலை அடக்குமானால், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கட்டுப்படாதிருக்குமானால் அந்த நிறுவனங்களில் சனநாயம் அமுல்படுத்தப்படுவதும் சனநாயகமெனக் கருதப்படுவதும் மக்களுள் அல்லது பிரஜைகளுள் அரைவாசியினர் மட்டுமேயாகும்.

எந்தவொரு விவரணத்தின்போதும், தீர்மானங்களை வகுக்கும்போதும் பால்நிலை சமத்துவமின்மையும் சமநிலையற்ற தன்மையும் சனநாயகம் பூரணத்துவம் பெறாதிருப்பதற்குப் பாரிய அளவில் தாக்கம் ஏற்படுத்துகின்ற ஒரு பிரதான காரணியாகவும் தடையாகவும் அமைந்துள்ளது. பெரும்பாலான நாடுகளில் நிறைவேற்றுத் துறையினுள் பெண்களின் பங்கேற்பு அளவுசார் ரீதியில் அதிகரித்து வருகின்றது. எனினும், உலகம் முழுவதிலும் உள்ள தற்போதைய அரசுகளில் அல்லது அரசாங்கங்களில் தலைவர்களாக 10% திற்கும் குறைவாகவே பெண்கள் உள்ளனர். பாராளுமன்றங்களில் 30 வீதமான பெண்களின் பிரதிநிதித்துவம் 30க்கும் குறைவான நாடுகளிலேயே காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படுகின்ற இடைவெளியை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பால்நிலை சமத்துவ மனோபாவத்தை ஒரு பொதுவான யதார்த்தமாக சரியான முறையில் சமூக மயப்படுத்துவதானது சனநாயகத்தை நிலைநிறுத்தும் பலமானதும் சக்திவாய்ந்ததுமான ஒரு தூணாகும்.

தேர்தல் காலப்பகுதிகளில் மட்டும் சனநாயகம் தொடர்பாகக் கலந்துரையாடாமல் அதற்கு அப்பால் சென்று இந்த நீதியான சமூகத் தேவைப்பாட்டினை ஒரு பொது விடயமாகக் கொண்டு நடைமுறை மரபுக்கு சற்று வித்தியாசமான சமூக, பொருளாதார, அரசியல் மனோபாவங்களை ஒரு பின்னலில் இடவேண்டியதற்கான காரணம் யாதெனில், பெண் பிள்ளைகளும் பெண்களும் அதனூடாகப் பயணித்து தமது உரிமைகள், தேவைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக அரச நிறுவனங்களுடன் பேரம்பேசும் ஆற்றலை கட்டாயம் பெறுவதற்காகவேயாகும். அதேவேளை, யுத்தத்திற்குப் பின்னரான ஒரு சூழலில் இன, மத பாகுபாடுகள் இன்றி இக்கருத்தியலை தொடர்பாடல் வலைப்பின்னல்களின் ஊடாகவும் பிரதான பிரவாகத்திலுள்ள தொடர்பாடல் ஊடகங்களின் வாயிலாகவும் வியாபிக்கச் செய்து பொதுக்கருத்தாக்கி சமூக வரவேற்பினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இப்பணியை மிகவும் வெற்றிகரமானதாக்கிக்கொள்வதற்காக பெண் ஊடகவியலாளர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் பிரதான பிரவாகங்களிலுள்ள ஊடகங்களில் இடவசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படுதல் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் யாதெனில், அதன் இறுதிப் பயனாளிகளாக இருப்பது இச்சமூகத்திலே அரைவாசிப் பகுதியினராகவுள்ள பெண்களும் சிறுமிகளும் என்பதாலாகும்.

எவ்வாறாயினும், கடந்த இரண்டரை தசாப்தங்களில் உலகம் முழுவதிலும் பெண்களின் அரசியல் பங்கேற்பில் புலப்பட்ட தேர்ச்சியானது அரசியல் விமர்சகர்களால் "சனநாயத்தின் மூன்றாம் அலை" என அழைக்கப்பட்டது. இதிலே அடிப்படையில் விழிப்பாக இருக்கவேண்டிய இரண்டு கேள்விகள் உள்ளன. முதலாவது, சனநாயக மயமாக்கல் செயன்முறையானது பெண்களுக்கான அணிதிரட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மீது எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகின்றது? என்பதாகும். இரண்டாவது, இந்த சனநாயக



http://www.bloomberg.com/news/2013-07-23/delhi-assaults-on-women-rise-as-verdict-due-in-fatal-rape-case.html

**இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தெற்காசிய வலயம் தொடக்கம் தென்னாபிரிக்கா வரை சம்பந்தப்பட்ட வலயங்களிலும் அரசுகளிலும் அரசியல் மற்றும் அபிவிருத்தி செயன்முறையில் பெண்களின் உயிரோட்டமான பங்கேற்பினை இழிவுபடுத்தி அகற்றிவிடமுடியாது.**

மயமாக்கல் செயன்முறையானது பெண்கள் இயக்கங்களுடனும் அவற்றின் நிகழ்ச்சி நிரல்களுடனும் எவ்வாறு இணைப்பது என்பதாகும். பிரதான அரசியல் கட்சிகள் அரசியல் துறையில் பெண்களின் வகிபங்கினை இழிவுபடுத்துவதானாலும் தரம் குறைப்பதனாலும் அரச சார்பற்ற பெண்கள் அமைப்புகளும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளும் இலங்கையில் மட்டுமன்றி பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் அரபு நாடுகளிலும் பெண்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களைப் பரந்தளவில் நிலமட்டத்திலிருந்து நடத்துகின்றன. இதன்காரணமாக அரசியல் துறையில் பெண்களின் பிரவேசத்திற்கும் பிரதிநிதித்துவத்திற்குமான இடவசதிகள் விரிவடைந்து வருவதைக் காணலாம். இந்த இடவசதிகளுக்கான நீளம், அகலம் மற்றும் உயரம், தடிப்பு என்பன சம்பந்தப்பட்ட சமூகச் சூழலில் வேரூன்றியுள்ள சமய, கலாசார

மற்றும் வரலாற்று ரீதியான காரணிகளின் அடிப்படையிலேயே உருவாகின்றதென்பதை எம்மால் மறக்கமுடியாது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தெற்காசிய வலயம் தொடக்கம் தென்னாபிரிக்கா வரை சம்பந்தப்பட்ட வலயங்களிலும் அரசுகளிலும் அரசியல் மற்றும் அபிவிருத்தி செயன்முறையில் பெண்களின் உயிரோட்டமான பங்கேற்பினை இழிவுபடுத்தி அகற்றிவிடமுடியாது. அந்த நாடுகளில் பெண்களால் வென்றெடுக்கப்பட்ட அரசியல் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அந்த நாடுகளில் பெரிய அளவில் இயங்கிவருகின்ற மகளிர் அமைப்புகளும் சிவில் சமூக அமைப்புகளும் அத்திவாரம் இட்டுள்ளன. அண்டைய நாடாகிய இந்தியாவினதும் நிலைமை இதுவேயாகும்.

கடந்த 15 வருட காலப்பகுதியில் சனநாயக ரீதியாக பால் பாகுபாடின்றி தீர்மானம் வகுத்தலை முறைசார்படுத்துவதற்காக இந்தியாவில் கிராமிய அரசியல் நிறுவனங்களாகக் கருதப்படுகின்ற "பஞ்சாயத்" ஊடாக அவற்றின் தலைமைத்துவத்தின் மூலம் ஒரு முறையியல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, அங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற கோட்டா முறையானது அரசியலில் பெண்களின் பங்கேற்பினை விரிவுபடுத்துவதற்காக நேரடியாகத் தாக்கம் ஏற்படுத்திய ஒரு விடயமாகும். இன்றுகூட இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் அமைந்துள்ள கிராமியப் பிரதேசங்களில் தந்தை வழி சமூக நிலைமைகள் ஆட்சி புரிவது வெளிப்படையான ஒரு விடயமாகும். அவற்றிலுள்ள ஆணாதிக்க மனோபாவங்களின் மூலம் பெண்கள் கூறிய கருத்துகளும் முன்மொழிவுகளும் நிராகரிக்கப்பட்டாலும் கோட்டா முறையின் மூலம் பெண்களின் பிரதிநிதித்துவம் மேற்படி நிறுவனங்களுக்குள் இருக்கும் பட்சத்தில் முழு கிராமத்துக்கே நலனை ஏற்படுத்தும் முன்மொழிவுகளை வெற்றியடையச் செய்யும் ஆற்றலானது நன்மையையே பெற்றுத்தரும். வாக்களிப்பதற்காக மட்டும் கரங்களைத் தூக்குவதன் பொருட்டு இருக்கின்ற வெறிதான மண்டைகள் மட்டும் பஞ்சாயத்தில் இருக்கின்றன என நான் ஒருபோதும் கருதவில்லை. பெண்களின் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் சனநாயக ரீதியான அரசியல் என்பன தொடர்பாக நல்ல அறிவுடன் கூடிய மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுவதற்கும் சிறந்த ஆற்றல்களைக் கொண்ட பெண்களும் இவற்றில் உள்ளார்கள். அடிமட்டத்திலிருந்து வருகை தந்து பிரச்சினைகளுடன் முட்டிமோதியும், செயற்பாட்டு ரீதியான அரசியல் மேடையில் பணியாற்றியும், எழுகின்ற முரண்பாடுகளை அடையாளம் கண்டும் அவள் பெறும் ஆற்றலானது பல்கலைக்கழகக் கல்வியைப் பார்க்கிலும் சக்தி வாய்ந்தது. அண்மையில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் இந்த விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன. அங்கு வெளிக்கொணரப்பட்ட மற்றுமொரு விடயம் யாதெனில், பஞ்சாயத் தலைமைத்துவத்தில் 1/3 பெண்களாக இருப்பதாகும். அதேவேளை, பெண்கள் தலைமைத்துவம் வகிக்கின்ற மற்றும் அதிக பங்கேற்பினைக் கொண்டுள்ள பெரும்பாலான அதிகாரப் பிரதேசங்களில் "குடிநீர்" தொடர்பாக முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளதுடன், குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பஞ்சாயத் சபையிலிருந்த ஒருவருக்கு மாநில அரசியலுக்கும் பின்னர் தேசிய மட்டத்தில் பாராளுமன்றத்திற்கும் பிரவேசிப்பதற்காக சனநாயகம் இடமளிக்குமானால், இலங்கையிலுள்ள எமக்கும் ஆகக்குறைந்தது பிரதேச சபைகளுக்கும் மாநகர சபைகளுக்கும் கோட்டா முறையொன்றைப் பெற்றுத்தருவது மிகவும் நியாயமான சனநாயக ரீதியான ஒரு கோரிக்கை என்பதை பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு நினைவூட்டலாம்.

ஏனைய பல நாடுகளில் இத்தகைய செயற்பாடுகளில் மகளிர் அமைப்புகளும் சிவில் சமூக அமைப்புகளும் உயிரோட்டமான பங்களிப்பினை நல்கி முன்னணி எடுத்திருந்தாலும் இலங்கை அரசாங்கங்களும் அரசியல் கட்சிகளும்கூட அரச சார்பற்ற பெண்கள் அமைப்புகளை சர்வதேச சதிகார சக்திகளாகவே கருதுகின்றன.

இப்போலியான மனோபாவத்தை எல்லா மகளிர் அமைப்புகளுக்கும் சுமத்த முடியாது. பெண்களின் அரசியல் பங்கேற்பின் முன்னேற்றம் சார்பாக பல மகளிர் அமைப்புகள் நாட்டில் மாகாண, பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் மேற்கொண்டுள்ள வலுவூட்டல் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பல. அரசியல் களத்தில் பல பெண்களை இறக்குவதற்கு பிரதான அரசியல் கட்சிகளின் மூலம் அவற்றை ஆராய்ந்து பெயர் நியமனங்கள் வழங்கப்படும்போது விதப்புரை செய்யப்பட்ட குழு தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்படுமானால் அவர்களுடைய அரசியலிலும் சனநாயக ரீதியான சட்டகம் உள்ளதென நாம் மகிழ்ச்சியடையலாம்.

இங்கே பெண்கள் குழுக்களுக்கு நினைவூட்ட வேண்டிய சில விடயங்களும் உள்ளன. தமது அமைப்பின் இலக்குகள், நோக்கங்கள், முன்னுரிமைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் என்பனவும் அவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் முறைகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றதென்பது உண்மையாகும். இருப்பினும், இத்தகையதொரு பொது நடவடிக்கையின்போது, பொதுத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் போது காணப்படுகின்ற கருத்து முரண்பாடுகளை இல்லாதொழித்து ஒற்றுமையாக, வலைப்பின்னலாக, பொதுவான நோக்கத்தை அடைந்துகொள்வதற்குக் கூட்டாக அரசாங்கத்திற்கும் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கும். அதேவேளை, தனிமைப்பட்ட அமைப்புகளாகவன்றி பலம்வாய்ந்த ஒரு குழுவாக அரசியல் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுப்பதற்கான புதிய முறைகளைத் தேடிச் செல்ல வேண்டுமானால் பெரும்பாலானவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற, பெண்கள் அமைப்புகளிலுள்ள பொது நோக்குடன் இணக்கப்பாடு கொண்டுள்ள பலம் பொருந்தியவர்களை இந்த இயக்கங்களுக்கு அழைத்துக்கொள்ளல் வேண்டும். அதேவேளை, இதன் ஊடாக நிறைவேற்றுத் துறையிலும் சட்டவாக்கத் துறையிலும் அரசியல் கட்சிகளுக்குள்ளும் சட்ட நிறுவனங்களிலும் நடப்பிலுள்ள முறையியலை மேற்பார்வை செய்வதற்காக மேற்பார்வைப் பொறிமுறையொன்றைத் தாபித்து நடைமுறைப்படுத்த வேண்டும். பிற நாடுகள் இத்தகைய பொறிமுறைகளின் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுள்ளன. நடைமுறையிலிருந்த அரசியல் அமைப்புகளில் பெண்களுக்கெதிரான பாகுபாடு தொடர்பான சட்டங்களைத் திருத்துவதற்காகவும் மீள எழுதுவதற்காகவும் இத்தகைய பொறிமுறைகளின் தலையீடு அழுத்தம் கொடுத்த சந்தர்ப்பங்களை உதாரணங்களாக எடுத்துக்காட்டலாம்.

இருப்பினும், இது சில நாடுகளில் அது வெற்றியளிக்கவில்லை. விவாகரத்துச் சட்டமானது ஆர்ஜென்ரீனாவில் நிறைவேற்றப்பட்டாலும் சிலி நாட்டில் அங்கீகரிக்கப்படவில்லை. எனினும், ஆர்ஜென்ரீனாவை விட சிலியில் உள்ள பெண்கள் அமைப்புகள் பலம்மிக்கவை. கருக்கலைப்புத் தொடர்பான சட்டமும் அந்த வகையிலேயே பல நாடுகளில் விவாதங்களுக்குக் காரணமாகி மத மற்றும் கலாசார தடைகளுக்கு மத்தியில் சனநாயகம் தொடர்பான வரைவிலக்கணங்களையும் பொருள்கோடல்களையும் சிதறச் செய்த வண்ணம் நிறைவேற்றப்படாமல் உள்ளன. "கூறுவது சுலபம் செய்வது கடினம்" என்பார்கள். கிட்டிய எதிர்காலத்தில் வருகின்ற வடக்கு மற்றும் வட கிழக்குத் தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கும் பங்கேற்பிற்கும் சனநாயக ரீதியாக நியாயம் நிறைவேற்றப்படுமா என நாம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. அதன்மூலம் ஏற்படக்கூடிய சாதகமான மாற்றங்களுடன் நாம் இது தொடர்பாக மேலதிகக் கலந்துரையாடலில் ஈடுபடலாமென எதிர்பார்க்கின்றேன்.■

**கலாநிதி புஷ்பா ரம்லனீ**

மூலங்கள்:
NY Times.com, UN Women website, economic blogs, சீடோ சமவாயத்தைப் பின்பற்றுதல், அவதானிப்பாளரின் கண்களால் - பெண்களும் ஊடகக் கூட்டமைப்பும், கிராமத்து அரசாங்கத்தில் அவளது சவால் - பெண்கள் அபிவிருத்தி மையம்.